உ

கடவுள் துணை

வித்தியாரணிய சுவாமிகள்

அருளிச்செய்த

பஞ்சதசபிரகரணம்

கொன்றைமாநகரம்.

மஹாராஜராஜஸ்ரீ

முருகப்பமுதலியார் குமாரர்

அருணாசலமுதலியார்

கேட்டுக்கொண்டபடி

மதுரை புதுவை சென்னை இச்சங்கங்களில்

தமிழ்த்தலைமைப்புலமைநடாத்திய

களத்தூர்

வேதகிரிமுதலியாரால்

பரிசோதிக்கப்பட்டு

திண்டிக்கல்

முத்துவீரப்பிள்ளையவர்களால்

இலக்கணக்களஞ்சிய

அச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டது

மேற்படி

முதலியார்குமாரர்கள்

ஆறுமுகமுதலியாராலும்

கந்தசாமிமுதலியாராலும்

நிறைவேற்றப்பட்டது.

உ

பஞ்சதசப்பிரகரணம்.

முதலாவதுபஞ்சகம்.

சித்திரதீபிகை.

வித்தியாரண்ணிய சுவாமிகள் உலோகாநுக்கிரகநிமித்தியஞ் சகலவேதாந்தத்தினுடைய பொருளெல்லா மனதிலேசேகரித்துக்கொண்டு சகலவேதாந்தமெல்லா மதிகரிக்கமாட்டாத பேருக்கு அதனுண்மை தெளிந்தறிய வேதாந்தத்தினுடைய வுண்மைட்பொருளைக் கண்டநுபவிக்கும்படி பிர்ம்மாநுபவத்தை வெளிப்பண்ணவேண்டுமென்று அத்தியாரோப அபவாதமென்கின்றஇரண்டுநியாயத்தையுந் தழுவிக்கொண்டு சொல்கிறார்

பரமாத்மாவினிடத்திலே ஆரோபிக்கப்பட்டிருக்கின்ற செகத்தினுடைய இலட்சணஞ் சித்திரமேயல்லாமல் உண்மையல்லவென்கின்றதைச் சித்திரபடதிட்டாந்த முன்னிலையாக வெளிப்பண்ணிப்புடைவியினிடத்தில் சித்திரமாரோபிக்கப்பட்டாற்போலப் பரமாத்மாவாயிருக்கின்ற தன்னிடத்திலே சீவன்செகத்தீசுரனென்னப்பட்டசித்திரமுமாரோபிக்கப்பட்டதென்றறிக.(க)

சித்திரபடந் தானேதானாய் இருந்தால் வெளுத்தபடமென்றுங் கஞ்சிபூசிவிட்டால் பசைப்படமென்றுங் கரியாலே சித்திரம் அச்சுக்கட்டினால் இலாஞ்சினபடமென்றும் வன்னமடைந்துதீர்ந்தா லிரஞ்சிதபடமென்றுங் கண்டாற்போலிந்தப் பரமாத்மாவுக்கு நாலவத்தையேது அதற்குஉபாதியேதென்கிறசங்கைக்கு.

பரமாத்மா வொருவுபாதியுமற்றுத் தாமா யிருக்கும்போது சித்தென்று மாயையினுடனேகூடினால் அந்தரியாமியென்றுஞ் சமஷ்டி சூக்ஷும பூத சூக்ஷுமசரீரங்களுடனே கூடினால் இரணியகருப்பனென்றுஞ் சமஷ்டி ஸ்தூலபூத தேகத்துடனே கூடினால் விராட்புருஷனென்றுஞ் சொல்லப்படுமென்றுத்தரம். (உ)

பரமாத்மாவே சித்திரபடமானால் அதைப்பற்றின ரூபங்களின் சித்திரபேதங்களேதென்கின்றசங்கைக்கு.

பிர்ம்மாதி * தம்பபரியந்தம் உத்தமமத்திம மதர்ம்மாய்க்காண்பிக்கின்றபிராணிகளுமலையாறுகோபுரமுதலான சடங்குகளுஞ் சுபாவ சைதந்நியத்தினிடத்தில் மாயையாகின்ற வன்னத்தினாற் கற்பிக்கப்பட்ட சித்திரமென்றேயுத்தரம். (௩)

---

* தம்பம் - [illegible]

இதுவே சித்திரமானால் சேதனமசேதனமென் றிருவகும் பாய்ப்பார்ப்பானேனென்கின்றசங்கைக்கு.

படத்தில் சித்திரசரீரங்களின்மேலேயமைந்தவஸ்திர ஆபரணமெழுதியிருக்கின்றதுபோலச் சைதந்நியசித்திரத்தில்பிராணிகள்மாத்திரஞ் சிதாபாசராய்க்கற்பிக்கப்பட்டால் அவர்கள் சச்சாத்சைதந்நியருமல்லவென்றே உத்தரம். (௪)

மலைபாறை கோபுரமுதலானவைகளுக்குஞ் சிதாபாசனே யில்லையேனென்கின்றசங்கைக்கு.

சித்திரத்தாற் பரவதமுதலானவைகளுக்கு வஸ்திராபரணந் தேவையற்றதுபோலச் சிருஷ்டியிலகப்பட்ட மண்முதலானவைகளுக்குஞ் சித்திராபாசனைத் தேவையில்லையென் றுத்தரம். (௫)

பிராணிகள்மாத்திரத்திற் சிதாபாசகற்பனைக்குப் பிரயோசனம் ஏதென்கின்றசங்கைக்கு.

நால்வகையோனி சரீரங்களையடைந்து சனனமரணாதி சம்சார நிருபவிக்கின்றதே பிரயோசனமென் றுத்தரம். (௬)

இப்படிச் சிதாபாசனுக்குச் சம்சாரமானுற் சகலவாதிகளுமிலெவகோ மாத்மாவுக்கே சம்சாரமென்றுசொல்லக்காரியமேதெனின்கின்ற சங்கைக்கு.

ஆபாசப்புடைவையின் வன்னத்தை யதிஷ்டானப் புடைவையின் வன்னமாகச் சொல்கின்றதுபோல ஆபாசம் சம்சாரத்தை யதிஷ்டானத்தினிடத்திற் சுமத்துகின்றதற்கு அக்கியானமே காரணமென் றுத்தரம். (௭)

அந்த அக்கியானத்திற்கு இலக்ஷணமேதென்கின்றசங்கைக்கு

தன்னிடத்திற் கற்பிக்கப்பட்ட சிதாபாசனுடைய சம்சாரத்தைத் தன்னுடைய சுபாவமாக வெண்ணுகின்ற மயக்கமே யக்கியானமென் றுத்தரம். (௮)

அந்த அக்கியானத்தைப் போக்குகிறதற்கு உபாயமேதென்கின்றசங்கைக்கு.

தனக்கொருக்காலுஞ் சம்சாரமில்லை சம்சாரமுஞ் சம்சாரியுங் கற்பிதமென்கின்ற விசாரஞானத்தினு லுண்டானவிவேகமே அக்கியானத்தைத் தீர்க்கிறதற்கு உபாயமென் றுத்தரம். (௯)

அந்தவுபாயமேதுசெய்தால் வருமென்கின்றசங்கைக்கு

சிலவு செலுத்தும் பரமார்த்தர்களுக்குரிய ஸ்ரீ குருசந்நிதானத்திற் பலப்பட்டிசாதிக்கவேண்டியபோது விவேகம் வருமென் றுத்தரம். (௰)

மோட்சானந்தத்தைப் பலமாக மிஞ்சப்போகின்ற பரமாத்மாவையே விசாரிக்கும் வஸ்துமல்லாமல்-வத்தியாபுத்திரனைப்போ

யிருக்கின்ற சீவனையுஞ் செகத்தையும் விசாரிக்கக் காரியமேதெ ன்னின்றசங்கைக்கு.

ஏகசுபாவமாயிருக்கின்ற பரமாத்மாவினிடத்திலே ஒருவி சாரமுமில்லை விசாரமெல்லாஞ் சீவன் செகத்துக்களிலேதானே றுண்மையாக விசாரிக்கில் இருவகையும் வாதிக்கப்பட்டவுடனே பரமாத்மாவே தானாக மிஞ்சுமென்றுத்தரம். (௰௧)

விசாரித்த ஞானிகட்குச் சீவன் செகத்து வாதிக்கப்பட்டா ல் திரும்பவும் விவகாரந்தோன்றுவானேனென்கின்றசங்கைக்கு.

சுழுத்தியிற் சீவன் செகத்துத் தோற்றமலிருக்கையில் முத் தியில்லாமலிருக்கையினாலே தோற்றமற்போகின்றது வாதைய ல்ல விந்தவிருவகையு மித்தையென்கின்ற நிச்சயமே வாதையெ ன்றுத்தரம். (௰௨)

இந்த விருவகையுந் தோற்றுமானால் - பரமாத்மாமாத்திர மிஞ்சப்போகின்றதெப்படியென்கின்ற சங்கைக்கு.

பரமாத்மாமாத்திர மழிவற்ற வுண்மைப்பொருளென்கின் ற நிச்சயமே மிஞ்சுகின்றது செகத்து மறைகின்றதல்ல செகத்தி ல்லாதிருந்தாற் சீவன்முத்திகூடாதென்றுத்தரம். (௰௩)

இந்த மூன்றுவகையு மெத்தனைகாலம் விசாரிக்கவேண்டு மென்கின்ற சங்கைக்கு.

விசாரத்தினாலேவந்த ஞானம் பரோட்சக்கியானமென்று ம் - அபரோட்சக்கியானமென்றும் - இருவகையாக விருக்குமிவ ற்றில் அபரோட்சக்கியானம் வந்தால் விசாரத்திற்கு முடிவென் றுத்தரம். (௰௪)

இந்த விருவகை ஞானத்திற்கு மிலக்ஷணமேதென்கின்ற சங்கைக்கு.

பிரமமொன்றுண்டென்கின்றது பரோக்ஷக்கியானம் - தா னேயந்தப் பிரமமென்கின்றதுணிவு-அபரோட்சக்கியானமென் றுத்தரம். (௰௫)

இந்த அபரோட்சக்கியானத்தைவருவிக்கின்றவிசாரமேதெ ன்கின்ற சங்கைக்கு.

கடாகாச மகாகாசம் சலாகாச மேகாகாசம்போலக் கூடத் தனையும் பிரமத்தையுஞ் சீவனையு மீசுவரனையும் பகுத்தறிகின்ற தே விசாரமென்றுத்தரம். (௰௬)

கடாகாசமு மகாகாசமுங் கண்டோம் சலாகாசத்திற்கு மே காகாசத்திற்கும்இலக்ஷணமேதென்கின்றசங்கைக்கு.

நிர்விகாரமாகவிருக்கின்ற அதிஷ்டானசைதந்நியமேசரீ ரத்தில் வளைபட்டது கூடஸ்தமென்றும் மற்றதுபிரமமென்றுஞ் சொல்லப்படுங் கூடஸ்தனிடத்திற் கற்பிதமான அந்தக்கரண பிர

பிம்பனே சீவனென்றும் பிரமத்திற் கற்பிதமான மாயாபிரதி பிம்பனே யீசுவரனென்றும் உத்தரம். (௰௮)

சரீரத்தில் நானென்று விவகரிக்கின்ற சீவனைத்தவிர வேறே கூடஸ்தனெங்கேயென்கின்ற சங்கைக்கு.

சலாகாசத்திற் கடாகாச மறைபட்டாற்போலச் சீவனாலே கூடஸ்தனுமறைபட்டு இரண்டுமொன்றாகத் தோற்றுகின்றதென்றுத்தரம். (௰௯)

இந்தச் சீவன் கூடஸ்தனை யென்பகுத்து அறியவில்லையோ வென்கின்ற சங்கைக்கு இதுவே மூலாஞ்ஞானமென்றுத்தரம். (௨௰)

இந்த மூலாஞ்ஞானமாகின்ற அவித்தையெத்தனைவிதமாக விருக்குமென்கின்ற சங்கைக்கு.

ஆவரணமென்றும் விக்ஷேபமென்று மிரண்டுவிதமாக விருக்குமென்றுத்தரம். (௨௧)

இந்த விருவகைக்கு மிலக்ஷணமேதென்கின்ற சங்கைக்கு—

நான் கூடஸ்தனைக்காணேனென்கின்றது அறிவாகவிருந்துங் கூடஸ்தனைத்தோற்றவில்லையென்கின்ற மயக்கமேயாவரணம்— கிளிஞ்சிலை வெள்ளியென்று பார்க்கின்றாற்போலச் சுபாவசைதந்நியமாக விருக்கின்ற தன்னைக் கற்பிதமாயிருக்கின்ற அகங்காரியாய்க்காண்கின்றதே விக்ஷேபமென்றுத்தரம். (௨௨)

ஆதித்தனிடத்திலே இருட்டிராததுபோலச் சுயம்பிரகாசமாக விருக்கின்ற வாத்மாவினிடத்தில் அப்பிரகாசமாக விருக்கின்ற வஞ்ஞானம்வரக்கணக்கில்லையே இது நமக்குச்சம்மதமானா லக்கியலகாரியமான ஆவரணமெப்படிவந்தது. இதுவுமில்லையானா லாவரணத்தைப் போக்குகின்ற வேதாந்தத்தைப் படிக்கவுங் கணக்கில்லையென்கின்ற சங்கைக்கு.

நானஞ்ஞானியென்கின்ற அநுபவஞ் சடத்தினிடத்திலே காணப்படாமற் சித்தினிடத்திலே காண்பிக்கின்றதிட்டாந்தமே யுத்தரம். (௨௩)

அநுபவங்கண்டாலும் யுத்திகூடாதென்கின்ற சங்கைக்கு.

திட்டாந்தமாய்க் கண்டகாரியத்திற்கு யுத்தி தேவையில்லை— காணாதகாரியத்திற்கு யுத்திவேண்டுமென்றுத்தரம். (௨௪)

தருக்கவினியாயம்போலச் சிந்தித்தாலல்லவோ புத்தியிலே திடப்படுமென்கின்ற சங்கைக்கு.

சுபாநுபவத்தைக்கடந்த சங்கைக்கலாகாது ஆகையினாற் கூடஸ்தருக்கும் அஞ்ஞானத்திற்கும் விரோதமில்லைக் கூடியிருக்கலாமென்றுத்தரம். (௨௫)

இந்தவஞ்ஞானத்தைத் தள்ளுகின்றவிரோதியேது அதுவெவ் வகைகளென்னவென்கின்றசங்கைக்கு

சாஸ்திரவிசாரக்கியானமேயஞ்ஞானத்திற்குவிரோதியின ஞானிகளிடத்திலேகாணலாமென்றுத்தரம் (உசு)

விட்சேபமென்னப்பட்டவகங்காரியாவதாரிவனெறிறுற்கற்பிக்கப்பட்டான் இவனுக்கு அதிட்டானமேதென்கின்ற சங்கைக்கு.

காரியகாரணசரீரத்தையுடைத்தான சைதந்நியமே யகங்காரி யஞ்ஞானகாரியமான விட்சேபத்தினுற் கற்பிக்கப்பட்டான் இவனுக்குஅதிட்டானங்கூடத்தர்சைதந்நியமென்றுத்தரம் (உஎ)

இப்படிக் கற்பிதமாயிருக்கின்ற வகங்காரிக்குஞ் சுபாவமாயிருக்கின்ற தனக்குஞ் - சுபாவசித்தமாயிருக்கின்ற பேதமெப்படிப் பிராந்திசித்தமாயிருக்கின்ற அபேதமெப்படியென்கின்ற சங்கைக்கு.

ஈதென்னப்பட்ட வதிட்டானங் கிளிஞ்சிலுண்மை வெள்ளியென்கின்ற வாரோபமித்தையென்கின்றதுபோலச் சுபாவசித்தபேதமிது வெள்ளியென்கின்ற வொருமைமயக்கம்போலநான் தானென்கின்றவொருமைமயக்கமேபிராந்திசித்தமாயிருக்கின்ற அபேதமென்றுத்தரம். (உஅ)

ஈதென்கின்ற சாமானியம்போலவும் வெள்ளியென்கின்ற விசேஷம்போலவு மாத்மாவு மகங்காரியு மெங்குங் காண்பிக்கவில்லையென்கின்ற சங்கைக்கு.

தேவதத்தன் தான்போனவன் எக்கியதத்தன் தான்கண்டவன் நீதான் சொன்னவன் நான்தான் கேட்டவனென்கின்ற விவகாரத்தினாலே இது வெள்ளி-இது புடைவை - இது கடமென்கின்றதுபோலச் சாமானியவிசேஷமிரண்டுங் காண்பிக்கிறதென்றுத்தரம். (உகூ)

இந்தப் பேதக்கியானத்தினாலுமக்குப் பிரயோசனமேதென்கின்ற சங்கைக்கு.

தானென்கின்ற சொல்லுக் கர்த்தம் நானென்கின்ற வகங்காரிக் கன்னியனானகூடஸ்தனென்றேசித்தாந்தமென்றுத்தரம். (௩0)

கடந்தான் படந்தான் கோபுரந்தானென்னு மிடத்தில் அசேதனத்தினிடத்திலே தானென்கின்ற சொல் வரலாமோவென்கின்றசங்கைக்கு.

சிதாபாசனில்லாத படியினாற் கடமென்று சொல்லப்பட்ட கடபடாதிகளுஞ் சிதாபாசனுண்டானபடியினாற் சேதனமென்றுகாண்பித்த பிரம்மாதி தம்பபரியந்தமான பிராணிகளு மாத்மா வொருவரிடத்திலே இருவகை கற்பிதங்க ளானபடியினாலே யெல்லாவற்றிலுந் தானென்று வழங்குகின்ற சொல் எங்கு மாத்

மாவுண்டென்கிறதைக் காட்டுகின்றது ஆகையால் தானென்கின்றசொல் எங்கும்வரலாமென்றுத்தரம். (௫௧)

தானென்கின்றசொற்போல வது விது வென்கின்ற சொல்லும் எல்லாவற்றிலுஞ் சாமானியமாக விருக்கையினு லிவைகளு மாத்மாவாகட்டுமென்கின்ற சங்கைக்கு.

இது வது வென்கின்றசொல் நல்லது பொல்லாதென்கின்ற சொற்போலப்படிபாதியிலே சாமானியங் கண்டதேயல்லாமல் முற்றுங் காண்பிக்கவில்லை ஆகையினால் இதுதானதுதா னல்லது தான் பொல்லாதுதான் என்று சருவத்திரசாமானியமாய்த் தோன்றுகின்றதுதானே யாத்மாவென்று மிக்கவிசேஷமெல்லா மாயாகற்பிதமென்றுஞ் சித்தாந்தமென்றுத்தரம். (௫௨)

இது எல்லாருக்கு மேன்தெரியவில்லையென்கின்றசங்கைக்கு.

முன் சொன்ன லக்ஷியானத்தினால் தாதாத்மிய வத்தியாசத்தை யடைந்த வஞ்ஞானிகள் சாமானியவிசேஷம் வேட்டவெளியாய்வேறுபட்டிருக்கிறு மொன்றாய்க்கண்டார்களென்றுத்தரம்.

இந்த வத்தியாச மெப்படிப்போமென்கிற சங்கைக்கு.

விசாரக்கியானத்தினு லக்ஷியானமுமாவரணமும் போமென்று முன்சொன்னதேயுத்தரம். (௫௪)

இந்த ஞானிக்குக் காரணமானவஞ்ஞானம்போகியுங் காரியமான விட்சேபமிருப்பானேனென்கின்ற சங்கைக்கு.

விட்சேபத்திற்குக்காரணம் அஞ்ஞானமென்றுங் கன்மமென்றுமிருவகுப்பு அவற்றிலஞ்ஞானம்நசித்துங்கன்மம்நசியாதபடியினாற் பிராரத்துவ கன்மநீ துலையும்பரியந்தமுமிருக்குமென்றுத்தரம். (௫௫)

காரணநட்டமாகியுங் காரியமிருக்குமென்கின்றது நியாயமல்லவென்கின்ற சங்கைக்கு.

உங்கள் தர்க்கமதத்திலேகாரணம்நட்டமாயுங் காரியம்சற்றுப்போதிருக்குமென்றதுநமக்குஞ்சரியல்லவோவென்றுத்தரம்௫௬

அப்படியானாலுங் காரணத்திற்குப்பின் காரியஞ் சற்றுநேரமல்லவாவிருக்கவேண்டும் ஒருபுருஷராயி சுள்ளமட்டு மிருக்குமென்கின்றது கூடாதென்கின்ற சங்கைக்கு.

இரண்டொரு நாளிலுண்டான காரணத்திரவிய மென்னப்பட்ட நூல் வெந்து மொருசாமங் காரியதாமசமுண்டென்றால் அனந்தங்கற்பத்திற்றொடருகின்றவஞ்ஞானப்பிராந்திநட்டமாயும் அதின்காரியமான விட்சேபம் பிராரத்துவத்துடனேபோமென்றது சுருக்கமல்லாமல்விஸ்தாரமல்லவென்றுத்தரம். (௫௭)

இப்படித் தர்க்கிக்கின்றதேயல்லாமற்பிரமாணமில்லையோவென்கின்ற சங்கைக்கு.

தர்க்கமும் உங்கள்மதத்திலேயல்லாமல் நமக்குச்சுருதியுத்தி யநுபவமூன்று முண்டென்று உத்தரம். (௩௮)

தார்க்கியதர்க்கம்போதும் சித்தாந்தமேதென்கின்றசங்கைக்கு.

அஞ்ஞானிகள் தாந்தாமென்கின்ற விருவனையுமொருவனுக்கண்டு கலங்கிச் சஞ்சாரத்தி லடிபடுவனென்று மிருவனையும் வேதாந்தஞானிகள் பகுத்தறிந்து முத்தராவார்களென்றுஞ் சித்தாந்தமென்றுத்தரம். (௩௯)

வேதாந்தமல்லாத சாத்திரத்தினாலே முத்தியில்லையோவென்கின்ற சங்கைக்கு.

பிறசாத்திரமெல்லாம் பிராந்தாளாலே பண்ணப்பட்ட சாத்திரமானபடியினாற் கலக்கத்தின்மேற் கலக்கமாய்க் குழப்புமல்லாமல் பிராந்தியைத் தெளிவிக்கமாட்டாதென்றுத்தரம் (௪௰)

இன்னவின்ன சாத்திரகர்த்தாக்களின்னவின்னதைப் பொருளென்று கலங்கினார்களென்றதையு மிவர்களுக்குப் பரம்பரையாய்த் தெளிவுவரும் வழியையு மின்னபடியென்று பகுத்துச் சொல்லவேண்டுமென்கின்ற சங்கைக்கு.

பாமரர்களும் உலோகாயுதர்களும் விலோசன சித்தாந்தயுத்தியினால் தூலசரீரமே ஆத்மா வென்பார்கள் சார்வாகன்சீவன் போனவுடனே சரீரமரித்துப்போகின்றபடியினாலும் நான் கண்டேன் கேட்டேனென்கிற புத்தியினாலுந் தேகமாத்மாவல்ல விந்திரியமேயாத்மாவென்பன் மற்றொருசாருவாகன்பிராணன்போனு லிந்திரியங்களிராதபடியினாற் பிராணனேயாத்மாவென்பன் உபாசகன் மனமில்லாதபோது பிராணன் தெரியாதபடியினால் மனமே யாத்மாவென்பன் சணிகவாதி புத்தியில்லாதிருந்தால் மனஞ் சலிக்கின்றபடியினால் புத்தியேயாத்மாவென்பன் பௌத்தன் சுழுத்தியிலே புத்திமுதலாக வொன்றுங் காணாதபடியினா லாத்மா சூனியமென்பன் - பட்டாசாரியன் சுழுத்தியிலே சூனியமாகவிருந்ததென்று கண்டு சொல்லவருகின்றபடியினாலாத்மா சடசித்தென்பன் - அந்தராளருமாகமக்காரருஞ் சூட்சும நாடி வழியிற் சஞ்சரிக்கின்றபடியினா லாத்மாவணுவென்பார்கள்-திகம்பரர் பாதமத்தகபரியந்த மறிவுகலந்திருக்கின்றபடியினா லாத்மாபுருஷப்பிரமாணமென்பர் பிரவாகனுந் தார்க்கிகனுமாத்மாப்பரிச்சின்னமாகவிருந்தா லழிந்துபோமென்றும் பரிபூரணமாய்ச் சடமாயிருக்குமென்பர்கள் - பாட்டன்சுழுத்தியிற் சடமாயுஞ் சாக்கிரத்தி லறிவாயுங்காண்கின்றபடியினா லாத்மா சடசித்தென்பன் சாங்கியன் பரிபூரணத்திற் கிரண்டுலட்சணங்கூடாதபடியா லாத்மாசித்தாய்ப் பரிபூரணமாகவிருக்குஞ் சுழுத்தியி

ற்காண்பிக்கின்ற சட மற்றவாத்மாக்கட்குச் சகாயக்கங் கொடுக்க வற்ற பிரகிருதியென்பன் யோகி பிரகிருதி நியந்தாவில்லாமற் சேட்டிக்கமாட்டாதென்று அடக்கியாளுவன் . இல்லாதிருந்தா லாத்மாக்கட்குப் பந்தமோட்ச மில்லையென்ற படியினாலும் - இந்த வாத்மாக்களைத்தவிர ஈசுவரனொருவனுண்டென்பன் பதஞ்சலியென் அசங்க சைதந்நியமே யீசரனானா லெல்லாரையு மடக்கி யாளமாட்டான் ஈசுவரன் அந்தரியாமியென்பன் தார்க்கிகன் அந்தக்கரண மில்லாவிட்டாற் சங்கற்பங்கூடாதாகையினாலிர ணியகர்ப்பனே யீசுவரனென்பன் - விசுவரூபம் தூலசரீரம்இவற்றைவிட்டுச் சூட்சுமசரீரந் தனியேயில்லை கிருஷ்ணன் விசுவரூபங்காட்டுகின்றபோது எங்குங் காலெங்குங் கையாகக்காட்டின படியினாலும் விராட்புருஷனே யீசுவரனென்பன் - பிரசாபத்தியின் எங்குங்கால் எங்குங்கையாக விருக்கின்றதே யீசுவரனானால் மற்றவர்களை யீசுவரனாகவேண்டு மாகையினாற் பிரம்மாவே யீசுவரனென்பன் - விஷ்ணுமதத்தாரும் பாகவதாளு மிந்தப்பிரமாவும் விஷ்ணுவினுடைய நாபிக்கமலத்திலே பிறந்தபடியினால் விஷ்ணுவே யீசுவரனென்பார்கள் - சைவாகமம் சிவனுடையபாதம் விஷ்ணுவினாலுங் காணாதபடியினாலே சிவனே யீசுவரனென்பார்கள் - கணபத்தியன் திரிபுரசங்காரம் பண்ணப்போகின்றபோது சிவனுங் கணபதியைப் பூசைபண்ணினபடியினாலே விக்கினேசுவரனே யீசுரனென்பன் - புராணிகர் இப்போது சொல்லப்பட்ட தேவதைகளெல்லாம் புண்ணியஸ்தலங்களிடமாக விளங்குகையினாலத்தலங்களே யீசுவரனென்பர் - கன்மசாத்திரன் ஸ்தலங்களு மரங்களினால் விளங்குகையினாலு மூங்கில் அரசு எருக்கு முதலானவைகளை யவரவர்க்குத்தேவதையாய்ப் பூசைபண்ணுகையினாலு மரங்களே யீசுவரனென்பன் இன்னமு மிப்படி யநேக மதவாதிகள் தங்கள் தங்கள் மதாபிமானத்தினாலே மந்திரவாதம் இரசவாத முதலான சாஸ்திரங்களைத் தொடுத்துக்கொண்டலைந்தார்கள் அப்படி யஞ்ஞான சாஸ்திரக் கர்த்தாக்களலைந்தவழி சொன்னோமென் றுத்தரம். (௪௧)

இப்படிச் சாஸ்திர கர்த்தாக்களும் வஸ்து நிருணயம் பண்ண மாட்டாமலலைந்தார்களானால் வஸ்து நிருணயம் பண்ணப்போகிறதெப்படியென்கின்ற சங்கைக்கு.

பிரமமொன்றேபொருள் மற்றுள்ளவெல்லா மாயாமயமென்கின்றவேதாந்தவிசாரத்தை விசாரித்து வஸ்துநிருணயம் பண்ணவேண்டுமென்றேயுத்தரம். (௪௨)

இப்படியான வித்தவாதிகளுக்கெல்லாம்விரோதமல்லவோ வென்கின்றசங்கைக்கு;

ஒன்றேபொருளென்கின்ற வேதாந்தத்திற்கும் அதனைத்தானே குருடர் யானைகண்டாற்போலக் கண்டிருக்கிற விந்தவாதிகளுக்கு மற்றும் விரோதமில்லையென்றே யுத்தரம். (௪௩)

பிரம்மமொன்றே யுண்மைப்பொருளொன்கின்ற வேதாந்தத்திற்கு மற்றுள்ள வெல்லா மாயாமயமென்கிறதற்கும் பிரமாணமேதென்கின்ற சங்கைக்கு.

இப்படிச் சொல்லுகின்ற முப்பத்திரண்டு உபநிஷத்துமே பிரமாணமென்றுத்தரம். (௪௪)

இவ்வளவுஞ் சித்து இலக்ஷணம் வேதாந்தத்திலே மாயைக் கிலக்ஷண மெப்படியென்கின்ற சங்கைக்கு.

மோகலக்ஷணமுஞ் சடலக்ஷணமுமா யிருக்குமென் றுத்தரம். (௪௫)

இந்தப் பிரவஞ்சத்திலே மாயை லக்ஷணமிருவகையும்பகுத்துக் காட்டவேண்டுமென்கின்ற சங்கைக்கு.

கடமுதலாயிருக்கப்பட்ட பூதபௌதிகமெல்லாஞ் சடமாயிருக்கக்கண்டோம் - சத்தென்று மசத்தென்றும் பகுத்தறியமாட்டாதபடியினாலே மோகமாயிருக்கக்கண்டோமென்றே யுத்தரம். (௪௬)

சீவன் சகத்து ஈசுவரனென்பவையெல்லாம் உண்மையாகக்கண்டுவருகிறதை மாயையென்கிற தெப்படியென்கின்ற சங்கைக்கு.

இந்த மாயாகற்பிதமேயல்லாமல் இலௌகீக சிருட்டியினாலே புன்மையாகவும் யுத்தியினாலே யநிர்வசனியமாகவும் வேதாந்தஞானிக்கு காலத்திரயத்திலுமில்லாததாகவு மிப்படி மூன்றுவிதமாயிருக்குமென்றுத்தரம். (௪௭)

இந்த மாயாகற்பிதப் பிரபஞ்சமெல்லா மெந்தக்காலத்திலே யுண்டு எந்தக்காலத்திலே யில்லையென்கின்ற சங்கைக்கு

சாக்கிரத்திலுஞ் சொற்பனத்திலும் விரித்த சித்திரபடம்போலே யுண்டாயிருக்கிற காலமென்றுஞ் சுழித்திமூர்ச்சைசமாதிகளிலே சுருட்டின சித்திரபடம்போல வில்லாதகாலமென்று முத்தரம். (௪௮)

இந்த மாயை சுதந்தரையோ பராதீனமோவென்கின்ற சங்கைக்கு.

சைதந்நியத்தையன்றி விளங்கமாட்டாதபடியினாலே பராதீனரூபமாம் அசங்கமாயிருக்கின்ற கூடத்தர் சைதந்நியத்தைச் சடமாயிருக்கின்ற செகத்தாகவுஞ் சிதாபாசனாயிருக்கின்ற சீவீசுரராகவும் பண்ணுகையினாலே சுதந்தரையுமாமென்றேயுத்தரம்

இப்படியானால் மாயையினாலே பிரமத்துக்குச் சொரூபலக்ஷணங்கெட்டதோவென்கிற சங்கைக்கு.

மாயை கூடஸ்தனைத் தொடாமற்றானே சீவன் சகத்தை உண்டாக்கையினாலே சொரூபலக்ஷணங் கெடவில்லையென்றுத்தரம். (ருய)

மூர்த்திப் பிரமத்தைத் தானே சீவன் செகத்தாயுண்டாக்கிற் றென்றீர் பின்பு பிரமத்தைத் தொடாமல் பண்ணிற்றென்றீர் இந்தவிருவகையுங் கூடாதென்கின்ற சங்கைக்கு.

கூடாததைக் கூட்டுவிக்கின்றதே மாயைக்குச் சுபாவமென்று வேதாந்திகள் சொன்னபடியினாலே விரோதமில்லை நியமங்கள் வேண்டாமென்றேயுத்தரம். (ருக)

இப்படி மாயை சற்பித்ததெல்லாம் கூடாததைக் கூட்டுவித்ததாகவிருக்குமோ இப்படிக்கொத்த சத்தி மாயைக்கெங்கேயிருந்து வந்ததென்கின்ற சங்கைக்கு.

ஒரு மாயைக்குப்பிறந்த ஐந்து பூதங்களிலே ஒன்றிலே வெளியும் ஒன்றிலே சலனமும் ஒன்றிலே சூடும் ஒன்றிலே குளிர்மையுமொன்றிலே கடினமுமிப்படிக் கண்டபடியினாலே இந்தமாயைக் கூடாததைக்கூட்டுவிக்கின்றதே சுபாவமிந்தச்சத்திமாயைக்குச் சுபாவமேயல்லாமல் ஒன்றினாலேவந்ததல்லவென்றுத்தரம்

எல்லாருமிந்தச்செகத்தை மாயாமயமென்கின்றதை யேனறியவில்லையென்கின்ற சங்கைக்கு.

இந்திரசாலக்காரனைக் காணமட்டுமிந்திரசால முண்மையாய்த் தோற்றுகின்றதுபோல மாயைக் கதிட்டான மறியுமளவு மாயை உண்மையாய்த் தோன்றுமதிட்டானத்தை யறிந்தாற் பொய்யாய்ப்போமென்றுத்தரம். (ருஉ)

சகலவாதிகளு மாயைக்குள்ளே தானே யிதுபொருளது பொருளென்று சங்கிக்கக் காரியமேதென்கின்ற சங்கைக்கு.

சந்தேக சொரூபமாயிருக்கின்ற மாயைக்குப்பரிகாரந் தேடாமற் சங்கைக்குள் சங்கைபண்ணுகின்றது அவர்களைப்பிடித்த அஞ்ஞானமென்றுத்தரம். (ருங)

ஆனால் இந்த மாயைக்குப் பரிகாரமேதென்கின்றசங்கைக்கு.

இது பொருளல்ல எல்லா மாயையென்கின்றதே பரிகாரமென்றுத்தரம். (ருச)

கண்ணாற்கண்டும் நிருணயமாகாத இந்திரசாலம்போல இந்தச்செகத்து மாயாமயமாகவிருக்கவில்லையே உண்மையாகவல்லவோ விருக்கிறதென்கின்ற சங்கைக்கு.

சத்து அசத்து என்றிருவகை நிருணயத்திலும் அகப்படா

த்சொந்தமென்மையென்கின்றது உன்றுடைய பட்சபாதமேயல்லாமல் செகத்துமாயைத்தானே யென்றுத்தரம். (௩௬)

நிரிப்படிச்சொன்னதேயல்லாமல் செகத்து மாயையென்று சொன்னபேருமுன்டோவென்கின்ற சங்கைக்கு.

சடமாயிக் கருப்பவாசம் பண்ணின சுக்கிலமும் சேதனம்போலப் புறப்பட்டுப் பெரியவன் சிறியவனென்று உண்டுபடுத்திக் கண்டு கெட்டுத் திரிகின்றதைப்பார்க்க வேறே யிந்திரசாலமேதென்று வசிஷ்டர் சொல்லியிருக்கிறார் இந்தச்செகம்போல ஆலமரமுதலானவைகளும் விதைமுன்னானவைகளோ - மரமுன்னானவைகளோவென்று மயங்கவேண்டாம் சகலமு மாயையென்றே காணவேண்டுமென்று வியாசர்சொல்லுகிறார் மனதினுலேசிந்திக்கில் நிருணயப்படாதபொருளைத் தரிக்கிறவொன்றுமேதென்று நிருணயிக்கப்படாத செகத்திலே இதுபொருளாம்பொருளென்று சங்கிக்கத்தேவையில்லை மாயையென்றே காணவேண்டுமென்று வியாக்கியவர்க்கர்சொன்னார் இன்னபடியென்று சிந்திக்கப்படாததை யுண்டாக்குகிறசத்தி மாயையென்று எல்லாருஞ் சொல்லியிருக்கிறார்களென்றுத்தரம். (௩௭)

இந்த மாயைக்குப்பீசமெங்கேகாணலாமென்கின்றசங்கைக்கு

மரத்தை யடக்கியிருக்கின்ற பீசம்போலச் சாக்கிரசொற்பனம் பிரபஞ்சத்தையடக்கியிருக்கின்ற மாயாபீசஞ் சுழுத்தியினிடத்திலே எல்லாருங் காணவில்லையோவென்றுத்தரம். (௩௮)

சகல புத்திவாசனையு மாயையினிடத்திலே யடங்கியிருக்கின்றதற்கு அடையாளமேதென்கின்ற சங்கைக்கு.

மாயாப்பிரிதிவிம்பர் மாயையிலே சகலவாசனையுங்கண்டுசர்வசிக்கினரா யிருக்கின்ற ரிதுவேயடையாளமென்றுத்தரம் (௩௯)

ஆனால் ஈசுவரவுபாதி எப்படியிருக்குஞ் சீவவுபாதியெப்படியிருக்குஞ் சீவீசுவரர்கள் எப்படியிருப்பார்கள் ஈசுவரனை யறிகிறது எப்படியென்கின்ற சங்கைக்கு.

மேகம்போலேயிருக்கிற மாயை மேகத் திவலைபோலிருக்கும் புத்திவாசனைகள் திவலையிற் பிரிதிவிம்பித்த ஆகாசம்போலிருக்குஞ் சிதாபாசாள் மேகாகாசம்போல ஈசுவரனை யநுமானத்தினுலே யறியவேண்டுமென்றுத்தரம். (௪௰)

இந்தப் புத்திவாசனைகளிலே பிரதிவிம்பித்தசிதாபாசனையு மாயாபிரதிவிம்பராயிருக்கின்ற ஈசுவரனையுமெந்தவடைவிலேயறுத்துக்க ஞுகின்றதென்கின்றசங்கைக்கு

வாசனையானது சிதாபாசனுடனே கூடிப் புத்திருபமாய் மூளைக்கிறபோது சிதாபாசனை வெட்டவெளியாய்க்காணலா மீசு

காரணசரீரவிசிஷ்டன் சர்வேசுவரன் அந்தரியாமியென்று வேதஞ் சொல்லக்கேட்டு அறியலாமென்றுத்தரம். (௬௧)

இரண்டுபேர்களுஞ் சிதாபாசரானால் இவர்களுக்குத் தாரதம்மிய மேதென்கின்ற சங்கைக்கு.

ஜீவாத்மா மாயையின் வசமாயிருக்கின்றபேர்களென்றும் மாயையைத் தன்வசம்பண்ணிக்கொண்டவர் ஈசுவரனென்றுந் தாரதம்மியங்காணலாமென்றுமுத்தரம். (௬௨)

ஈசுவரனே சர்வவிசிஷ்டன் சர்வேந்திரியாமி சர்வேசுவரனென்பதெதினாலென்கின்ற சங்கைக்கு.

இருவருக்கும் உபாதியான மாயையினிடத்திலே சகலமுமிருக்கின்றபடியினாலே சர்வவித்தென்பதுஞ் சகலஜீவர்களுடைய புத்திக்குள்ளிருந்து ஆட்டுகின்றபடியினாலேயந்தரியாமியென்பது மிவர் உண்டாக்குகின்ற பிரபஞ்சத்தை ஒருவராலுந் திருப்பப்படாதபடியினாற் சர்வேசுரனென்றுமுத்தரம். (௬௩)

ஈசுரனுக்குச் சர்வக்ஞத்துவமுண்டானா லெல்லாருமேன் அநுபவிக்கப்படவில்லையென்கின்ற சங்கைக்கு.

வாசனைகளெல்லா மபரோட்சமானபடியினாலே அநுபவிக்கப்படவில்லையென்றுத்தரம் (௬௪)

அந்தரியாமிக்கு இத்தனைகுண முண்டென்கிறதற்குப் பிரமாணமேது இவருக்குச் சரீரபிரமாணமேது இவர் கற்பித்ததேபிரபஞ்சத்துக்கு வழியென்கின்றதற்குப் பிரமாண மேதென்கின்ற சங்கைக்கு.

அந்தரியாமிக்கு வெகுகுணமுண்டென்பதற்கு வேதப்பிரமாணம் புடைவைக்குநூலே பிரதான மாகின்றதுபோலச் சகலத்திற்கு மிவரே பிரதானமாகவிருக்கின்றபடியினாலே இவரே சர்வமு மிவருடையசரீரமும் இவ்வரண் சகல பூதங்களிலுமிருந்து தேகாதிபாவைகளை யபிமானக்கயிற்றைப்பூட்டி விதிநிஷேதவழியே யாட்டிவிக்கின்றாரென்கின்ற கீதாவசனமு மிது தருமமென்றறியே னிதிலே மீளவுமில்லை இது அதர்மமென் றறியேன் இது விட்டுத்திரும்பவு மில்லை யாரோ வொருத்த னிப்படியாட்டுகின்றானென்கின்ற பாண்டவகீதையும்பிரமாணமென்றுத்தரம்(௬௫)

சகலமு மிப்படி யீசுவரனேயாட்டுகின்றதானால் புருஷனுடைய முயற்சி தேவையில்லையோவென்கின்ற சங்கைக்கு.

முயற்சியு மவரவர் கன்மத்துக் கீடா மீசுரசங்கற்ப மானபடியினாலே முயற்சியும்பண்ணவேண்டுமென்றுத்தரம். (௬௬)

கன்மத்தின்வழியே முயற்சியானால் ஈசுவரசங்கற்பந் தேவையில்லையென்கின்ற சங்கைக்கு.

கர்ம்மசேதனமானபடியினாலே ஈசுவரபிரசாதங்கொண்டு

அசங்கனென்கிற ஞானமுதலானவையும் வரவேண்டியதானபடியால் ஈஸ்வரானுக்கிரகமும் வேண்டுமென்றுத்தரம். (௬௭)

ஈஸ்வரானுக்கிரகங்கொண்டு அசங்கனென்கிற ஞானம் வந்தாற் பிரயோசனமேதென்கின்றசங்கைக்கு.

அதினாலே முத்திவருமென்று வேதஞ் சொல்லுகிறதென்றுத்தரம். (௬௮)

அந்தரியாமி சிருஷ்டிக்கிறதெப்படி அழிக்கிறதெப்படியென்கின்ற சங்கைக்கு.

சித்திரபடத்தை விரித்தாற்போலத் தம்மிடத்திற் பிரபஞ்சத்தை அவரவர்கள் கன்மவசத்திலே தோற்றுவிக்கின்றதே சிருட்டியென்பதுஞ் சுருட்டின சித்திரபடம்போல அவரவர்கள் கன்மத்தின்வழியே பிரபஞ்சத்தைத் தம்மிடத்திலே யடக்குகின்றதே பிரளயமென்றுத்தரம். (௬௯)

ஒரு ஈஸ்வரனே சித்துக்குஞ் செகத்துக்குங் காரணமெப்படி ஆவானென்கின்ற சங்கைக்கு.

சைதந்நியமானபடியினாலே சித்துக்குங் காரணமாவார் மாயையின் உபாதியைத்தொட்டுச் சடத்துக்குங் காரணமாவாரென்றுத்தரம். (௭௰)

இப்படியானாற் பிரமந்தானே செகத்காரணமென்று சங்கராசாரியர் சொல்லுவானேனென்கின்றசங்கைக்கு.

கூடஸ்தனையுஞ் சிவனையு மந்நியோந்நிய அத்தியாசத்தினாலே ஒருண்மைப்பாடாய்க் கண்டாற்போல ஈஸ்வரனையும் பிரமத்தையு மொன்றாகக் கண்டு சொன்னாரென்றுத்தரம். (௭௧)

அந்நியோந்நியவத்தியாச மெப்படிக் கூடுமென்கின்றசங்கைக்கு.

ஈஸ்வரனுடைய செகத்காரணத்துவம் பிரமத்தினிடத்திலும் பிரமத்தினுடைய சச்சிதாநந்த லக்ஷணை மாயாப்பிரதிவிம்பரிடத்திலு மத்தியாசம்பண்ணப்பட்டுக் கஞ்சிபூசிடப்பட்டபடம் போலே யொன்றாயிற்றென்றுத்தரம். (௭௨)

இந்தவிவரம்நீர் அறிந்தவகையெப்படியென்கின்றசங்கைக்கு

ஆறுலிங்கத்தாலும் வேதாந்த விசாரணைபண்ணிப் பிரமம் அசங்கமென்று மாயாப்பிரதிவிம்பரே சிருஷ்டிக்கிறவரென்று மறிந்தோமென்றுத்தரம். (௭௩)

சிருஷ்டிபண்ணின வகையெப்படியென்கின்ற சங்கைக்கு.

சுழுத்தியினிடத்திலே சொற்பனம் உண்டாகின்றாற்போல ஆநந்தமயராயிருந்த ஈஸ்வரனு மாயைவிரியப்படுத்தி இரணிய கருப்பராகினாரென்றுத்தரம். (௭௪)

ஒருவேதத்திலே ஒன்றிலொன்றுண்டாயிற்று என்கின்ற சிருட்டி சொல்லுகிறது, ஒருவேதத்திலே ஒருமித்தாய்ச் சிருட்டி உண்டாயிற்றென்று சொல்லுகிறது, இதிலேஎதுபிரமாணமென்கின்ற சங்கைக்கு.

இந்த இரண்டுவகையுஞ் சிருட்டியாகின்றபடியிருந்தாலேசொற்பனத்தைப்போலே இரண்டும்பொய்யென்றறியவென்றுத்தரம். ௭௫

இரணியகருப்பனெப்படியிருப்பானென்கின்றசங்கைக்கு.

சூட்சுமசரீர சமஷ்டியாகப்பட்டதிலே சூத்திரமிருக்கின்றதுபோல இச்சாசத்தி - கிரியாசத்தி - ஞானசத்தியின்பிரேரகனான இரணியகருப்பனென்றுத்தரம். (௭௬)

இந்த இரணியகருப்பனெப்படியிருப்பானென்கின்ற சங்கைக்கு.

சந்தியாகாலத்தில் காண்கின்றலோகம்போலவுங் கரியாலே அச்சுக்கட்டின சித்திரம்போலவும் குருமுளையாக இருக்கின்றபயிர்வகைபோலவும் ஈஸ்வரசூட்சுமசரீரந் தோற்றுமென்றுத்தரம். (௭௭)

ஈஸ்வரனுடைய சூட்சுமசரீரந் தூலசரீரந்தடங்கித் தோற்றுகின்றதெப்படி இதற்குப்பிரமாணமெது இவ்வவயவங்களெப்படிப்பட்டவை அவற்றைப் பூசித்தால் பலமெதென்கின்ற சங்கைக்கு.

பஞ்சீகரணம் பண்ணப்பட்டு வெயிலிலே விளங்குகின்ற லோகம்போலவுந் தீர்ந்த சித்திரபடம்போலவும் பழுத்திருக்கின்ற பயிர்வகைபோலவும் பிரகாசமாய்த்தோற்றின ஸ்தூலசரீர சமஷ்டியே விராட்டென்பதுவும் விஸ்வரூபவத்தியாயமும் புருஷசூத்திரவேதமும் பிரமாணம் பஞ்சமூர்த்திகள் வருணாச்சிரமமுடையபேர்கள் தேவராசாதிகள் சாயுசாதிகள் மயிலாராவாரி வாச்சியுளி முதலானவெல்லாம் ஈஸ்வரனுடைய வவயவங்கள் ஆகையாலும் உபாசித்தமூர்த்திபதிகாரிக்குத் தக்கதாய்ப் பலம் வருமென்றுத்தரம். (௭௮)

எல்லாரும் பூசிக்கின்றவை ஈஸ்வர அவயவமானால் மோக்ஷமெல்லாருக்கு மேன் வரவில்லையென்கின்ற சங்கைக்கு.

மாயிகத்தைப்பூசித்தால் மாயிகபலமேயல்லாமல் மோக்ஷம் வாராதென்றுத்தரம். (௭௯)

எதினாலே மோக்ஷம் வரவேண்டுமென்கின்றசங்கைக்கு.

பிரமதத்துவவிசாரத்தினாலே மோக்ஷம் வரவேண்டுமேயல்லாமல் மற்றொன்றினாலும் வாராதென்றுத்தரம். (௮௰)

பிரமத்தியானமன்றியிலே பின்னையொன்றினாலுஞ்சஞ்சாரம்போகாதோவென்கின்ற சங்கைக்கு.

நான் விழித்தாலல்லாமல் தன்னுடைய சொற்பனம் போகாததுபோல அத்துவிதபிரம்மைக்கியானத்தினால் அஞ்ஞானகற்பிதமான ஜீவேஸ்வர செகத்தென்கின்ற சொற்பனம் அதிஷ்டானஞானத்தினாலே போகவேண்டுமென்றுத்தரம். (௮௧)

பிரமத்துக்கு சத்தியமாயிருக்கின்ற ஜீவேசுரர்களையுங் கற்பிதசெகத்தோடேகூட்டலாமோவென்கின்றசங்கைக்கு.

அவர்களு மாயாகற்பிதமானபடியினாலே செகத்தோடே கூட்டலாமென்றுத்தரம். (௮௨)

இனி யிவர்களாலே கற்பிதமேதென்கின்றசங்கைக்கு.

ஈட்சணமுதற் பிரவேசாந்த சிருட்டியெல்லா மீஸ்வரன் கற்பிதமாம் சாக்கிரமுதல் மோக்ஷபரியந்தமுள்ள சம்சாரமெல்லாம் ஜீவன் கற்பிதமாமென்றுத்தரம். (௮௩)

இப்படிப் பிரம்மமாத்திரமேயுண்மைப்பொருளானால் வாதிகளெல்லாருஞ் ஜீவேசுரவிஷயத்திலே வாதப்பண்ணி மாயக்காரணமேதென்கின்ற சங்கைக்கு.

அவர்களைப்பிடித்தவஞ்ஞானமே காரணமாகவீணிலேமாட்கின்றார்களென்றுத்தரம். (௮௪)

நீயொருத்தனிருக்க இந்தவாதிகளெல்லாருங் கெட்டுப்போகலாமோ இந்தத் தத்துவத்தைப்போதியுமென்கின்றசங்கைக்கு

பிராந்தர்களுக்குப் பக்குவம் வாராததற்குமுன்னே போதித்தாலிளைப்புமாத்திரமே மிச்சமல்லாமலவன் புத்தியிலேறாதென்றுத்தரம். (௮௫)

இந்த வாதிகளெதிலேபிராந்தர்களா யிருக்கின்றார்களோவென்கின்றசங்கைக்கு.

உலோகாயுதன் முதற்சாங்கிய மதபரியந்தஞ் சீவபிராந்தியிலே யலைந்தபேர்கள் யோகமுதல் விராட்புருடபரியந்த மீசுரபிராந்தியிலே யலைந்தபேர்களென்றுத்தரம். (௮௬)

பெரியோர்களாயிருக்கின்ற சாத்திரகர்த்தாக்களைப் பிராந்தாளென்று சொல்லலாமோவென்கின்றசங்கைக்கு.

அத்துவிதபிரமத்தை யறியாதபடியினாலே இவர்கள் பிராந்தாளேதப்பாது இவர்களுக்கு இகபரமிரண்டுமில்லையென் றுத்தரம். (௮௭)

ஜீவவாதிகளுடனே யீஸ்வரவாதிகளையும் பிராந்தாளென்று சொல்லலாமோவென்கின்ற சங்கைக்கு.

சொற்பனத்திலே பிச்சையெடுக்கிறவனைக்காட்டிலும்இராசாவாயிருக்கின்றவனதிகமானாலும் விழித்தபின்பு இரண்டுஞ் சொற்பனமாய்ப் பொய்யாய்ப்போமென்றதுபோல இருவருந்

வாதிகளுங் கருமத்தினாலே தாரதம்மியமானாலும் ஞானம்வந்
தவிடத்து இரண்டுபேரும் பிராப்தாவொன்றேயுத்தரம்.

மோக்ஷம் வேண்டுமென்கின்றவனுக்கு இந்தவாதங்களைவி
சாரிக்கத்தேவையில்லையோவென்கின்றசங்கைக்கு.

பூர்வபக்ஷமாய் விசாரித்துத்தள்ளிவிடுகின்றதேயல்லாமற்
சித்தாந்தமாய் விசாரிக்கவேண்டியதுவேதாந்தமென்றுத்தரம்.

சாங்கியம் யோகம் இந்த இருவகையிலுஞ்சொன்னசீவனு
மீசுரனும் சுதந்திரமானபடியினால் இந்த விருவகை
யுந் தள்ளப்படாவாம் வேதாந்தத்திற் கூட்டலா மிந்தஇரண்டை
யுந்தள்ளப்படாவென்கின்ற சங்கைக்கு.

அங்கே சீவீசுரனுக்குப் பேதசித்தமானபடியினாலேநம்
முடைய சித்தாந்தத்துக்குக் கூடாதென்கின்றவுத்தரம். (௧௰)

உம்முடைய சித்தாந்தத்திலே தற்பதத்துக்குந் தொம்பத
த்துக்கும் அருத்தபேதமில்லையோவென்கின்ற சங்கைக்கு.

அத்துவிதத்தைப் போதிக்கவேண்டுமென்கிறதற்காக ஒரு
வகுப்புப் பகுத்துக்காட்டினதேயல்லாமல் அருத்தபேதமில்லை
யென்றுத்தரம். (௧௧)

இப்படியானால் இலட்சணையிலே பதார்த்தங்களைச்சோதிப்
பானேனென்கின்றசங்கைக்கு.

அஞ்ஞானத்தினாலே சீவீசுரனை வேறாகக் கண்டு அந்தப்
பிராந்தருக்கு அந்தப்பிராந்திபோகவேண்டுமென்று பதார்த்த
சோதனைபண்ணிக்காட்டினதென்றேயுத்தரம். (௧௨)

பதார்த்தசோதனையிலே இருவரையுமொருவராகக்காண்கி
ன்றதெப்படியென்கின்றசங்கைக்கு.

உபாதிசப்பிதமாயிருக்கின்ற சலாகாசத்தையு மேகாகாசத்
தையும்விட்டு இவைகட்கதிட்டானமா யிருக்கின்ற கடாகாசத்
தையு மகாகாசத்தையு மொன்றென்று காண்கின்றாற்போலத்
தொம்பததற்பதங்களினு முபாதிசப்பிதமான சீவீசுரனைத்தள்
ளி இவர்கட்கதிட்டானமான கூடஸ்தனையும் பிரமத்தையுமொ
ன்றாகக்காண்கின்றதே இலட்சணையினுற் பதார்த்தஞ்சோதிக்கப்
படுகிறதென்றுத்தரம். (௧௩)

இந்தப்படிக்குச் சாங்கியமதத்திற் சீவனையும் யோகமதத்
திலீசுரனையு மிரண்டுபதத்திற்கு மருத்தமாக்கலாமோவென்கின்
றசங்கைக்கு.

இப்படியானால் வேதவிரோதிகளாயிருக்கின்ற உலோகாயு
தன்பரியந்தங் கூட்டலாமென்றுத்தரம். (௧௪)

அப்படிச் சாங்கியயோகமதத்திலே விரோதமேதென்கின்
றசங்கைக்கு.

ஆத்மாவநேகமென்றதுஞ்சகத்தசத்தியமென்றது மீசுவரனொருவருண்டென்றதுமத்துவிதத்திற்குவிரோதமென்றுத்தரம்.

அத்துவிதத்திற் சொத்துவராவிட்டால் என்ன சீவன் அசங்கனாக நித்தியமென்றறிந்துகொண்டு முத்தியில்லையோவென்கின்ற சங்கைக்கு.

சகத்துமீசுரனு நித்தியமென்றதனால்தான் அசங்கனென்றறிந்தாலு முன்போலப்பிரகிருதியுந் திரும்பக்கூட்டுமென்றிருக்கின் றீஸ்வரனுஞ் சிட்சைபண்ணுவனானதையினாலே மோக்ஷமெப்படிவருமென்றுத்தரம். (௧௬)

அசங்கனாகவிருக்கின்ற ஆத்மாவுக்கு அவிவேகத்தினாற்பிரகிருதி சங்கம்பந்தமு விவேகம் வந்தபிற்பாடு இவனு நப்படக் கூடுமென்கின்ற சங்கைக்கு.

இப்படியானதுன்னுடையசித்தாந்தங்கெட்டு மாயாவாதத்தினால் வேதாந்தத்திலே வந்தாயென்றுத்தரம். (௧௭)

உம்முடைய அத்விதத்திற்கு ஆத்மாக்கள் நானாவிதமாகாதபோது இவன் முத்தன் இவன் பெத்தனென்கிற நிருணயமெப்படி வருமென்கின்ற சங்கைக்கு.

இந்த நிருணயமெல்லா மாயைதானே கற்பிக்குமென்றுத்தரம். (௧௮)

ஆத்மாவொன்றொழிய விரண்டில்லாதவிடத்திலே மாயையெப்படி விகற்பத்தைக் கற்பிக்குமென்கின்ற சங்கைக்கு.

கூடாததைக் கூட்டுவிக்கின்றதே மாயைக்குச் சுபாவமானதால் சகலத்தையுங்கற்பிக்குஞ்சுபாவத்திலே பந்தமுமில்லை முத்தியுமில்லைப் பெத்தனுமுத்தனுமில்லையென்று வேதஞ்சொல்லுகிறதென்றுத்தரம். (௧௯)

இவையெல்லாஞ் சுபாவத்திலில்லாவிட்டால் பின்னையெப்படியுண்டாகுமென்கின்ற சங்கைக்கு.

மாயையாகிற காமதேனுவுக்குச் சீவீசுரரென்று இரண்டு கண்ணுண்டு அவை வேண்டியபடி தோய்தபாலுங்கறக்குமாகையினாலத்துவிதமொன்றேயொழிய இரண்டில்லையென்றுத்தரம்.

இப்படிப் பேசுமெல்லா மித்தையென்றறிந்து முற்காலத்திலுமாத்மாவொருவரேயுள்ளபொருளென்றறிந்திருந்த ஞானிகளும் விவகாரம்பண்ணக்கண்டோமே யதுகூடுமோவென்கின்ற சங்கைக்கு.

முன்போலே பரமார்த்தமாக விவகாரம்பண்ணார்கள் மித்தையென்றே கண்டுவருவார்களென்றுத்தரம், (௨௰)

அஞ்ஞானிகளெப்படி விவகரிப்பார்கள் ஞானிகளெப்படி

விவகரிப்பார்களென்கின்ற இருவகை நிருணயமுஞ்சொல்லுமென்கின்ற சங்கைக்கு

இகலோக பரலோகவிவகாரமெல்லாம் உண்மையென்றும் அத்துவிதமில்லையென்றும் விவகரிப்பன் அஞ்ஞானி அத்துவித மாத்திர முண்மைமெய்ப்பொருள் மற்றுள்ளவெல்லா மித்தையென்று கண்டு விவகரிப்பன் ஞானி அவன் நிருணயப்படிக்குப்பலமும் வருமென்றுத்தரம். (௧௩)

அத்துவித பிரத்தியட்சமாமோவென்கின்ற சங்கைக்கு.

நீ ஞானவடிவாயிருக்கின்றாயோ வில்லையோவென்றுத்தரம்.

உள்ளபடி தோற்றவில்லையேயென்கின்ற சங்கைக்கு.

அத்துவித நிலையஞ் சரியல்லவோ துவிதஞ்சித்திக்கின்ற படிக்கு அத்துவிதமுஞ் சித்திக்குமென்றுத்தரம். (௧௪)

துவிதம் அழிந்தல்லவோ அத்துவைதஞ் சித்திக்கவேண்டு மென்கின்ற சங்கைக்கு.

துவிதமிருக்கையிலே அத்துவிதத்தைக் காண்கின்ற வறிவு தானேயாகையால் அத்துவிதஞ்சித்திக்குமென்றுத்தரம். (௧௫)

ஞானம்வந்தா லிரண்டும் நிற்கின்றவைதானேயோ வென்கின்ற சங்கைக்கு.

அதைத்துவைதமிரண்டுஞ் சாக்ஷிமாத்திரமாக மிஞ்சுகின்றபடியினாலே துவைதம்-மாயாமயம்-அத்துவிதம் நித்தியமென்றுத்தரம். (௧௬)

நிரம்பவு மொருவேளையிலே துவைதம்சத்தியமாய்த் தோன்றுமேயாமென்கின்ற சங்கைக்கு.

நிரம்பவும் அத்துவிதத்தைப் பரிசீலனம் பண்ணென்றுத்தரம். (௧௭)

எத்தனைகாலம் பரிசீலனம் பண்ணவேண்டுமென்கின்ற சங்கைக்கு.

இந்தச் சுக்கத்தைத் துவைதத்திலே பண்ணு அத்துவிதத்திலே பண்ணவேண்டாமென்றுத்தரம். (௧௮)

பரிகாசமுதலானவை எனக்கு முன்போலேதோன்றுகின்றவேயென்கின்ற சங்கைக்கு.

எனக்கென்கின்ற வகங்காரிக்கேயல்லாமல் சாட்சியாயிருக்கின்ற நமக்கில்லைப் பரிதாபமென்றுத்தரம். (௧௯)

அத்தியாசத்திலுமே சித்துருபத்திலுங் காண்பிக்கிறதென்கின்ற சங்கைக்கு.

இவ்விருமுறை அத்தியாசத்தைவிட்டு ஆத்மா அகங்காரங்களை வேறுபடுத்துமென்றுத்தரம். (௧௰)

அத்தியாசஞ் சீக்கிரத்தில்வருகிறது விவேகஞ் சீக்கிரத்தில் வரவில்லையென்கின்ற சங்கைக்கு.

அத்தியாசம்போல விவேகத்தையுந் திடப்படுத்தினால் அத்தியாசம்வாராதென் றுத்தரம். (௱௰௧)

அத்தியாசமித்தையாய்ப்போகின்றதுபோல அத்துவிதமு மித்தையாய்ப் போகாதோவென்கின்ற சங்கைக்கு.

இன்னபடிவரும் இன்னபடிபோமென்று நிருணயப்படாமல் மாயாமயமாயிருக்கிறது தொய்தமோ அத்துவிதமோவென்று அநுபவத்தைப் பாவென்றுத்தரம். (௱௰௨)

தொய்தம்போல அத்துவைதமும் அநித்தியமாமோ வென்கின்ற சங்கைக்கு.

தொய்த முன்னில்லை யென்கின்றதை அத்துவிதங்கண்டாற்போல அத்துவைத முன்னில்லையென்கின்றதை யொன்றினாலுங் காணப்படாதபடியினாலே அபரோட்சமாகிய அத்துவிதம்மே நித்தியமென்றுத்தரம். (௱௰௩)

இப்படியறிந்துஞ் சிலபேர்கள் திருத்தியடைந்துங் கவலை கெட்டுஞ் சந்தோஷியாம லிருப்பானேனென்கின்ற சங்கைக்கு.

சாந்திரார்த்தத்தைத் தனக் காக்கிக்கொண்டு விவேகத்தை நம்பாமல் மேலெழுந்தபுத்தியினாலே பார்த்துக்கொண்டதென் றுத்தரம். (௱௰௪)

யாமொருக்கா லிருதயத்திலே யிருக்கின்றவாசையெல்லாம் பற்றறவிட்டுப்போயிற்றோ அன்றைக் கிவன் முத்தனென்று வேதஞ்சொல்லுகிறது ஞானியிடத்திலே காணோமென்கிற சங்கைக்கு.

அகங்காரத்தையு மாத்மாவையு மொன்றாகக்கண்டு வருகிற ஆசையாகாதென் றந்தவேதத்துக் கர்த்த மகங்காரக்கிரந்தி விட்டபின்பு ஆத்மாவே வேறாகண்டிருக்கிறவனுக்கு அகங்காரத்தினிடமாய்க்கோடியாசைவந்தாலுமானியில்லையென்றுத்தரம்.

அகங்காரக்கிரந்தி விட்டுப்போனபின்பு அகங்காரத்தினிடமாயாசைவரலாமோவென்கின்ற சங்கைக்கு.

பிராரத்தபலத்தினால் வருமென்றுத்தரம். (௱௰௬)

ஞானிக்கு மஞ்ஞானிக்கும் பிராரத்தபலஞ்சரியானு லிரண்டுபேருக்கும் பேதமென்னென்கின்ற சங்கைக்கு.

இவன்-வித்துவான் இவன் மூடனென்கின்றதை வேதப்பரீட்சையாலே கண்டுகொள்வதேயல்லாமல் சுரூபங்கொண்டுங் காணுததுபோல அகங்காரக்கிரந்தி விட்டுப்போனதுகொண்டு ஞானமயன்றறிந்தையல்லாமற் பிராரத்தச்சேட்டையினாலே பேதந் தெரியாதென் றுத்தரம். (௱௰௭)

அகங்காரக்கிரந்திபோகாவிட்டாலுமாத்மாவுக்குச் சம்சாரமில்லையோவென்கின்ற சங்கைக்கு.

இப்படியறிந்தபோதே நீயேகிருதார்த்த னென்றுத்தரம்.

அகங்காரக்கிரந்திவிட்டுப்போனவனுக்கு அடையாளமென்னவென்கின்ற சங்கைக்கு.

பிறவிருத்தி நிவிர்த்திகளிலே ஒன்றைத் துவேஷிக்கிறதுமில்லை ஒன்றை இச்சிக்கிறதுமில்லை யென்கின்ற கீதாவசனப்படியேயிருப்பானென்றுத்தரம். (௱௰௯)

ஆனால் உபேட்சைபண்ணுகிறதே ஞானமென்கின்றசங்கைக்கு.

கை கால் செத்துப்போனாற் கருமத்திலுமுபேட்சைவருமிப்படி வியாதியே தத்துவஞானமென்றால் புத்தியல்லவோ கெளரிவென்கின்ற ஆசியமேயுத்தரம். (௱௨௰)

இப்படிச் சங்கிக்கத் தேவையில்லை சடபரதர் முதலானபேருபேட்சையாயிருந்தது புராணத்திற்கேட்டோமென்கின்ற சங்கைக்கு.

ஸ்ரீகள் என்கிறவாகனங்களுடனேகூடிவிளையாடினாலும்ஞானியானவன் சரீரத்தைத்தானென்றெண்ணானென்கின்றசாமவேதஞ்சொல்லுகிறதென்றேயுத்தரம். (௱௨௧)

சடபரதர் காட்டிலேபோனது ஞானநிமித்தியமல்லவோவென்கின்றசங்கைக்கு.

அஞ்ஞானிகளுடைய சங்கத்தைத் துறந்ததேயல்லாமல்கல்லுக்கள் மரங்கள்போல பிறவிருத்தி யற்றிருக்கவில்லையென்றுத்தரம். (௱௨௨)

இப்படி யொவ்வொருகுணங்களைப்பிடித்து இதுவே ஞானமென்று லோகத்தார்சொல்வானேனென்கின்றசங்கைக்கு.

சாஸ்திரசித்தாந்தமறியாதமூடரொன்றுகிடக்கவொன்றைச்சொல்லுவர் அறிந்தவன் சொல்லானென்றுத்தரம். (௱௨௩)

சாஸ்திரசித்தாந்த மேதென்கின்ற சங்கைக்கு.

சகல சன்மார்க்கமுங்கூடிய வைராக்கியமென்றும், உபரதியென்றும், ஞானமென்றுந் திரிவிதமாகவிருக்கு மிந்த மூன்றுவகைக்கு மொருசொரூபம்-காரியம்-அவதி-பலம்-என்கின்ற வைந்தும் வேறுவேறாக விருக்கு மிவைகளை இன்னவின்னபடியென்று பகுத்தறியாத அவிவேகிகள் எல்லாவற்றையும்ஞானமென்று தடுமாறிச் சொல்வர் பகுத்தறிந்தவன் அப்படிச் சொல்லானென்றுத்தரம். (௱௨௪)

வைராக்கிய முதலானமூன்றுவகுப்பிற்கு மேதுமுதலான வைந்தும் எவையென்கின்ற சங்கைக்கு.

வைராக்கியத்திற் கேது- விஷயத்திற் றோஷதிட்டி சொரூ
பம்-அரோசிகம்-காரியம் - திரும்ப வாசைவாராமலிருக்கிறது-
அவதி- பிரம்மலோகபரியந்தம் துரும்பாகவெண்ணுகல்-பலம்-
பிரமலோகம் இப்பால்-உபரதிக்கேது - அஷ்டாங்கயோகம்-
சொரூபம் சித்தநிரோதனம்-காரியம்-விவகாரட்சயம் - அவதி-
சுழுத்தியைப்போலச் சரீரத்தைமறத்தல்-பலம்-பிரமலோகம்-
ஞானத்திற்கு ஏது - சிரவணம்-மனனம்-நிருத்தியாசனம் - சொ
ரூபம்-சத்தியம்-மித்தையாபாவனை-காரியம்-அகங்காரக்கிரந்தி-
திரும்பவராமலிருக்கின்றது-அவதி-முன்பு தேகமேதானென்று
நின்றாற்போலப் பிரமமேதானென்கிறதிடம் - பலம் - மோக்ஷ
மென்றுத்தரம். (௱௨௫)

இந்த மூன்று மொருமிக்கவேண்டாவோ வென்கின்ற சங்
கைக்கு.

இந்த மூன்றுங் கூடினால் சடசௌக்கியமுண்டு என்கின்ற
தேயல்லாமல் மோக்ஷத்திற்கு ஞானமாத்திரமேபோதுங் கன்ம
வசத்தினாற் சிலபேரிடத்திற் கூடியிருக்குஞ் சிலபேரிடத்திற்பிரி
ந்திருக்குங் கலங்கத்தேவையில்லையென்றுத்தரம். (௱௨௬)

இப்படிக் கலங்காமல் நிலைநின்றவனுக்குச் செய்காரியமே
தென்கின்ற சங்கைக்கு.

சின்மாத்திரமாயிருக்கின்ற தன்னிடத்திலே மாயைகற்பி
த்த செகச்சித்திரத்தை யபேட்சித்துச் சதாகாலமுஞ் சின்மாத்தி
ரமாகவேகாண்பன் இந்தச் சித்திரதீபிகையை யநுசந்தானம்ப
ண்ணிவருகின்றவன் செகத்தைச் சித்திரமாகவேகாண்பனல்லாம
ல் முன்போலவுண்மையென்று மயங்கான் என்றுத்தரம்.(௱௨௭)

சித்திரதீபிகை முற்றுப்பெற்றது.

இரண்டாவது.

திருத்திதீபிகை.

சகல வேதாந்த அருத்தத்தை வெளிப்படுத்தி அவைகளி
லுள்ள புருஷார்த்தத்தைப் பூரியிட்ட வித்தியாரண்ணிய சுவாமி
களுக்கு நமஸ்காரம்.

புருஷனானவன் ஆத்மாவை இவரோ தானென்று அறிந்தால்

பின்னை யாருக்கும்போகநிமித்தியமாகப்போகத்தைவெளியிடுஞ் சரீரதாடப்பமுவாயேனென்கின்றதைச் சொல்லாநின்ற பிரகதாரண்ணிய வுபநிஷத்திற் கர்த்தாவென்றுசொல்லுகிறோம் இந்த வுபநிஷத்து என்னைச்சொல்லுகிறதென்கின்றசங்கைக்கு.

இந்த நியமையிலே சொன்னபடி செகத்து யித்தையென்று முன்னையயான சின்மாத்திரமே தானென்றும் அறிந்து இட்டப்பட்ட சீவன்முத்தனுடைய நிருத்தியைச் சொல்லுகிறதென்றுத்தரம். (௧)

இந்த வேதத்திலே புருஷனானவன் நானென்கின்ற சொல்லுக்கர்த்தமேதென்கின்றசங்கைக்கு.

சுயாவஸ்த்திலே இதனைத்தவிரவேறுபொருளில்லாவிட்டாலும் வியவகாரத்திலே மாயாகற்பிதமாக சீவன் ஈசுவரனென்றிரண்டு பேருண்டு இவர்களிற் சிருட்டிமுதலானவைகளைச் செய்கின்றவனீஸ்வரன் சாக்கிரமுதல் மோக்ஷபரியந்தமுள்ள சம்சார நிருபவிக்கின்றவன் சீவனிவர்கள் அதிட்டான சைதந்நியத்துடனே கூடிச் சீவனையுமப்புருஷனென்று சொல்லுகிறதென்றுத்தரம். (௨)

அதிகாரியைச்சொல்லுகின்ற புருஷசந்தத்திற்கு அதிட்டானத்தையுங்கூட்டி யர்த்தமாக்கலாமோவென்கின்றசங்கைக்கு.

அதிட்டானத்தைத்தவிர ஆரோபத்திற்கு வேறுசொரூபமில்லாதபடியினாலும் வியவகாரத்திலிருவரு மொருவராய்த் தோற்றுகையாலும் முத்தியிலே ஆரோபமதிட்டானமாத்திரமாய்ப்போகின்றபடியாலுமிரண்டையுங் கூட்டிச்சொன்னோமென்றுத்தரம்

இந்தப்புருடன் அதிட்டானப்பிரதானமா யெப்படிப்பேசுவன் ஆரோபித பிரதானமா யெப்படிப்பேசுவனென்கின்றசங்கைக்கு.

அதிட்டானமாரோபத்தி லடங்கியிருக்குங்காலத்தில் ஒருமைப்பாடாய் நான் சம்சாரியென்றுபேசுவன் ஆரோபத்தைத் தள்ளி யதிஷ்டானமே தானாய்க் காணும்போது நான் அசங்கன் சின்மாத்திரமென்று பேசுவனென்றுத்தரம். (௩)

நான் அசங்கனென்கின்றபோது அசங்கனிடத்திலே அகங்காரங்கூடுமோவென்கின்றசங்கைக்கு.

முக்கிய வகங்காரம் அமுக்கியவகங்கார முக்கியாமுக்கியவகங்காரமென்றிரண்டு இவற்றில் அதிட்டானம் அகங்காரங்களைப் பகுத்தறியாதே ஒருமைப்பாடாக நான்வந்தேன் போனேனென்று அதபாசனாகப் பேசுகின்றது முக்கிய வகங்காரம் இரண்டையும் இலட்சணாவிருத்தியினாலே பகுத்தறிக்கண்டபரோட்சஞானி சாட்சியாகத் தன்னைக்கண்டு நான் அசங்கன் சின்மாத்திரமென்றுபேசுவது அமுக்கியவகங்காரம்- சார்வோத்தமனு

பொன்றுமில்லை நான் சுரூபமென்கின்ற அநுபவமுள்ளதுமுக்கியாமுக்கியவகங்காரமென்றுத்தரம். (௫)

இந்தவகங்காரங்களில் பந்தத்தைக்கொடுக்கின்றதெதுமோக்ஷத்தைக்கொடுக்கின்றதெது என்கின்றசங்கைக்கு.

முக்கியாமுக்கியவகங்கார மிந்தச்சென்மத்திலேயே மோக்ஷங்கொடாது அமுக்கியாவகங்காரஞ் சாட்சிக்கியானத்தால் இந்தச்சன்மத்தில் மோக்ஷம் - முக்கியாமுக்கியவகங்காரஞ் சருவாத்மனைக் கூடாது அது சென்மத்திற் கேதுவாகையா லதையவசியந் தள்ளவேண்டுமென்றுத்தரம். (௬)

ஞானி அஞ்ஞானியென்றிருக்கின்ற இருவருஞ் சிதாபாசரல்லவோ அவர்களில் ஞானி தனக்கந்நியமாயிருக்கின்ற சாட்சியை நானெனக்கூடுமோ வென்கின்ற சங்கைக்கு.

முகாபாசத்திற் கெப்படி யொன்றுமில்லையோ அப்படிக்கண்ணாடியிற் பிரதிபலிக்கின்ற முகஞ் சுபாவமல்ல அதனைப் பார்க்கின்ற முகமே சுபாவமாகும்போலச் சிதாபாசனுக்குஞ் சிதாபாசனாகவிருக்கின்றதுதான் மித்தையானபடியினாலுஞ் சாட்சியாய் விளங்குகின்றதுதான் சுபாவமானபடியினாலுந் தன்னுடைய சுபாவசுதந்தியத்தைத் தானெனக்கூடுமென்றுத்தரம். (௭)

சிதாபாசன் மித்தையானா லவனநுசந்தானம்பண்ணுகின்ற ஞானமு மித்தையாகவேண்டு மது சங்சாரத்தைப்போக்கமாட்டாதென்கின்ற சங்கைக்கு.

இந்த ஞான மித்தையானாலு மிதனாற் சிதாபாசனுக்கு முன்னிருந்த சங்சாரம் பொய்யானபடியினா லதைப் போக்குகிறதற் கிந்தஞானமே போதுமென்றுத்தரம். (௮)

புருஷார்த்தத்திற் கர்த்தனாகட்டோ மினி யாத்மாவை இவனே தானென்றறிகின்றதெப்படியென்கின்ற சங்கைக்கு.

சந்தேகவிபரீதமறத் தேகமே நானென்றிருந்தாற்போலச் சாட்சியே தானென்கின்ற திடஞானமே இவனே தானென்கின்றதென்றுத்தரம். (௯)

இவனே தானென்கின்றசொல் பிரத்தியட்சத்தை யல்லவோ சொல்லுகிறது அவர் பரோட்சமாயிருக்கக்கூடுமோ வென்கின்ற சங்கைக்கு.

பத்தாவானுக்குத் தன்னிடத்திலேதானே யஞ்ஞானமாவரணம் விட்சேபம் பரோட்சம் அபரோட்சந் துக்கநிவிர்த்தி தடையற்ற வானந்தமென்கின்ற வேழவத்தையுங் கண்டாற்போல வாத்மாவினிடத்திலு மேழவத்தையுங் கூடுமென்றுத்தரம் (௰)

தெசமனிடத்திலு மாத்மாவினிடத்திலு மேழவத்தையு மநுபவமாய்க்காட்டவேண்டுமென்கின்றசங்கைக்கு.

தசமனை யொன்பதாபேராயெண்ணினவுடனே பத்தாவானைக்காணாது நிற்கிறதே யஞ்ஞானம்- பத்தாவானைக் காணோமவனையங்கேபோனானோ வென்கின்ற பாரம்பரியமே ஆவரணம் ஆற்றோடேபோனானென்றழுகின்றதே விட்சேபம்- ஆப்தனுபதேசத்தினாலே சொர்க்காதிலோகம்போலப் பத்தாவானிருக்கிறானென்கின்றதே பரோட்சஞானம்- நீதான் பத்தாவானென்று ஆப்தனெண்ணிக்காட்டவறிந்தது அபரோட்சஞானம் - முன்னெந்தாலென்றழுத அழுகைபோனதே நிவிர்த்தி பத்தாவானைத் தானாகக்கண்ட சந்தோஷமே தடையற்ற வானந்த மிப்படிப்போல வாத்மாவினிடத்திலுங் காட்டிப்படி சிதாபாசன் அநாதிசம்சாரத்திலே அழுந்தித் தன்னுடைய சுபாவத்தைவிசாரியாமலுபேட்சித்திருக்கின்றதே யஞ்ஞானம் அம்மார்க்கத்திலே விசாரித்து ஆத்மாவுண்டானாற் றோற்றாதோ வாகையினாலே இல்லையென்கின்றதே யாவரணம்- சரீரத்திரயத்தையுஞ் சிதாபாசனையுந் தானாய்க்காண்கின்றதே விட்சேபம் - ஆப்தனுபதேசத்தினாலே பிரமமுண்டென்றறிகிறதே பரோட்சஞானம்- வேதாந்தவிசாரத்தினாலே யந்தப்பிரமமே தாமென்றறிகின்றதே யபரோட்சஞானம்நான்கர்த்தாபோக்தாவல்லவென்றபோனதே நிவிர்த்தி - செய்யவேண்டியதெல்லாஞ் செய்துமுடிந்தது அடையவேண்டியதெல்லாமடைந்து முடிந்தது என்கின்ற சந்தோஷமே தடையற்றவானந்த மிப்படி யாத்மாவினிடத்திலேழவத்தையுமுண்டென்றுத்தரம். (௰௪)

இதனாலே பந்தப்படுத்துகின்றவவத்தை யெது மோக்ஷத்தைக்கொடுக்கின்றவவத்தையெதுவென்கின்றசங்கைக்கு

முந்தினது மூன்றும் பந்தத்தைக்கொடுக்கும் பிந்தினது நாலு மோக்ஷத்தைக்கொடுக்குமென்றுத்தரம். (௰௫)

முந்தினமூன்றுக்குள்ளே யெந்தவவத்தை யெந்தவநர்த்தத்தைப்பண்ணுமென்றசங்கைக்கு.

ஆத்மாவை நானறியேனென்கின்ற உதாசினமேயஞ்ஞானத்தால்வந்தவநர்த்தம் அம்மார்க்கத்தை விசாரித்துக் கூடஸ்தராயிருந்தால் தோற்றாதோ இல்லையென்கின்ற விபரீதமே யாவரணத்தினால்வந்த அநர்த்தம் இகலோகபரலோகத்தைக்குறித்துச் செய்காரியமெல்லா நம்முடைய தொழிற்முன்னே புண்ணியபாபமும் நம்மைவிடாவென்கின்ற நடுக்கமே விட்சேபத்தினால் வந்தவநர்த்தம் இப்படி இந்தமூன்றவத்தையுமனர்த்தங்கொடுக்குமெனறுத்தரம். (௰௬)

அஞ்ஞானமும்- ஆவரணமும் - விட்சேபத்துக்கு முந்தின

தானபடியினாலே யேழவத்தையுஞ் சிதாபாசனுக்கென்று சொல்லக்கூடாதென்கின்ற சங்கைக்கு.

விட்சேபகாரிய மாகிறதற்குமுன்னுங் காரணரூபமாய்ப் பிரமத்தினிடத்திலேயிருந்து சிதாபாசனிடமாய் முந்தினவிரண்டவத்தையு மிருந்தன ஆகையாலே யேழவத்தையுஞ் சிதாபாசனுக்கே யாத்மாவுக்கில்லையென்றுத்தரம். (௰௪)

பூருவாசாரியரெல்லாரு மஞ்ஞானத்திற்காதாரஞ் சிதாபாசனென்று சொல்லாமற் பிரமமென்று சொல்வானேனென்கின்றசங்கைக்கு.

ஆரோபத்திற் கதிஷ்டானம் பிரமமானபடியினாலே எல்லாம் பிரமத்திலே யாரோபமென்று சொன்னார்கள் நாமநுபவத்தினாலே யவத்தைகளெல்லாஞ் சிதாபாசனுக்கேயென்று சொன்னோமென்றுத்தரம். (௰௫)

இந்தவேழவத்தையுஞ் சிதாபாசனிடத்திலேயநுபவமாகக் காட்டவேண்டுமென்கின்ற சங்கைக்கு.

நான் சங்சாரி நானபரோட்சஞானி நான் விஞ்ஞானிநான் துக்கமற்றவன் நான் கிருதகிர்த்தியனென்கின்ற விட்சேபமுதலான பஞ்சாவத்தையுஞ்சிதாபாசனேயநுபவிக்கக்கண்டதுபோல தானஞ்ஞானி என் திஷ்டிக்குப் பிரமமில்லையென்கின்றமுந்தினவிரண்டவத்தையுஞ் சிதாபாசனேயநுபவிக்க அநுபவங் கண்டாற்போலவென்றுத்தரம். (௰௬)

இனிமேலவத்தை நாலு மோக்ஷங் கொடுக்கின்றதெப்படியென்கின்ற சங்கைக்கு-

பரோக்ஷ ஞானத்தினால் சத்தாவரணமும் அபரோக்ஷஞானத்தினாலே சித்தாவரணமு மூலாக்கியானத்துடனே நட்டமாய்ப்போனவுடனே கர்த்தத்துவமுதலான சகலதுக்கமும் விட்டுப்போஞ் சகலசங்சாரமும் நிவிர்த்தியானவுடனே நான் நித்தியமுத்தனென்கின்ற கெட்டிரங்கொண்டு தடையற்றவானந்தம்வரு மிப்படி நாலவத்தையு மோக்ஷங் கொடுக்கின்றவகையென்றுத்தரம். (௰௭)

பிரமஞ் சுயம்பிரகாசமானாலபரோட்சஞான விடயமாயெப்படியிருந்ததென்கின்றசங்கைக்கு.

பிரமமுண்டென்று பிரகாசிக்கையினாற் குற்றமில்லையென்றுத்தரம். (௰௮)

பிரமமுண்டென்று விளங்குவதேது ஆகையினாலே அந்தப்பரோட்சஞானம் பிரமாணமல்லவென்கின்றசங்கைக்கு.

முந்தின நிருணயத்துக் கழிவுவந்ததுகொண்டு கண்ணாரத்

காணுதுங்கொண்டும் நாமமாறுயக்கேட்டதுகொண்டு மேகதேச மாய்க் கண்டதுகொண்டும் அப்பிரமாணமென்றால் இந்த நாலு வகையிலே யொன்றினுங்கொண்டு பிரமாண மென்னவேணு மானகையினால் அபரோட்சஞானத்துக் கிந்த நாலுவகையு மில்லை யென்றுத்தரம். (௰௯)

இந்த அபரோட்சஞானத்திற்கு நாலுவகைத் தூஷணமுமி ல்லையென்கின்ற தெப்படியென்கின்ற சங்கைக்கு.

பிரமமில்லையென் றொருபிரமாணங்காணுதபடியினாலே மூ ன்றினை நிருணயத்துக் கழிவில்லை யென்றுரைக்காதுகொண்டு ப ரோட்சஞானம் பிரமாணமென்றுச் சொற்கானுநானமும் பிர மாணமாகவேண்டும் பிரத்தியட்சமாகப்போகிறதைப்பரோட்ச மென்றதுகொண்டு பிராந்தியென்னக்கூடாது ஏகதேசங் கண்ட துகொண்டு அப்பிரமாணியமென்றுற் கடஞானமுதலாகப் பிரா ந்தியாகவேண்டு மானகையினால் அபரோட்சஞானத்துக்கொருதூ ஷணமுமில்லையென் றுத்தரம். (உ௰)

நிரங்கிசவஸ்துவினிடத்திலே யங்கிசகற்பனை யெப்படி வந் ததென்கின்றசங்கைக்கு.

தன்னைத்தொட்டில்லாவிட்டாலுந் தள்ளப்படுகின்றஉபாதி யைத்தொட்டு அங்கிசகற்பனையுண்டென் றுத்தரம். (உக)

உபாதியைத்தொட்டு எப்படியுண்டென்கின்றசங்கைக்கு.

பரோட்சஞானத்தினால் அசத்தென்கின்ற அங்கிசந்தள்ளப் பட்டது பிரத்தியட்சஞானத்தினாற் சித்தென்கின்ற அங்கிசந்தள் ளப்பட்டதென் றுத்தரம். (உஉ)

பிரத்தியட்சஞானத்துக் கானியில்லையோவென்கின்ற சங் கைக்கு.

பத்தாமவன் தானென்று கண்டபிற்பாடு முன்கண்டவொன் பதுபேருக்குள்ளே யில்லையென்று கண்டாற்போல வாத்மாவே தானென்று கண்டவன்றான் அகங்காரமே தானென்று இருந்த தைத் தள்ளுமேயல்லாமல் நான் பிரமமென்கின்ற பிரத்தியட்ச ஞானத்தைக் கெடுக்கமாட்டாதென் றுத்தரம். (உங)

இப்படிப் பரோட்சஞானம் குருவாக்கியத்தால் வருமென் றும் பின்பு மகாவாக்கியவிசாரத்தினாலே பிரத்தியட்ச ஞானம் வருமென் றுமெங்கே சொல்லியிருக்கிறதென்கின்றசங்கைக்கு.

உத்தாலகர்சுவேதகேதுவிற்கு முந்தி பரோட்சஞானஞ் சொல்லிப் பின்பு ஒன்பதாமுபதேசத்திலே பிரத்தியட்சஞான ஞ் சொன்னாரென்று சாமவேதத்திலும்வருணன்பிருகுவுக்குமுந் தி பரோட்சஞானஞ் சொல்லிப் பின்பு ஐந்தாமுபதேசத்திலே பிரத்தியட்சஞானஞ் சொன்னாரென்று யசுர்வேதத்திலுந் தே

வேற்சொல்முற்றி குருவாக்கியத்தினுல் பிரமத்தைப் பரோட்சமா
யறிந்து பின்பு அபரோட்சமாகவறிந்தானென்று மிருக்குவேதத்
திலே சொல்லியிருக்கிறது இந்தப்படி சங்கராசாரியாரு மகா
வாக்கியவிருத்தியினுலே வெளிப்படுத்தியிருக்கிருரென்றுத்தரம்

மகாவாக்கியவிசாரத்தினுலே அபரோட்சஞானம் வருமெ
ன்கின்றது வாக்கியவிருத்தியினு லெப்படி வெளிப்படுத்தினுரெ
ன்கின்றசங்கைக்கு.

அகங்காரமுங் கூடஸ்தருந் தொம்பதத்திற் கருத்தமென்
று மபரோட்சமாய் மாயாவுபாதியாயிருக்கின்ற செகத்காரண
மான ஈஸ்வரசைதந்நியமுந் தற்பதத்துக் கர்த்தமென்று மிரண்
டுக்கும் விரோதத்தைத் தள்ளிலெட்சாயார்த்தமான அவரோ இவ
னென்கின்ற லட்சணம்போலக் கூடஸ்தரோ பிர்மமிந்தப்பிர்மமே
தானென்று அநுபவமாயறிந்தவுடனே இன்னையவனுக்கும் நா
ம் பிரமமல்லவென்ற புத்தியு மீசுரசைதந்நிய மபரோட்சமென்
ற புத்தியு மின்னவிடமென்றுங் காணுமற்போமாகையால் அப
ரோட்சஞானத்திற்கு மகாவாக்கியமேகாரணமென்று சொன்னு
னென்றுத்தரம். (௨௫)

மகாவாக்கியத்திற் பிறந்தவறிவெல்லா மபரோட்சமேயா
கியப் பிரத்தியட்சமல்லவென்கின்ற சங்கைக்கு.

வட்டிக்காசைபட்டு முதலிழந்தானென்கின்ற சொற்போல
ப் பிரமமாகவேண்டுமென்று எண்ணின சீவனுக்குச் சிதசித்தமா
கவிருந்த பிரத்தியட்ச அஞ்ஞானமுண்டென்பதும் பரியாயமா
கக் காணு நீயே தெசமனென்கின்றசொல்லுமவனைப் பிரத்தியட்
சமாய்க்காட்டவில்லையோ வென்றுத்தரம். (௨௬)

அந்தக்கரணவுபாதியிருக்கையிலே சீவனைப் பிரத்தியட்ச
மாகக்காணலாம் நிருபாதியாயிருக்கின்ற பிரமம் பிரத்தியட்ச
மாகாதென்கின்ற சங்கைக்கு.

இரும்பு பொன்னென்கிறது கொண்டு விலங்கென்பதுபோ
காதனும்போல அந்தக்கரணக் கூட்டுறவே சீவவுபாதியானுற்போ
ல அதனைத்தவிருகின்றதே பிர்மவுபாதியாமென்றுத்தரம்(௨௭

நானென்கின்றது முற்றுந் தள்ளப்பட்டபின்னுன் பிர்ம
மென்கின்ற ஞானம்வரக் கணக்கில்லையென்கின்ற சங்கைக்கு.

நானென்கின்றது முற்றுந்தள்ளப்படாமலுபாதிமாத்திரந்
தள்ளப்பட்டுச் சைதந்நியந் தள்ளப்படாதபடியினுலே நான்பிர
மமென்கின்ற வறிவு வரலாமென்றுத்தரம். (௨௮)

சாட்சி சுயம்பிரகாசமானுல் விருத்திக்கு விடயமாகக்கூடா
து கூடுமென்றுற் பிர்மம் விருத்தியிற் சிதாபாசனுலு மறியப்ப
ட்டுச் செடமென்று வருட்பதுமென்கின்ற சங்கைக்கு.

கடத்தைப்பார்க்க விளக்குங் கண்ணும்வேண்டும் விளக்கைப்பார்க்கக் கண்மாத்திரம்போதும்போல வப்பிரகாசமான விடயத்தை யறியமிடத்தில் விடயஞானத்தைப்போக்க விருத்தியு மதையறியச் சிதாபாசனும்வேண்டும் பிரகாசமான பிரமத்தையறியுமிடத்தில் அஞ்ஞானத்தைப்போக்க விருத்திபோதும் சிதாபாசந் தேவையில்லை இருந்தாலும் வெயிலில் விளக்குப்போலக் குன்றிப் பிரம்மத்திலே லயமாய்ப்போவன் மனவிருத்தி வியார்த்தியுண்டு சிதாபாசனுக்குப் பலவியார்த்தியில்லையென்று வேதமுஞ் சொல்லுகிறது இந்த அபரோட்சஞானமே இவரோதாவென்கின்ற வேதத்துக்கு அருத்தமென்றுத்தரம். (௪௯)

சங்கராச்சாரியாரு மிப்படிப் பலகாலுஞ் சிரவணம் பன்னவேச்சொல்லி விதித்தபடியினாலே இந்தப் பிரத்தியட்சஞானந் தான் திட்டமல்லவென்கின்றசங்கைக்கு.

வேதபேதங் காமபேதங்கொண்டு கன்மபேதங் கண்டாற்போல ஞானபேதம் வாராதென்கிறதை யறி லிங்கத்தினாலுஞ் சகலவேதாந்தத்துக்குமர்த்தவிசாரம்பண்ணச்சொன்னார் அல்லாவேதத்திலு மொருபடித்தாய்க்கண்ட விந்த ஞானத்துக்கு விபரீதபாவனை போகத்தக்கதாக மனனம் பண்ணச்சொன்னாரென்றுத்தரம். (௫௰)

விபரீதபாவனையெதுவென்கின்ற சங்கைக்கு.

தகப்பனிடத்திலே சத்துருபுத்திபண்ணுகிறாற்போலத்தேகமே நான் பிரபஞ்சமே நித்தியமென்கின்றதென்றுத்தரம் (௫௧)

இந்தவிபரீதபாவனைக்குக் காரணமேதென்கின்றசங்கைக்கு.

அநேகசென்மத்திலே தொடர்ந்துவந்த சென்மாந்திரவாசனையே காரணமென்றுத்தரம். (௫௨)

இந்த விபரீதபாவனை எதினாலேபோமென்கின்றசங்கைக்கு

நான் சத்தியமாயிருக்கின்றது பிரபஞ்சகாதி பிரபஞ்சமித்தையென்கின்ற தத்துவபாவனையினாற்போமென்றுத்தரம்.

தத்துவபாவனை பண்ணுகின்ற வடைவேதென்கின்றசங்கைக்கு.

பிரம்மத்தைப் பலகாலுஞ் சிரவணம்பண்ண வொருவருக்குப் போதிக்கவேண்டுமென்கின்ற பிரம்மாப்பியாசமே பண்ணுகின்றவடைவென்றுத்தரம். (௫௪)

எந்நேரமு மிதுவேவேலையாகவிருந்தால் நிருவாகமெப்படி நடக்குமென்கின்ற சங்கைக்கு.

ஏகாக்கிர சித்தமாகத் தத்துவவிசாரம் பண்ணுகின்றவனுடைய கர்மமெல்லாம் ஈஸ்வரனே நிருவகித்துக் கொள்ளுவானென்றுத்தரம். (௫௫)

தத்துவபாவனைக்குங் காரணமேதென்கின்ற சங்கைக்கு.

ஏகாக்கிரசித்தமே காரணமென்றுத்தரம். (ருசு)

அந்த வேகாக்கிரசித்தமெதினால் வருமென்கின்ற சங்கைக்கு.

நிஷ்காம வுபாசனையினாலே வரவேண்டுமென்றுத்தரம். (ருஎ)

மந்திர செபம்போலவு மூர்த்தித்தியானம்போலவுந் தத்துவபாவனைபண்ணுகின்றதற்கு நியமமுண்டோவென்கின்ற சங்கைக்கு.

மந்திரசெபமுதலானவைகளுக்குத் திருஷ்டபலமில்லாதபடியினாலே நியமமும் நியமந்தப்பினாற் றோஷமுமுண்டு அசனம்பண்ணுகிறது பசியைப்போக்குகின்றாற்போலத் தத்துவபாவனை விபரீதபாவனையைப் போக்குகிறது திருஷ்டபலயானபடியினாலே நியமந்தேவையில்லையென்றுத்தரம். (ருஅ)

பிரம்மாப்பியாசம் பலப்படச்செய்யச்சொன்னால் நிர்ப்பந்தமல்லவோவென்கின்ற சங்கைக்கு.

சஞ்சலமாயிருக்கின்ற மனதிற்கு நியமம்பூண்ட செபமும் வேறொன்றைச் சற்றே நினைத்தாலுங் கெட்டுப்போகின்ற மூர்த்தித்தியானமே நிர்ப்பந்தமல்லாமற் கூத்துப் பார்க்கின்றதுபோல வநேகவிதமெடுத்துக்காட்டும்லோகவழக்கம்போல இதிகாசயுத்திகளுடனே கூடியிருக்கின்ற பிரம்மாப்பியாசம்பிரயாசமல்ல மனதிற்கு விநோதமென்றே யுத்தரம். (ருகூ)

மனது சஞ்சலமென்கிறதற்குப் பிரமாணமேதென்கின்ற சங்கைக்கு.

தான்போனதேவழியாய்ச் சஞ்சலமே சுபாவமாயிருக்கின்ற மனத்தை நிறுத்துகின்றது வாயுவை நிறுத்துகிறதற்குச் சரியென்கின்ற கீதாவசனமுஞ் சமுத்திரத்தைக்குடித்தாலும் நெருப்பிலே விழுந்தாலும் மேருவைப்பிளந்தாலும் பிடுங்கினாலும் மனத்தை நிறுத்தக்கூடாதென்கின்ற வாசிட்டப்பிரமாணமுமென்றுத்தரம். (சுய)

இப்படி விட்சேபமாயிருக்கின்ற மனதிற்குச் சின்மாத்திரமே யான்மா மற்றுள்ளவெல்லா மித்தையென்கின்ற நிருத்தியாசனங் கூடாதென்கின்ற சங்கைக்கு.

காவியந்தர்க்கம் செட்டுவெள்ளாமைகளிலே விழுந்தமனதிற்கு நிருத்தியாசனங்கூடாது மற்றை மனதிற்குக் கூடுமென்றுத்தரம். (சுக)

இப்படியானாற் போசனாதிகளும் விட்சேபமல்லவோவென்கின்ற சங்கைக்கு.

சொற்பவிட்சேபமான போசனாதிகளனுசந்தானத்தைக்

கொடாதபடியினாலே இது விட்சேபமல்லத் தானே பிரதானமாக இழுத்துக்கொண்டுபோகின்றதற்கு முதலான து தத்துவத்தைத் தெளிக்கையால் இதுவே கனவிட்சேபமாகையினாலே இதாவித்தைத் தடைக்கொடுக்கவொண்ணாதென்றேயுத்தரம். (௪௨)

இப்படியெல்லாவற்றையும்விட்டாற் சீவிப்பதெப்படியென்கின்ற சங்கைக்கு..

அசனத்தை விடச்சொன்னால் சீவிக்கப்படாதேயல்லாம விசாரவிசாரத்தை விடச்சொன்னதெப்படிச் சீவிக்கப்படுமென்கின்ற துராக்கிரகத்தைவிட்டுவிடென்றுத்தரம். (௪௩)

ஞானியாக விருக்கின்றசனகன் இராச்சியபரிபாலனம்பண்ணவில்லையோவென்கின்ற சங்கைக்கு.

சனகன் திடஞானத்தினாலே பண்ணினான் திடக்கியானமுண்டானோர் பிராரத்துவசத்தினாலே தர்க்கபாடமுதலானவைகளைச்செய்தாலு முத்தராவாரென்றேயுத்தரம். (௪௪)

இப்படிப்பிராரத்துவமென்றுதானே யநாசாரத்தைப்பண்ணலாமோவென்கின்ற சங்கைக்கு.

கன்மத்தை யொருவராலு மழிக்கப்படாதென்றேயுத்தரம்

ஆனால் ஞானிக்குமூடனுக்கும் பேதமேதென்கின்ற சங்கைக்கு.

வழிப்போக்கரிருவருக்குந் தங்குமூர்ச்சரியானாலும் ஊரறிந்தவன் திடமாய்ப்போவன் அறியாதவன் ஏங்கிக்கொண்டேபோகின்றதுபோல ஞானிக்கும் அஞ்ஞானிக்கும் பிராரத்துவசஞ்சரியானாலும் ஞானி தான் கர்த்தாவென்று திடமாயிருப்பன் அஞ்ஞானியேங்கிச்சாவான் இதுவே பேதமென்றுத்தரம். (௪௬)

இவரே நானென்கின்ற அபரோட்சஞான மதியப்பட்டதுயாருக்குப் போகநிமித்தியமா யெந்தப்போகத்தைக் குறித்துச் சரீரதாபப்படுவனென்கின்ற வாக்கியத்திற்கர்த்தமேதென்கின்ற சங்கைக்கு.

சாட்சாத்காரம்வந்தவனுக்கு விடயமும் பொசிப்பனவுமில்லையென்கிறதென்றுத்தரம். (௪௭)

பிராரத்துவபோகம்பொசிக்கையிலேஇந்த இருவகையுமில்லையென்கின்ற தெப்படியென்கின்ற சங்கைக்கு.

இந்திரசாலத்திற்கெற்றுருவநகரத்தைப் பார்க்கின்றவனொருபோகத்தையு மிச்சியாமற் சிரித்துப்போகின்றதுபோலச் சாட்சாத்காரம்வந்தவனுக்குச் செகத்துப் பொய்யாகப்போனபடியினாலும் விடயமும் பொசிக்கின்றனவுமில்லாமற்போனபடியினாலும் எண்ணெயற்ற விளக்குப்போல வாசனை சங்கற்பமெல்லாமணைந்துபோமென்றுத்தரம். (௪௮)

பிராரத்தபோகத்தைப்பொசித்தா லானியேதென்கின்ற சங்கைக்கு.

ஆனியொன்றுமில்லதோஷதிஷ்டியினாலேதிடப்படப்பொசிக்கவுமாட்டானென்றே யுத்தரம். (௪௯)

விடயத்திலே யெற்தெற்தத் தோஷமிருக்கிறதென்கின்ற சங்கைக்கு.

திரவியத்தைத் தேடுகையினாலு மிரட்சிக்கையினாலுமழிக்கையினாலுந் துக்கமேயல்லாமற் சுகமில்லயே மலமூத்திரம்நாம் பெரும்பு தசையினாலே நிருபிதமான ஸ்ரீபிண்டத்திலே எது நல்லது பசித்தாலும் விஷத்தைத் தின்னாததுபோல ஞானியுமிதனைவேண்டான்தோஷவிடயம்பிராரத்தத்தினாலேபோகிக்கவுண்டானாலும் கிலேசத்தோடே போகிப்பானேயொழிய சந்தோஷத்தோடே போகியானென்றுத்தரம். (௫௰)

போகிக்கையிலே கிலேசமேதென்கின்றசங்கைக்கு.

இன்னம் இந்தக் கன்மந் தொலைந்த தில்லை கிலேச மென்றுத்தரம். (௫௧)

உம்முடையபிரமஞானமு மிப்படிக் கிலேசமாயிற்றோவென்கின்ற சங்கைக்கு.

இந்தச் சம்சாரதாபம் விர்த்தியேயல்லாமல் கிலேசமல்லவென்றுத்தரம். (௫௨)

இந்த விர்த்தி யெதினாலேவந்ததென்கின்றசங்கைக்கு.

செகத்துப் பிராந்தியென்கின்ற திடஞானத்தினாலேவந்தது ஆகையினாலே ஞானி கிடைத்ததுகொண்டு திருத்தியடைந்திருப்பன் அஞ்ஞானியெத்தனைபோகங் கிடைத்தாலுந் திருத்தியடையானென்றுத்தரம். (௫௩)

அஞ்ஞானிக்குப் போகமெல்லாம் பொசித்தபிற்பாடாகிலுந் திருத்திவாராதோவென்கின்ற சங்கைக்கு.

அக்கினிக்கு மேன்மேலும் நெய்யைவிட்டதினாலே யக்கினியணைந்ததானா லஞ்ஞானிக்குப் போகத்திலே யாசையடங்குமற்றைப்படிக்கு வைராக்கியத்தினாலே யாசையடங்குமென் றுத்தரம். (௫௪)

ஞானியுங் கன்மவசத்தினாலே கிடைக்கின்றபோகம் பொசிக்கின்றவழியே யழுந்திப்போகானோவென்கின்றசங்கைக்கு.

பிடித்துவிட்ட ராசாவொருகிராமம் விட்டதுகொண்டுசந்தோஷிக்கின்றாற்போல ஞானியுங்கிடைத்ததுகொண்டு சந்தோஷிப்பன் அறிந்து திருடுகிற திருட்டு விநோதமாகின்றாற்போல அந்தப்போகமுமேன்மேலுங்காமசங்கற்பத்தை யுண்டாக்கமாட்டாதென்றேயுத்தரம். (௫௫)

இப்படிக்கொத்த விவேக மனநிலையுறைந்திருந்தாற்பிராரத்தகன்ம மேலெழுந்தவாசையை யெப்படி யுண்டாக்குமென்கின்ற சங்கைக்கு.

இச்சை அநிச்சை பரவிச்சையென்று பிராரத்தமூன்றுவிதமாகவிருக்குமானபடியினாலே இச்சையும்வரலாமென்றுத்தரம்

ஈதாகாதென்கிறதினாலே யாருக்கானாலும் ஆசைவருமோவென்கின்ற சங்கைக்கு.

அசத்தியம்பண்ணுகின்றவனுக்கும் திருடுகின்றவனுக்கும் இராசஸ்திரீயை இஷ்டம்பண்ணுகிறவனுக்கும் இது தனக்காகாதென்றறிந்திருந்தாலுமாசையேன்வந்தது ஆகையினாலே இஃது ஈஸ்வரனாலு மழிக்கப்படாது ஞானம்வந்தாலு மவனவன் பிராகிருதிபோகாதென்கின்ற கீதாவசனமே இதற்குப்பிரமாணமென்றுத்தரம். (௫௭)

நீரொழுக்காகப் பரிகரித்துச்சொல்கிறீர் சாமார்த்தியமுண்டானாலந்தக்கர்மத்தை மறிக்கலாமென்கின்ற சங்கைக்கு.

அப்படியாமானால் நளன்-இராமநாயகர்- தன்மபுத்திரர்முதலானவிவர்கள் துக்கப்படக்கணக்கில்லை ஈஸ்வரனுக்கும் பஞ்சகிருத்தியத்திலுமுழலக்கணக்கில்லை ஆகையாலீஸ்வரகற்பனையொருவராலுந் தள்ளப்போகாதென்றுத்தரம். (௫௮)

இச்சைப் பிராரத்தவத்தினுடைய பலமறியப்பட்டது இனியநிச்சைப்பிராரத்துவமாவதேது அதற்குப்பிரமாணமேதென்கின்ற சங்கைக்கு.

நாமனதில்லை பண்ணவொண்ணாதென்கிற காரியத்தைப் பலவந்தத்தினாலே நம்மைக்கொண்டு செய்கின்றவனார் நாம்வேண்டுமென்கிற காரியத்தை விலக்குவிக்கின்றவனாரென்றுகேட்டவருச்சுனனுக்கு அவனவன் கர்மந்தானே செய்விக்கிறதென்கின்ற கிருஷ்ணவாக்கியமே பிரமாணமென்றுத்தரம். (௫௯)

இனிப் பரவிச்சாப்பிராரத்துவமாவதேதென்கின்றசங்கைக்கு

தனக்கு இச்சை யநிச்சையில்லாதிருந்தாலுஞ் சேர்ந்தபேரைத்தொட்டுவருகின்றசுகதுக்கங்களே பரவிச்சாபிராரத்துவமென்றுத்தரம். (௬௰)

இப்படியானாலெல்லாரு இச்சிக்கப்போகிறானென்கின்ற வேதவாக்கிய மாசையைமறக்கச்சொல்லுவானேனென்கின்றசங்கைக்கு

இந்த வேதம் இச்சையை விலக்கவில்லை வறுத்தவிதைபோல முளையற்று வாதிக்கிறதென்றுத்தரம். (௬௧)

வாதிக்கிறதாவதேதென்கின்ற சங்கைக்கு.

வறுத்தவிதை முளையாவிட்டாலுந் தீனிக்குதவுகிறதுபோல ஞானியினுடைய வாசையு மகப்பட்டபோகத்துடனே திரு

மல்லாமல் மேன்மேலும் வினைகொண்டு காமசங்கற்பங்களைப் ப ண்ணுமென்றுத்தரம். (௩௨)

இவனுக்கெப்படி விடயத்திலே சிரத்தையேன்வரவில்லையெ ன்கிற சங்கைக்கு.

விடயமசத்தியமென்கின்ற பிராந்தி யில்லாதபடியினாலே இதிலே சிரத்தைவரவில்லையென்றுத்தரம். (௩௩)

விடயபிராந்திக்கு இலட்சணமேதென்கின்றசங்கைக்கு.

நமக்கிருக்கிற போகமெல்லா நாளுக்குநாளுந்திரோத்திர மாகவேண்டும் ஒருகாலத்திலு மாறாதவைச்சுவரிய மாகவிருக்க வேண்டும் இடையிலே விக்கினங்கள் வாராதிருக்கவேண்டுமென் கின்ற காங்கிஷையே பிராந்தியென்றுத்தரம். (௩௪)

இதுஎதினாலே போமென்கின்ற சங்கைக்கு.

வருந்தியழைத்தாலும் வாராத வாரா பொருந்துவன போவென்றாற் போகாவென்கின்றபோதமே அந்தப் பிராந்தி யைத் தள்ளுகிறதென்றுத்தரம். (௩௫)

ஞானிக்குமஞ்ஞானிக்கும் பொதுவாயிருக்கின்ற விடய மொருவருக்குப் பிராந்தியைக்கொடுப்பானேன் ஒருவருக்குப் போகத்தைக் கொடுப்பானேனென்கின்ற சங்கைக்கு.

தனக்குப்பிராப்தியில்லாததை யடையவேண்டுமென்று சங்கற்பித்த பிராந்தனுக்குத் துக்கத்தைக்கொடுக்கு மிதுமாயா மயமல்லவோ வுள்ளபடி முடியுமென்கின்ற ஞானிக்குச் சங்கற் பத்தை யுண்டாக்கமாட்டாதது துக்கத்தையெப்படிக்கொடுக்கு மென்றுத்தரம். (௩௬)

இந்தச் செகத்தை மாயாமயமென்று பார்க்கிறதெப்படி இதிலாசத்தியெப்படிப்போமென்கின்ற சங்கைக்கு.

சொற்பனம்போலவுமிந்திரசாலம்போலவு மின்னபடிவரு மின்னபடிபோமென்று நிருணயப்படாமல் தோற்றி யழிந்து போகையினாலே மாயாமயமென்று பார்க்கவப்போது சொற் பனத்திற்குச் சமானஞ் சாக்கிரமென்கின்ற நிலைமையுணர்த்தா லாசத்திபோமென்றுத்தரம். (௩௭)

இந்தத் தத்துவஞானத்துக் காக்கிரகமெதினாலேபிராரத்த கன்மத்துக்காக கிரகமெதினாலே யென்கின்ற சங்கைக்கு.

ஞானத்துக்காக கிரகமசத்திய மித்தியாபாவனையிலேபிரா ரத்துவத்துக்காக கிரகஞ்சீவனுக்குச்சுகதுக்கங் கொடுக்கிறதே யென்றுத்தரம். (௩௮)

பிராரத்தகன்மம் ஞானத்தைக்கெடாதோவென்கின்ற சங் கைக்கு.

செகத்துஞ் சத்தியமாய்த் தோற்றுந் பிராரத்தகன்ம போகங்கூடும்போது ஞானத்துக்குவிரோதமென்றறிக செகத்து மித்தையென்கின்ற விவேகத்தைக் கெடாமற்சொற்பன விந்தி ரசாலங்கள்போலப்போகத்தெரிசனங்கொடுக்கின்றபடியினாலே பிராரத்துவம் ஞானத்தைக் கெடாதென்றேயுத்தரம். (௬௯)

ஞானந்தான் பிராரத்துவத்தைக் கெடாதோ வென்கின்ற சங்கைக்கு.

ஞானம்வந்தவுடனே செகத்துத்தடைபட்டுப்போனாற்பிரா ரத்துவத்தைக் கெடுக்குமென்றறிக அப்படியேகெடாமல் மா யாமயமென்று தோற்றுகையினாலே ஞானத்திற்கும் பிராரத்து வத்திற்கும் விரோதமில்லையென்றுத்தரம். (௭௰)

பாத்தோரவத்தையிலே எல்லா மாத்துமாவாய்ப்போய்பொ ழுது எவ்வெந்தவிந்திரியத்தினாலே எந்தவிடயத்தைப்போசிக்க ப்போகிறானென்கின்ற வேதம்ஞானம்வந்தவுடனே சகலமுந்த டைபட்டுப்போமென்றல்லவோசொல்லுகிறது ஆகையினாலே ஞா னிக்குப் பிராரத்தபோகமெப்படிக்கூடுமென்கின்ற சங்கைக்கு.

இந்த வேதம் சுழுத்தியையும் விதேககைவல்லியத்தையுஞ் சொல்லுகிறதேயல்லாமற் சீவன்முத்தியைச்சொல்லவில்லையென் றும் வியாசர் சூத்திரத்திலேசொல்லுகிறதென்றுமுத்தரம். (௭௧)

நான் சொன்ன அருத்த மற்றப்படி கூடாதென்கின்ற சங் கைக்கு.

வியாக்கிரமவர்க்கர்முதலான பூர்வாசாரிகளுக்குந் தொய்த திஷ்டி யிருந்தபடியினாலே ஞான மில்லையாகவேணுமென் றுத் தரம். (௭௨)

அவர்களுக்குத்தொய்ததிஷ்டியில்லையென்கின்றசங்கைக்கு

அப்போது அவர்கள் சிஷ்டனைக்குறித்து ஞானஞ் சொல் லாமலிருக்கவேணும் யப்படியல்லாம லவர்களுக்கு உபதேசம்ப ண்ணின சாஸ்திரமிருக்கிறதென்றுத்தரம். (௭௩)

அவர்களுக்குப் பிரபஞ்சந்தோற்றாத நிருவிகற்ப சமாதியி லே ஞானமுண்டென்கின்ற சங்கைக்கு.

இந்தப் பட்சத்துக்குச் சுழுத்தியு ஞானமாகவேண்டுமென் றுத்தரம். (௭௪)

சுழுத்தியிலே நான் பிரமமென்கின்ற ஞானமில்லையேயெ ன்கின்ற சங்கைக்கு.

ஆகையினாலே நான் பிரமமென்கின்ற சீவன்முத்தியேஞா னம் செகத்தை மறைக்கின்றதல்லவென்றேயுத்தரம். (௭௫)

இந்த விரலையுங்கூடியே ஞானமென்கின்ற சங்கைக்கு.

துவிதந்தோற்றுதற்கே ஞானமென்கின்ற வுன்னுடைய பட்

சங்களுக்கு முண்டு கொசுருகூப்பிடுகிற ... கையி
ருல் நிருவிகற்பசமாதி ஞானமுங்கட ... லென்
றுத்தரம். (௭௬)

ஆகையினாலாத்துமவிசாரமே ஞான ... மலமின்
றதல்லம்போலே யிருக்கிறதென்கின்ற சங்கைக்கு.

இந்தச் சித்தாந்தந் தெரிந்தபோதே நீயகிருதகிருத்திய
னென்றுத்தரம். (௭௭)

பொல்லாதமனதை நிறுத்தத்தேவையில்லையோவென்கின்
றசங்கைக்கு.

நாட்டமானவிடயத்தை மாயாமயமென்றுபார்க்கின்றதே
மனதை நிறுத்துகிறதென்றுத்தரம். (௭௮)

எந்தப்போகத்தை இச்சிக்கப்போகிறானென்கின்ற சொல்
லுக்கு அர்த்தமாயிற்று யாருக்குப் போகநிமித்திய மென்கின்ற
சொல்லைச் சொல்லுகிறதென்கின்ற சங்கைக்கு.

பொசிக்கின்றவனே இல்லையென்று சொல்லுகிறதென்றுத்
தரம். (௭௯)

பொசிக்கின்றவனேதினாலே யில்லையென்கின்ற சங்கைக்கு.

கூடத்தர் நிருவிகாரியானபடியினாலே சுகதுக்கபோகவிவ
காரநமக்கில்லை சிதாபாசனாரோபமானபடியினாலே யவனுஞ்
சுகதுக்கவிவகாரம்பொசிக்கின்றவனல்ல வப்படியிருக்க அதிட்
டானத்தைவிட்டாரோபமிராதபடியினாலே இருவரையுமொருவ
ராகக்கண்டு தாதாத்மியத்தினாலே யிவனே பொசிக்கின்றவனென்று
லோகத்தார் சொல்வதேயல்லாமல் விவேகம்பண்ணினால் பொசி
க்கின்றவனே யில்லையென்றுத்தரம். (௮௰)

இப்படியானாலு மாத்துமாத் தானே பொசிக்கின்றவனென்
கின்ற சங்கைக்கு.

ஆத்துமா யாரென்று விசாரிக்குமிடத்திற் சகல வேதங்களு
க்கு மிந்த இலெளகிகாத்மாவைத் தொடங்கி யாநந்தமயகோச
பரியந்தங் கழித்துப்போட்டுக் கூடத்தனையல்லவோ ஆத்துமா
வென்றுசொல்லுகிறதென்றுத்தரம். (௮௧)

சிதாபாசனில்லாதவனானால் அஞ்ஞானதிசையிலே தானெப்
படிப்பொசிக்கின்றவனானானென்கின்ற சங்கைக்கு.

கூடத்தருடையசத்தைத் தன்னிடத்திலேயிருக்கின்றதுகொ
ண்டு நமக்குப் போகமுண்டாமையென்று கலந்து விடயங்களைக்கா
ங்க்ஷித்தானென்றுத்தரம். (௮௨)

இப்படியானால் இவனிடத்திலே பண்ணவேண்டிய அநுசந்
தானமேதென்கின்ற சங்கைக்கு.

இலெளகீகத்திலே பொசிக்கின்றவன் பிரியமாயிருக்கின்ற

விடயங்களைக்காட்டினுந் தன்னைப் பிரியமாய்க் காண்கின்றாற் போல விவேகியுங் கூடத்திருச்சியமெல்லாம் அப்பிரியமென்று தள்ளிக் கூடஸ்தனையேபிரியமாய்க் காணவேண்டுமென்றுத்தரம்.

பிரியமாய்க் காணுகிறதெப்படியென்கின்றசங்கைக்கு.

பாமரனாயிருக்கின்றவன் மாலைசந்தனமுதலானவிடயத்திலே பண்ணுகின்றவிச்சையுஞ் சாவதானமாகவே வாதப் பண்ணவேண்டுமென்கின்றவன் காவிய நாடகசாஸ்திரங்களிலே பண்ணுகின்ற தீவிரதரவிசாரத்தையுங் கர்மியுபாசகன் செய்யும் யாகவுபாசனைகளிலே பண்ணுகின்றவிசுவாசத்தையும் யோகியானவன் மனதை நிறுத்தப்படுகின்ற வருத்தத்தையுங் கூடஸ்தனிடத்திலே பண்ணவேணுமென்றுத்தரம். (௮௬)

இப்படிப்பண்ணினால் வரும்பலனேதென்கின்றசங்கைக்கு

போகம் வித்தை புண்ணியலோகம் அணிமாதியஷ்டமாசித்தி இவற்றைப்பெற்ற பேருக்குப்பலன்வருகின்றாற்போலவுங் கூடஸ்தராயிருக்கின்ற தன்னை மூன்றவஸ்தையுங்கடந்தவராய் ஏகராய்ச் சச்சிதானந்தராய் சதாசிவமாய்க் கண்டவன் சொற்பனப்போலப் புண்ணியபாவத்தொடக்கமற்று முத்தனுவானென்றுத்தரம்.

இப்படிக் கண்டவனுக்குப் போகிக்கின்றவனாரென்கின்ற சங்கைக்கு.

அஞ்ஞானியாயிருக்கின்ற சிதாபாசனுக்கென்றேயுத்தரம்.

இவன் சாட்சியைவிட்டிராதபடியினா லிவனைத்தொட்டுப் போகங்கள் சாட்சியிடத்திலு மாரோபிக்கப்படாவோவென்கின்றசங்கைக்கு.

சிதாபாசனோரவத்தையிலே கண்டதோரவத்தையிலேகாணுதமாயாமயத்துக்குளகப்பட்டவனானபடியினாலே தாலியில்லாமற்போகிறவனுக்கு மன்மீட்டிச் சாகக்கிடக்கிறவன் பெண்கொள்ள வாஞ்சியாததுபோலத் தனக்குளகப்பட்டபோகம்வேண்டான் முன்போலே அனேகம்போகிக்கிறனென்று சொல்லுகிறதற்கு மூக்கனையன்போல ருன்றிப் பிராரத்தபோகம் போகிக்கின்றபடியினாலிதைச் சாட்சியிடத்திலே யெப்படி யாரோபிப்பாருமையினாலே வேதமும் போகிக்கிறவனில்லையென்று சொல்லுகிறதென்றுத்தரம். (௮௭)

சரீராநுதாபமில்லையென்கின்ற வேதத்துக்கு அர்த்தமெப்படியென்கின்ற சங்கைக்கு.

ஞானிக்கு மூன்றுசரீரத்திலேத்தியாகமும்போனபடியினாலே மூன்றுசரீரத்தின் துக்கங்களுமவனைத் தாபப்படுத்த மாட்டாவென்றேயுத்தரம். (௮௮

சரீரமுமன்றெனவிவைகளிலே யெப்பொழுதுங் காயிருக்கின்ற னவைவிடாது விட்டெப்படித் தேவையில்லையென்கின்ற சங்கைக்கு

தூலசூக்குமங் காரணமென்று சரீரமூன்றாயிருக்கின்ற ன இவற்றில் வாதபித்த சிலேட்டுமமுதலான வியாதியுடைக்குந் மூமிச்சல்முதலான மூடையுந் தூலசரீரத்துக்காம் காமக்குரோத லோபமோக மதம் இலச்சை பயமுதலானவையுஞ் சமை தெமை சிரத்தை பக்திமுதலானவையுஞ் சூக்குமசரீரத்துக்காம் பலப்படக் காரியசரீரத்தையுண்டாக்குகிறதே காரணசரீரத்திற் காம் தூலவிட்டுப் புடைவையிராது மயிரைவிட்டுக் கம்பளமி ராது மண்ணைவிட்டுக் கட்டியிராதுபோலவும் அதற்கதற்குச் சொ ன்னதாம் சரீரங்களைவிட்டுச் சுபாவங்களேயில்லை இம்மூன்றுசரீரங் களுக்குஞ் சொன்னதாமே சுபாவசித்தம்போலச் சிதாபாசனு க்குப் பிரகாசமே சுபாவமல்லாமலவனுக்கொருசாமூஞ் சுபாவ மல்ல விப்படிச் சிதாபாசனுக்கு முதலாயில்லாத சுகம் சாட்சி க்குவரப் பிரசத்தியில்லையாகையால் வேதமுங்குரவுக்குச்சரீரா நுதாபமேயில்லையென்று சொல்லிற்றென்றுத்தரம். (௮௯)

இப்படியில்லாதசுகமுன்னே யெப்படித்தாபித்ததென்கின்ற சங்கைக்கு.

அஞ்ஞானத்தினாற் புத்திரசாதிகள்தபிக்கின்றதைத்தான் தபிக்கிறேனென்கின்ற மூடர்கள்போலச் சரீரத்திரயத்தையுஞ்சா ட்சியையுங் கூட்டித் தன்னுடைய சுரூபமாக வெண்ணிக்கொ ண்டு சரீரந்தபிக்கின்றதைத் தான் தபிக்கிறதாகப்பிரமித்தானெ ன்றுத்தரம். (௯௰)

ஞானம்வந்தபின்பாகிலுந் தபியாமலிருக்கவேண்டுமேயல் லாமல் திரும்பத்தபிப்பானேனென்கின்ற சங்கைக்கு.

விவேகத்தினாலே பிராந்தியைத்தள்ளித் தன்னைச்சாட்சியா கவறிந்தபின்பு முத்திசாதனம்போய்விட்டது இந்தப்பழுதைக் காக ஏதுக்கோடி யிடப்பொடிந்துக் கொண்டோமென்கின்ற வெறுப்பைத்தாபமென்கின்றோமென்றுத்தரம். (௯௧)

சாட்சி நானென்றறிந்தாற்போதாதோ திரும்பிப்பலப்பட வருசந்தானம் பண்ணுவானேன் பலப்படத் தேகம்நானல்லவெ ன்று பாவிப்பானேனென்கின்ற சங்கைக்கு.

இல்லாத சங்சாரத்தையும்முடையம்பரிமேல யாரோபித்த தைப் பொழுந்துக்கொள்ளுமென்று சாட்சியைச் சரணமாகவ டைகிறதாவும் பல்லிப்பாயம்போகப் பிராச்சித்தம்பண்ணிக் கொள்ளுகிறதுபோல மந்திசருமம்விட்டுப் போகத்தக்கதாக வருசந்தானம் பண்ணுவது பழங்கிலேயிலேயகப்பட்ட பிராய

னைவெகு பிராச்சித்தம் பண்ணினாலுமேபிராமணனோடேகூடினபின்பு திரும்பப்பறங்கியைக்கண்டாலோ திருந்போலேதேகந்தானல்லவென்று அநுசந்தானம்பண்ணுகிறதென்றுத்தரம்.

ஞானியாயிருக்கிறவன் முன்போலே பிரபஞ்ச வியாபாரம்பண்ணாமல் நாணுவானென்கின்ற சங்கைக்கு.

குய்யத்திலே குட்டப்பிடித்தவேளையறிந்தவன்முன்னே நாடகம்பண்ண நாணுகின்றாற்போலே சிதாபாசனுந் தன்னைமாயாமயமென்று மறிந்தபின்பு தன்னைக்கருத்தாவென்று சொல்ல நாணுவானென்றுத்தரம். (௯௩)

இப்படி ஞானம்வந்தபின்பு நடுக்கங்களும் நாணங்களும் வரலாமோவென்கின்ற சங்கைக்கு.

இளவயதாயிருக்கின்றவன் இராச்சியத்திற்காக இராசாவையுபசரிக்கின்றாற்போலப் பிரமத்தையறிந்தவன் பிரமமாவேனென்கின்றவேசங்கேட்டுப் பிரமத்தைக் கெம்பீரமாக வநுசந்தானம்பண்ணுகின்றதேயல்லாமற் பயமில்லையென்றுத்தரம். (௯௪)

பிரமஞானஞ் சிதாபாசனைக் கொல்லவந்தபடியினாலே யாருந் தன்சாகமருந்துகுடிப்பார்களோவென்கின்றசங்கைக்கு.

தேவனாகலாமென்கின்றசந்தோஷத்தினாலேகங்காப்பிரவேசம்பண்ணுகின்றாற்போலப் பிரமமாகலாமென்கிற சந்தோஷத்தினாலே ஞானத்தை அப்பியாசிப்பானென்றுத்தரம். (௯௫)

கங்காப்பிரவேசமாரம்பித்தவுடனே தேவனாகின்றாற்போல ஞானிகளுடனே பிரமமாகவில்லையென்கின்ற சங்கைக்கு.

ஆரம்பித்த கருமமுடிந்து சரீரம் நசிக்குமட்டும் மனுஷனென்கின்றபேர் நிற்கின்றாற்போலப் பிராரத்ததேகம் விழுமளவுஞ் சிதாபாசனென்கின்றபேர் போகாதென்றுத்தரம். (௯௬)

பழுதையென்றறிந்தவுடனே பாம்பென்கின்றபயம்போகவில்லையோவென்கின்ற சங்கைக்கு.

பழுதையென்றறிந்தபின்பு பாம்பென்கின்றபய மெள்ளத்தணிகிறாற்போலவும் பத்தாவானுக்கு இடித்துக்கொண்ட புண் மெள்ளவாறுகிறாற்போலவும் பிராரத்தகன்மபோகம் பொசிக்க மெள்ளத்தொலையவேண்டுமென்றுத்தரம். (௯௭)

ஞானம்வந்தும் பிராரத்தகன்மதுக்கமிருந்தால் துக்கநிவிர்த்தியென்கின்ற வாக்குமவத்தை யெப்படிக்கூடுமென்கின்ற சங்கைக்கு.

பத்தாவானைச் சாகாமற்கண்ட சந்தோஷமே புண்வேதனையைத் தெரியவொட்டாததுபோலத் தானேபிரமமென்றமுத்தனுன் சந்தோஷம் பிராரத்த துக்கத்தைத் தெரியவொட்டாது ஆகையினாலே யவ்வவத்தைக்கூடுமென்றேயுத்தரம். (௯௮)

சிஷ்யபாசனுடைய ஆறுவகையுந் தெரிந்து இனித்தடையற்ற வாநந்தத்தை விபரமாகச் சொல்லுமென்கின்றசங்கைக்கு

இகலோகபரலோகங்களைக் குறித்துப் பண்ணவேண்டியகருமமெல்லாம் பண்ணி முடிந்தபடியினாலே மோக்ஷமும் பிரமமுந் நாமென்றறிகிறபடியினாலே மனதிலே யொருகுறையுமில்லையென்றறிந்தது தடையற்ற வாநந்தமென்றுத்தரம். (௬௬)

காண்டத்திரயத்திலுஞ்சொன்ன வநுஷ்டானத்தை யொன்றும்பண்ணாமலிருக்கையிலு மெல்லாம்பண்ணிமுடிந்ததெப்படியென்கின்றசங்கைக்கு.

எல்லாந் தீர்ந்தகடன் முறியாக வகுப்பற்றதென்கின்றதை ஞானியுடையவநுசந்தானத்தாலே யறியலாமென்றுத்தரம். (௬௭)

பண்ணவேண்டியவை அறியவேண்டியவை எல்லாந்தேவையற்றுப்போன வநுசந்தானத்தை யெனக்குத் தெரியச்சொல்லுமென்கின்ற சங்கைக்கு.

நான் துக்கியென்றிருக்கிற வஞ்ஞானிக்குப் பூமி தனம் புத்திரமித்திரர் களத்திரம்வேண்டுமென்று இகலோகசஞ்சாரத்திலே யலையவேண்டும் பரமாநந்தபூரணமாயிருக்கின்ற நமக்குஅந்த மாயாமயத்தைக்குறிக்கத்தேவையில்லைப் பரலோகத்தையடையவேண்டினவனுக்கு அதற்கேற்றகன்மாநுஷ்டானம்பண்ணவேண்டும் சர்வலோகமு மாயாமயமாய்ப்பார்க்கின்றநமக்கு ஒருகன்மமுந் தேவையில்லைப் பிரமலோகத்தை யடையவேண்டினவன் வேதாந்தசாஸ்திரங்கற்கவேண்டும் நிரதிகாரியாயிருக்கின்ற நமக்கு ஒருகன்மமுந்தேவையில்லை தத்துவத்தை யறியவேண்டினவன் வேதாந்தசிரவணம் பண்ணவேண்டு மறிந்தநமக்குஅதுவுந் தேவையில்லை சந்தேகமுள்ளவன் மனனம்பண்ணவேண்டும் தேகம் நாமென்று ஒருக்காலுமெண்ணோம் சந்தேகமற்றபிரமமாயிருக்கின்ற நமக்கு அந்தமனனந்தேவையில்லை விபரீதபாவனையுள்ளவன் நிதித்தியாசனம்பண்ணவேண்டும் தேகவிலட்சணனாயிருக்கின்ற நமக்கு நிதித்தியாசனந் தேவையில்லை விட்சேபமுள்ளவன் சமாதியிருக்கவேண்டும் சின்மாத்திரமாயிருக்கின்ற நமக்கு அதுவுந்தேவையில்லை விட்சேபமுஞ் சமாதியுமந்தக்கரணத்துக்கேயாகையினாலே பண்ணவேண்டியவெல்லாம் பண்ணிமுடிந்தனவென்றேயுத்தரம். (௬௮)

விவகாரமிருக்கின்றபோதே யுமக்குவிபரீதபாவனை யெப்படியில்லை நித்திரை பிச்சை முழுக்குச் சௌசம் இந்த நான்கும் நீர் பண்ணக்கண்டோம் உமக்கெப்படி யொருகருமமில்லையென்கின்ற சங்கைக்கு.

விவகாரஞ் சுபவன் நிருத்தைபோலேவாசனையினாலேநடக்கி

ன்றதேயல்லாமல் நமக்குவிபரீதபாவனையில்லை பிறத்தியார் நெருப்பென்றதுகொண்டு ஞன்றிமணிச்செடிக்கு வேகாததுபோல நீ நமக்குக் கருத்தாவென்றெண்ணினதுகொண்டு நாம்நித்திரை முதலானவை பண்ணினவரல்லோமென்றுத்தரம். (௰௨)

இப்படி வாசனையிருக்கிலே வருகிறவிவகாரம் உமக்குப் போகவேண்டாமென்கின்ற சங்கைக்கு.

பிராரத்தகன்மந் தொலைந்தாலொழிய விவகாரம் போகாதென்றுத்தரம். (௰௩)

ஆனாலும் உம்முடைய விவகாரத்துக்கு விதியேதென்ற சங்கைக்கு.

லௌகிகமாகிலும் வைதிகமாகிலும் முத்தண்டமாகிலும் பிராரத்தமுள்ளபடியே நடக்கிறதை விதியென்றுத்தரம். (௰௪)

இப்படியானால் உம்மிடத்திலே சகலர்க்கும் பிரமாணபுத்திவர வும்மைப்பெரியவரென்று ஞானங் கேட்பாருமில்லை உம்முடையஞானமுமக்கே பிரயோசனமல்லாமல் பிறனாயிட்டேற்றயாட்டாதென்கின்ற சங்கைக்கு.

ஆனால் நான் கிருதகிருத்தியனானாலும் லோகானுக்கிரகநிமித்தியமாய்த் தேவார்ச்சனை சவுசமுதலானவைகளைக் காயப்பண்ணப்பட்டும் பிரணவசெபம் வேதாந்தபாட முதலானவற்றை வாக்குப்பண்ணப்பட்டு மூர்த்தித்தியானம் பிரமத்தியானத்தை மனதுபண்ணப்படவு மிவைகளை நாம் பண்ணினவருமல்ல பண்ணச்சொன்னவருமல்ல இப்படி நாமிருந்தால் கன்மிக்கும் நமக்குஞ் சண்டையற்றுப்போயிற்றே நம்முடைய ஞானம்பலருக்கும் உபகாரமாமென்றுத்தரம். (௰௫)

கன்மத்துக்கு நிர்ப்பந்தமெதிலேயென்கின்றசங்கைக்கு

ஞானியாலே பொய்யென்றுதள்ளப்பட்ட திரிவிதகரணத்தினுற் கன்மத்துக்கு நிர்ப்பந்தமல்லாமற் சாட்சியிடத்திலே நிர்ப்பந்தமில்லை இந்த திரிவிதகரணத்திலே கன்மிகள் கன்மத்தைமுடிக்கட்டும் நமக்கானியென்ன ஞானத்திற்கு நாமசங்கனென்கின்றதிலே கன்மத்துக்கே நிர்ப்பந்தமல்லாமற் சாட்சியிடத்திலே நிர்ப்பந்தமில்லையானதால் திரிவிதகரணங்களும் கன்மத்தை விலக்கத்தேவையில்லை ஞானிதன்னைப்பிரமமென்றறிந்துகொண்டு கன்மிக்கானியேதென்றுத்தரம். (௰௬)

இப்படியெல்லாருமறியாமலாத்துமாவைத் திரிவிதகரணத்தோடேகூடக்கருத்தாவென்ற கன்மிகளும் ஞானம்வந்தவுடனே திரிவிதகரணத்துக்கு விலட்சணமுள்ள ஞானிக்கும் ஒன்றுக்கொன்று சண்டைக்கு நிற்பானேனென்கின்ற சங்கைக்கு

அவர்களஞ்ஞானத்தினாலே செவிடர்கதைகேட்டாற்போலச் சண்டைக்குநிற்கிறார்களென்றுத்தரம் (௰௬)

ஞானம்வந்தவனுக்குப் பிறகாக்கு நிந்தாதிலுங்கருமப்பிறவிர்த்தியுசிதமல்ல நிவிர்த்தியாகச் சன்மார்க்கத்திலேயிருக்கவேண்டுமென்கின்ற சங்கைக்கு.

ஞானிக்குப் பிறவிருத்தியிலும் பிரயோசனமில்லாவிட்டால் நிவிர்த்தியிலேயும் பிரயோசனமில்லையென்றுத்தரம். (௰௭)

நிவிர்த்திஞானத்துக்குச் சாதனமல்லவோவென்கின்ற சங்கைக்கு.

அறிந்தபிற்பு சாதனமேதுக்கென்றுத்தரம். (௰௮)

தோற்றுகின்ற செகத்தினாலே இன்னமஞ்ஞான பிராந்திவந்தாலுஞ் சாதனத்தை யனுஷ்டிக்கத்தாழ்வில்லையென்கின்ற சங்கைக்கு.

உயிரோடேயிருக்கின்ற எலி பூனையைக்கொல்லாதென்றுஞ் செத்துப்போன எலி பூனையைக் கொல்லுமோவென்கின்றது போலவும் பாசுபதாஸ்திரத்தினாற் கொல்லப்படாதவனை நாணற் கழியோகொல்லப்போகிறதென்றதுபோலவும் அநாதியிலேயஞ்ஞான தற்காரியமானதெல்லாங் கூடிக்கொல்லமாட்டாதபோதமே தானாய்த்தான் என்கின்ற திடக்கியான முண்டானவனுக்கும் ஞானதற்காரியங்கள் திரும்பவும் பந்தப்படுத்துமென்கின்றது தன்னுடைய புத்தித்தாழ்வேயொழிய வேறொன்றுமில்லையென்றேயுத்தரம். (௰௯)

அஞ்ஞானதற்காரியந் தடைபட்டுப்போனாலுஞ் செகத்தோற்றுகின்றதைக்கண்டுசொன்னோமென்கின்றசங்கைக்கு

தோற்றினாலென்ன இத்தனையும் நாமல்லவோ கொன்றோமென்று பரிகளம் பார்க்கின்றபோது இராசாவுக்கு ஒதிலேதிருத்தியொழிய பயமில்லை இப்படிக்கொத்த போதஞானுக்குந் தேகாதிகளிடத்திலேயிருக்கிற பிறவிருத்திகளினாலும் நிவிர்த்திகளினாலும் பிரயோசனமொன்றுமில்லையென்றுத்தரம். (௨௰)

பிறவிர்த்தியாகாது நிவிர்த்தியாமென்கின்றதாருக்கென்கின்ற சங்கைக்கு.

சொர்க்கமோட்சத்தைக்குறித்து எத்தனம்பண்ணுகிற வஞ்ஞானிக்கென்றுத்தரம். (௨௰௧)

இப்படிக்கொத்த அஞ்ஞானிகளுடனே ஞானி கூடியிருக்கும்போது செய்காரியமெப்படியென்கின்ற சங்கைக்கு.

குழந்தைப்பிள்ளையானது தகப்பனை யடித்தாலும் வைதாலுஞ் சீராட்டுகிறாற்போல மனதிலே கிலேசமில்லாமல் அஞ்ஞா

லிகள் தூஷித்தாலும் பூஷித்தாலும் திரும்பி யவர்களைத் தானு மப்படிச்செய்யாம லவரவர்களுக்குச் சம்மதமாகத் திரிவிதகர ணத்திலும் கருமத்தைப் பண்ணிக்கொண்டு அவர்களுக்குஞா னம்மேற்படவைக்கிறதே செய்காரியமென்றுத்தரம். (௱௰௨)

ஞானிக்கு ஞானப்பியாசம் பண்ணுகிற பேர்களுடனே கூடியிருக்கும்போது செய்காரியமேதென்கிறசங்கைக்கு.

ஞானங்களைப்போதிக்குங் கன்மாதிகளைத் தூஷித்துத் தானுமந்தக் கன்மாதிகளைத் துறந்துகாட்டவேண்டியதேயுத்தரம்

ஞானிதனித்திருக்கும்போது செய்காரியமேதென்கிறசங்கைக்கு.

தன்னுடைய திருப்தியாநந்தத்தைக்கண்டு மகிழ்ந்து பிரமமே நாமென்றறிய வெவ்வளவுபாக்கியம்பண்ணினேமோ நம்முடைய வஞ்ஞானமெத்தவழியாய்ப்போயிற்றே நாம்பண்ணின வதிஷ்டமின்றோடே நமக்கொருசம்சார மில்லாமற்போயிற்றே நமக்குப் பிரமாநந்தம் வெட்டவெளியாய்த் தோற்றக்கிடைத்ததே லோகத்திலே யெல்லாரையும்பிடித்த கர்த்தவியங்களிலேநமக்கொன்றுந் தேவையற்றுப் போன பாக்கிய மேதோ வெல்லாருமடையவேண்டுமென்கிற பிராப்பியம் நாமடைந்தேமே நமக்கித்தப்பாக்கியத்தையுங் கொண்டுவந்துவிட்ட சாஸ்திரத்தைப்புகழ்வேனோ இச்சாஸ்திரத்தையநுபவத்துக்குவரப் பயிற்றுவித்த குருவைப்புகழ்வேனோ எவ்வளவுபுண்ணியத்தா லிப்படிப்பலித்ததோ நம்முடைய புண்ணியத்துக்கு நம்முடையஞானத்துக்கு நம்முடைய வாநந்தத்துக்கு மொன்றுமொப்பாரிகாணேனேயென்று சுயாநுபவமே படிந்ததோவென்று ஆநந்தமநுபவிக்கின்றதே செய்காரியமென்றுத்தரம். (௱௰௪)

இந்தத் திருப்தி தீபிகையை யநுசந்தானம்பண்ணிவருகின்றவன் பிரமாநந்தத்திலேயழுந்தி நித்தியதிருப்தியையடைவன்.

திருப்திதீபிகை-முற்றுப்பெற்றது.

மூன்றாவது.

கூடத்தர் தீபிகை.

வித்தியாரண்ணியசுவாமிகள் வேதாந்த விரிவிலே விசாரிக்கமாட்டாதவர்களுக்குக் கூடஸ்தர்தீபிகையிலே தேகப்பதார்த்தவிவேகம்பண்ணும்படியருள்செய்கிறார் தேகப்பதத்திற்குவாச்சியார்த்தமென்றும் லட்சியார்த்தமென்றுமிருவகையும்பொருந்தியிருக்கின்றதென்றுந் தேகார்த்தமேதென்கிற சங்கைக்கு.

தொம்பதார்த்த வாச்சியார்த்தஞ் சிதாபாசன் இலட்சியார்த்தங் கூடஸ்தர் இட்டாந்தமேதென்றால் கண்ணாடியிற் பிரதிபிம்ப வெயிலுஞ் சுபாவவெயிலு மொருமைப்பாடாக வொரு சுவரில் விளங்குகின்றாற்போலக் கூடஸ்தருஞ் சிதாபாசனு மொருமைப்பாடாய் ஒருதேகத்தையறிகின்றார்களென்றுத்தரம்.

இவர்களிருவரு மெதினாலே யொருமைப்பாடாய்த் தோற்றுகின்றார்களிவர்களைப் பகுத்தறியும்வழி யெப்படியென்கின்ற சங்கைக்கு.

அவிவேகத்தினாலே யொருவனாய்த்தோற்றுகின்றது ஓரோரவத்தைகளிலே யேகதேசமாகத் தோன்றிமறைகின்ற சிதாபாசனையும் நித்தியபிரகாசமாயிருக்கின்ற கூடஸ்தனையு மேகதேசத்திலே யுபாதியினாலே யலைகின்ற வெயிலையு மகண்டவெயிலையும்போலக் குறிப்பினாலே யறியென்றுத்தரம். (௨)

சரீரத்திற்குப்புறம்பேவிடயஞானம்வரும்போது கூடஸ்தனையுஞ் சிதாபாசனையும் பகுத்தறியும்வழி யெப்படியென்கின்ற சங்கைக்கு.

கடஞானம்வருகின்றது சிதாபாசனுக்கிருக்கின்ற தனக்குக் கடோவிருத்திஞானம்வருகின்றது கூடஸ்தராயிருக்கின்றதனக்குக் கடமென்றறிந்தவுடனே யறிந்தவன் சிதாபாசன் அதனைக் கண்டவர் கூடஸ்தரென்றுத்தரம். (௩)

கடஞானம் வருகிறதற்குமுன்னும்பின்னுங் கடத்திலே கூடஸ்தரிருந்ததற்கடையாளமேதென்கின்றசங்கைக்கு

கடஞானம்வருகிறதற்குமுன் னறியப்படாததாகவும் பின்னறியப்பட்டதாகவுங் காண்கின்றவர் கூடஸ்தர் இதற்குத் தன்னறிவே யடையாளமென்றுத்தரம். (௪)

கடமொருகாலத்திலறியப்பட்டதாகவும் ஒருகாலத்திலறியப்படாததாகவுஞ் சாட்சியிடத்திலிருவகையுந்தோற்றுவானேன்கின்றசங்கைக்கு.

எக்காலத்திலு மொன்றாயிருக்கின்ற சுபாவசைதந்நியத்தினிடத்திற் கற்பிக்கப்பட்டகடமஞ்ஞானத்துடனேகூடியிருந்தபோது அறியப்பட்ட தாகவு மஞ்ஞானத்துடனே கூடாமலிருக்கும்போதறியப்படாததாகவுந் தோற்றுமென்றுத்தரம். (௫)

ஞானமாவதேது அஞ்ஞானமாவதேதென்கின்றசங்கைக்கு

லோகாந்தகுந்தம்போலச் சிதாபாசார்த்தவிருத்தியே ஞானந்தோற்றாவற்றபொருளே யஞ்ஞானமென்றுத்தரம். (௬)

விருத்திக்குமுன் சிதாபாசனில்லாதபடியினாலே அறியப்படாத கடஞ்சாட்சிதானேயறியவேண்டும் விருத்திக்குப்பின்ன

றியப்பட்டது கடமென்கின்றது சிதாபாசனாலறியலாஞ் சாட்சியறிவானென்கின்றது வேண்டாமென்கின்ற சங்கைக்கு.

கடமென்றறிந்தவுடனே சிதாபாசன் விருத்தியினாலே நட்டமாய்ப்போனபடியினாலு மந்த அவகாசத்திற் கூடஸ்தனொத்த விர வேறு சைதந்நியமில்லாதபடியினாலும் விருத்திக்குமுன்னறியப்படாததை யறிந்தவர் கூடஸ்தர்தானே விருத்திக்குப்பின்னறியப்பட்டதென்கின்றதையுந் தோற்றுவிக்கின்றதற்குச்சந்தேகந்தேவையில்லை ஆகையா லிரண்டுகாலத்திலுங் கடத்தையறிகின்றவர் கூடஸ்தர்தானென்றுத்தரம். (எ)

கடஞானம்வந்தவுடனே சிதாபாசன் நட்டமானாலு மவனுடனேகூடி நட்டமாய்ப்போகாமலிருக்கின்ற விருத்தியினாற் கடமறியப்பட்டதென்கின்றது தோற்றலாஞ் சாட்சியினாலென்கின்றது தேவையில்லையென்கின்ற சங்கைக்கு.

சிதாபாசனில்லாதவிருத்தி பிரகாசத்திரவியமானாலும் வெளிமணல்போலசடமானபடியினாலறியப்படுகின்றவத்தோன்றுவிக்கமாட்டாது சாட்சிதானே தோற்றுவிக்கின்றதென்றுத்தரம். (அ)

சாட்சியிடத்திற் கற்பிக்கப்பட்ட கடமஞ்ஞானத்துடனேகூடினாலும் விருத்தியுடனேகூடினாலு மறியப்பட்டதென்னக்கூடாமற்போனாலறியப்பட்டதென்கின்றபேரெதினால்வந்ததென்கின்ற சங்கைக்கு.

சிதாபாசன் பிரதிபலித்ததைத்தொட்டே கடமறியப்பட்டதாயிற்றென்றுத்தரம். (கூ)

சைதந்நியத்துக்குத் தானே யறியப்பட்டதற்கு மூலமத்தக்காரணமானால் முன்சாட்சி சைதந்நிய[illegible]தோவென்கின்ற சங்கைக்கு.

பிறவிர்த்திக்குப்பின் பிரதிபலன் சைதந்நியத்திற்கே பிரயோசனமல்லாமல் முன்னிருந்த கூடஸ்தருக்குப் பிரயோசனமென்னக் கூடாதென்றுத்தரம். (ய)

இப்படியானாற் சாட்சிக்குஞ் சிதாபாசனுக்கும் பேதமேதென்கின்ற சங்கைக்கு.

கடமாத்திரத்தைக்காண்கின்றவன் சிதாபாசனென்றுஞ் சிதாபாசன் விருத்திகடமிவைமூன்றையுங் காண்கின்றவன் கூடஸ்தனென்றுத்தரம். (யக)

இப்படியானாலெல்லாச் சாத்திரகர்த்தாக்களும் விடயஞானத்திலே இரண்டு சைதந்நியத்தையு மேன்பகுத்தறியவில்லையே யென்கின்ற சங்கைக்கு.

ஹேயசார்யகி

கூடஸ்தனொன்று சொல்லாமல து[illegible]ஞானமென்று பெயரிட்டுப் பகுத்தறிவார்களென்றுத்தரம். (௰௨)

அற்பவஞானமாவதெதுவென்கின்றசங்கைக்கு.

முந்தியறிந்தவறிவுதானே பிற்றியறிவுமென்றுருத்தமென்றுத்தரம். (௰௩)

தேகத்துக்குப்புறம்பே சிதாபாசனையும் பிரமத்தையும் பிரித்தறிந்தாற்போலத் தேகத்துக்குள்ளேயுமிவரிருவரையும் பகுத்தறிகிறவழியெப்படியென்கின்ற சங்கைக்கு.

வெளியிலே யிதென்கின்றவிருத்தியுங் கடபடாதி[illegible]விடயமுமவைகளின் அன்வயவிதிரேகத்தையுமறிகிறவரோசாட்சியென்றறிகின்றதுபோலத் தேகத்துள்ளுமகமென்கின்ற விருத்தியுங் காமக்குரோதாதி[illegible]கு விடயங்களுமிவைகளின் அன்வயவிதிரேகத்தையறிகிறவர் சாட்சியென்றுத்தரம். (௰௪)

உள்ளே சிதாபாசத்தோற்றமெப்படிச் சாட்சித்தோற்றமெப்படியென்கின்ற சங்கைக்கு.

காய்ச்சியவிரும்பிலேயிருக்கின்ற வக்கினி அந்தவிரும்பை மாத்திரந் தோற்றுவிக்கிறதேயல்லாமல் வேறே யொன்றையுந் தோற்றுவிக்கமாட்டாததுபோலக்காமக்குரோதாதியாகியவவ்விருத்திகளிற்கலந்திருக்கின்ற சிதாபாசனுந் தான்மாத்திரந் தோற்றுகின்றதேயல்லாமல் அந்நியமாயிருக்கின்றதைத் தோற்றுவிக்கமாட்டான் சாக்கிரசொற்பனத்தில் விருத்தியுஞ் சுழுத்தி மூற்சை சமாதிகளி லிவைகளெல்லாவற்றையுந் தோற்றுவிக்கின்ற நிர்விகாரசைதந்நியமே கூடஸ்தனென்றுத்தரம். (௰௫)

வெளியில் விருத்தியிலறியப்பட்டதையுமறியப்படாததையுங் காண்கின்றவழியாகக் கூடஸ்தனைக்காண்பித்தாலுள்ளில்விருத்திகளினுமந்தவழியாகத்தானே காண்பியாமல் வேறொரு வழியாகக் காண்பித்ததேதென்கின்ற சங்கைக்கு.

உள்ளில் விடயமான விருத்தியானது கடம்போல ஞானமஞ்ஞானமிரண்டோடுங் கூடாததுகொண்டந்தவழிதேவையில்லையென்றுத்தரம். (௰௬)

விருத்தியி லஞ்ஞானவிருத்திஞானவிருத்தி இரண்டுமேயி[illegible]ல்லையென்கின்ற சங்கைக்கு.

விருத்தியானது கடம்போலத் தனக்கந்நியமாகாதபடியி னொருகால[illegible]ஞான விருத்தி வந்ததென்னக் கூடாது அந்நியபதார்த்தத்தி லஞ்ஞானத்தைப் போக்கின்றபடியினு மிந்த விருத்தியிலஞ்ஞானவிருத்திவரக்கணக்கில்லையென்றுத்தரம் (௰௭)

இப்படியுள்ளினும் புறம்பினும் நானென்றுதோற்றுகின்ற

சைதந்நிய மிருவகையென்று சாதித்ததற்குப் பிரயோசனமேதெ ன்கின்ற சங்கைக்கு.

இந்தச் சைதந்நியமிரண்டிற்குள் விகற்பிதமாகவிருக் கின் றவன் சனனமரண சஞ்சாரி யென்றுங் கூடஸ்தராய்ச் சுபாவமா யிருக்கின்றதனுக் கொருகாலுஞ் சஞ்சாரமில்லை யென்கின்றதும் பிரயோசனமென் றுத்தரம். (௰௮)

புத்தியிலே வளைப்பட்ட கூடஸ்தசைதந்நிய சஞ்சாரியாகட் டுஞ் சிதாபாசன் வேண்டாமென்கின்ற சங்கைக்கு.

ஆகாசசைதந்நியத்திற் கோருபாதியிலே வளைப்பட்டது கொண்டு சஞ்சாரம் வருமானால் குடங்குதிரினால் வளைபட்ட சைதந்நியத்திற்குஞ் சஞ்சாரம்வரக்காணோமென்றுத்தரம். (௰௯)

குடம்போல வந்தக்கரணமவிஸமல்லவே சொச்சத்திரவிய த்திலே வளைப்பட்டாற் சஞ்சாரம்வருமென்கின்ற சங்கைக்கு.

வெண்கலமரக்காலால் அளந்ததுகொண்டு ஒட்டிக்கிரட்டி யொன்றுமொன்றாகாததுபோலச் சொச்சத்திரவியத்தினாலே யதிகமில்லையென்றுத்தரம். (௨௰)

பித்தளைமரக்காலும் வெண்கலமரக்காலுஞ்சரியானாலும் வெண் கலத்திலே பிரதிவிம்பங்கண்டதுபோலக் குடத்தைக்காட்டிலும் புத்தியிலே பிரதிவிம்பமதிகமல்லவோ வென்கின்ற சங்கைக்கு.

இப்படியானால் அந்தப்பிரதிவிம்பந்தானே சிதாபாசனவனு க்கே சஞ்சாரமாத்திரமாவதுமில்லையென்றுத்தரம். (௨௧)

உபாதியைத் தவிர ஆபாசனுக்குவேறு சுரூபமல்லாதபடி யினாலந்தக்கரணத்துக்கே சஞ்சாரமாகட்டுஞ் சிதாபாசனுக்குச் சஞ்சாரம்வேண்டாமென்கின்ற சங்கைக்கு.

இப்படியானாற் சரீரத்தைத்தவிர அந்தக்கரணம் புறம்பா கக்காணப்படாதபடியினாற் சரீரத்துக்கே சஞ்சாரமாகவேண்டு மென்றுத்தரம். (௨௨)

சரீரமரித்தாலும் புத்திமரியாதென்கின்ற சாஸ்திரத்தினா லே சரீரத்தைத்தவிர அந்தக்கரணம்வேறாய்வேண்டுமென்கின்ற சங்கைக்கு.

இப்படியானாற் புத்தியைவிடச்சிதாபாசனும் வேறேயுண் டென்று பிரவேசவுபநிடதத்திலே சொன்னபடியினாற் சிதாபா சனுக்கே சஞ்சாரமந்தக்கரணத்திற்குத் தேவையில்லையென்றே யுத்தரம். (௨௩)

பிரவேசவுபநிடதத்திலே புத்தியுடனே கூடினவனுக்குச் சரீரப்பிரவேசஞ் சொல்லுகிறது புத்திக்கப்பாற்பட்டவனு க்குச் சொல்லவில்லை யென்கின்ற சங்கைக்கு.

சூட்சமதேகமென்கின்ற வாக்கியந்தானில்லாவிட்டாற் சரீ

ரங்களு மிந்திரியங்களுஞ் சீவிக்கமாட்டாவென்று ஆத்துமாபிர வேசிக்காவொன்றபடியினாலே யந்தக்கரணத்துக் கந்நியனாயிருக் கின்றவனுக்கே பிரவேசஞ்சொல்லுகிறதென்றுத்தரம். (௨௪)

அந்தக்கரணத்துக் கப்பாற்பட்டவன் அசங்கனல்லவோ அவனுக்கு எப்படிப் பிரவேசங்கூடுமென்கின்ற சங்கைக்கு.

இருவருக்கும் பிரபஞ்சசிருட்டி யெப்படிக்கூடுமோ அப்படியென்றுத்தரம். (௨௫)

அசங்கனுக்குப் பிரவேசசிருட்டியில்லை மாயாகற்பிதனுக் கல்லவோ சிருட்டியுள்ளதென்கின்ற சங்கைக்கு.

பிரவேசந்தானு மவித்தையாகற்பிதனுக்கேயல்லாமல் சங் கனுக்கில்லையென்றுத்தரம். (௨௬)

சிருட்டித்தவனும் பிரவேசித்தவனுங் கற்பிதமென்கின்றத ற்குப் பிரமாணமேதென்கின்ற சங்கைக்கு.

மாயை யவித்தையென்னு மிரண்டுஞ் சீவீசுரனென்கின்ற வ்யாபாசனைக் கற்பித்ததென்கிற வேதமு மிவர்களையுற்றுவிசாரித் தாலல்லாதே நட்டமாய்ப்போகிறவனுபவமேயிருவகைப்பிரமா ணமென்றுத்தரம். (௨௭)

இப்படிச் சீவீசுரர்கள் சைதந்நிய கற்பிதமென்று மிவர்கட் கப்பாற்பட்டவ ராத்துமாவென்றும் வேதத்திலேபகுத்துச்சொ ல்லுகிறதோவென்கின்ற சங்கைக்கு.

சீவீசுரர்கள் பூதபௌதிகபிரகிருதியோடேகூடத்தோற்றிக் கூ டவழிவார்களென்று மப்பாற்பட்டிருக்கின்ற கூடஸ்தர்அவிநாசி யென்றுமபித்திரிக்கு வியாக்கிரவர்க்கர்சொன்னாரென்றுத்தரம்.

இப்படியானால் சரீரமரிக்குஞ் சீவன்மரியாதென்கின்றவே தத்திற்கு விரோதமல்லவோவென்கின்ற சங்கைக்கு.

இந்த வேதம் பூதபௌதிகமோட்சத்தைச்சொல்லுகிறதல் ல அஞ்ஞானவவத்தையில் லோகாந்திரவசனத்தைச்சொல்லுகிற தாகையினாலே யாத்துமாவுக் கந்நியமெல்லா மநித்தியமென்றே யுத்தரம். (௨௯)

இப்படிச் சீவனே யநித்தியனானால் நித்தியனாயிருக்கின்ற பிரமத்தோடே யகம்பிரமமென்கின்ற சமானாதிகரண மெப்படிக் கூடுமென்கின்ற சங்கைக்கு.

முக்கியசமானாதிகரணங் கூடாவிட்டாலுந் தானும் புருஷ னானம்போலும்வாதாசமானாதிகரணங்கூடுமென்றுத்தரம் (௩௰)

இப்படியானால் விவரணாசாரியார் யவாந்திர சமானாதிகர ணத்தைக்கண்டிப்பா னேனென்கின்ற சங்கைக்கு.

நானென்கின்ற சத்தத்துக்குக் கூடஸ்தனை யருத்தமாகப் பண்ணிக்கொண்டு கண்டித்தா ரென்றுத்தரம். (௩௧)

இப்படிக் கூடஸ்தரே நானாகக்கண்டால் தற்பதத்திற்குந் தொம்பதத்திற்கும் அருத்தமேதென்கின்ற சங்கைக்கு.

தேகேந்திரியங்களையுடைய சீவப்பிராந்திக்கு அதிட்டானப் பிரத்தியட்சமும் செகசரீரமும்படைத்த விஸ்வரப்பிராந்திக்கு அதிட்டான பிரத்தியட்சமும் அருத்தமென்றுத்தரம். (௫௨)

தற்பதத்திலுந் தொம்பதத்திலுமொருபிரமத்தைத் தானே யேகதேசங்களாகச்சொல்லு மிரண்டு பதங்களுக்கு மருத்தமேப தமுண்டோவென்கின்ற சங்கைக்கு.

ஆரோபமான சரீரத்தையுஞ் செகத்தையுந்தொட்டுப் பேதமேயல்லாமல் அதிட்டான சைதந்நியமொன்றேயொழிய இரண்டில்லையென்றேயுத்தரம். (௫௩)

பிரத்தியட்சமாய் நிருணயப்பட்டிருக்கின்ற சீவிசுரானோப் பிராந்தியென்பது கூடாதென்கின்ற சங்கைக்கு.

சைதந்நியம்போலே யேகலட்சணமாய் நிருணயமாகாதபடியினாலுஞ் சித்தாகவும் சடமாகவும் நித்தியமாகவும் அநித்தியமாகவும் குழம்பிக்கிடக்கிறபடியினாலேபிராந்தியென்பதற்குத் தப்பில்லையென்றுத்தரம். (௫௪)

பிரபஞ்சத்திலேயேகாந்தியாய்த்தோற்றுகின்றபிராந்தனுக்கும் விவேகிக்குந் தாரதம்மியமேதென்கின்ற சங்கைக்கு:

புத்தியாவதென்ன சிதாபாசனென்கின்றவனார் ஆத்துமாவாவதார் செகத்தாவதெப்படித் தோற்றுமென்கின்றகலக்கமுடையவனே பிராந்தனிவனுக்கே சங்காரமில்லைவிவைகளைய தனதன் சுபாவத்தோடனே பகுத்தறிந்து தான் சச்சிதானந்தமென்று நிச்சயிக்கிறவனே முத்தனென்கின்ற வடையாளமென்றும் வேதாந்தஞ் சொல்கிறதென்றுத்தரம். (௫௫)

நானெப்போதுஞ் சச்சிதானந்தமாயிருக்கின்றதற்குப் பிரமாணமேதென்கின்ற சங்கைக்கு.

மாயாவிருத்திகள் மறைவிருத்திகளுண்டாகிறதற்கு மிருக்கிறதற்கு மழிகிறதற்குஞ் சாட்சியாயிருக்கின்றஆத்துமா சத்தென்பதுகூடு மெல்லாவற்றையு மறிகையினாலே சித்தென்பதுகூடும் பஞ்சகோசங்களை விட்டாலுந் தான்கைவிடாதவனாதலால் வானந்தமென்பது கூடுமாகையினாலே இவரேபரமசிவனென்கின்ற புராணவசனமே பிரமாணமென்றுத்தரம். (௫௬)

இந்தக்கூடஸ்தருக்கநந்நியமாயிருக்கின்ற சீவிசுரர்கள் மாயாகற்பிதமான பூதபௌதிகங்கள்போலச் சடமாகக்காணாதுஞ் சைதந்நியமாயிருக்கின்றவர்களை மாயாகற்பிதமென்னக்கூடாதென்கின்ற சங்கைக்கு.

சகலமானபாண்டங்களும் மண்ணிலேபிறந்தாலுங் காசிக்கும்பங்கள்போலே நிர்மலமாகவிருக்கின்றாற்போல மாயாகற்பிதங்களுக்குள்ளே சீவேசுராளுஞ் சொச்சத்திரவியமென்றறிவாயென்றுத்தரம். (௩௭)

காசிக்கும்பங்கள் பிரகாசமானாலுஞ் சடமாயிருக்கின்றாற்போலச் சீவேசுராளுஞ் சடமாயிருக்கக்காணோமாகையினாலேயிவளை மாயாகற்பிதமென்னக்கூடாதென்கின்ற சங்கைக்கு.

தன்மாத்திரையிற்பிறந்த சரீரவிந்திரியாதிகளுக்குள்ளே மனதுபோதரூபமாயிருக்கின்றாற்போல மாயாகற்பிதங்களுக்குள்ளே சீவேசுராளும்போதரூபமாகவிருப்பார்களென்றுத்தரம்.

மாயை சடத்தைக்கற்பிக்கின்றதேயல்லாமல் சைதந்நியத்தையுங் கற்பிக்குமோவென்கின்ற சங்கைக்கு.

ஒருசீவனிடத்திலேயிருக்கின்ற நித்திராமோகமனேகஞ்சேதனரூபேசுவரர்களைக் கற்பிக்கக்கண்டாற் சீவேசுராளையு மகாமாயை கற்பிக்குமென்கின்றதிலேயாச்சரியமேதென்றுத்தரம்(௩௯

கிஞ்ஞத்துவம் அநீசரத்துவமுதலான சீவகுணங்களை மாயை கற்பிக்குமல்லாமல் சருவஞ்ஞத்துவஞ் சருவேஸ்வரத்துவம் பரிசுத்தியமுதலான கலியாணகுணங்களை மாயை கற்பிக்கமாட்டுமோவென்கின்ற சங்கைக்கு.

பிள்ளைபெற்றவன் பேரிடுகிறாற்போல வீசுரபாவனை கற்பித்தமாயையவர்க்கேற்றதொழிற்கற்பிக்கின்றதிலே யதுபாரமென்றுத்தரம். (௪௰)

இத்தனை வல்லபமாயிருக்கின்றமாயைக்கு ஒருகூடஸ்தனைக்கற்பிக்கச் சத்தியில்லையோவென்கின்ற சங்கைக்கு.

சீவேசுராள்கற்பிதமென்று வேதப்பிரமாணங்களுண்டாற்போலக் கூடஸ்தருமாயாகற்பிதரென்றொருவேதப்பிரமாணமுமில்லை இவரே யுண்மைப்பொருளாகிய வஸ்துவென்று சகலவேதங்களுங் கொண்டாடுகின்றனவாகையினாலுன்னுடையசங்கைக் கிடமில்லையென்றுத்தரம். (௪௧)

இப்படி மாயாகற்பிதமான சீவேசுராளாலே யென்னகாரிய முடியுமென்கின்ற சங்கைக்கு.

மாயை விரியப்பார்க்கின்ற பார்வைமுதற் சிருட்டிப் பிரவேசபரியந்த மீசுரகிருத்தியஞ் சாக்கிரசொற்பன சுழுத்திபரியந்தமுள்ள சங்காரமெல்லாஞ் சீவகிருத்தியமென்றுத்தரம் (௪௨)

கூடஸ்தருக்குக்கிருத்தியமேதென்கின்ற சங்கைக்கு.

அவாசங்கரேயல்லாம லவரிடத்திலொருகிருத்தியமுமில்லையென்றுத்தரம். (௪௩)

இப்படிப் பகுத்தறிந்தவன் எப்படியிருப்பானென்கின்ற சங்கைக்கு.

பெத்தன் முத்தன் பந்தமோட்சவுற்பத்திநாசங்கள் சகலமுமாயாகற்பிதமேயல்லாமல் தனக்குச் சுபாவமாயொன்றுமில்லையென்று கலக்கமறத் தெளிந்திருப்பானென்றுத்தரம். (௬௪)

இப்படி யொன்றுமில்லாவிட்டாற் சீவன்முத்தன் சகத்துமரியாதையெல்லாம் யெதுக்கிலே சொல்லியிருப்பானேனென்கின்ற சங்கைக்கு.

அதிசூட்சுமமாயிருக்கின்ற வாத்துமாவைக் காட்டும்பொருட்டுத் தூலவருந்ததி நியாயமாய்ச்சொல்லுகிறதென்றுத்தரம்.

இப்படியறிந்தவிவேகி பிராரத்தத்தோற்றத்தை யெப்படிக் காண்பானென்கின்ற சங்கைக்கு.

சாத்திரமறியாதவன் மயங்குகிறதுபோல மயங்காமல் மாயையாகிற மேகம் பிரபஞ்சமாகிற மழையை யெப்படிப் பெய்தாலுஞ் சிதாகாசமாயிருக்கின்ற நமக் காவதேது இலாபமேதென்று கவலைகெட்டிருப்பானென்றுத்தரம். (௬௫)

இந்தக் கூடஸ்த தீபிகையை நித்தியமநுசந்தானம்பண்ணுகிறவன் தானே கூடஸ்தரூபமாகவே விளங்குவானென்றுத்தரம்.

மூன்றாவது கூடஸ்த தீபிகை

முற்றுப்பெற்றது

நான்காவது.

தியான தீபிகை.

சாதனசதுட்டயமுள்ள வதிகாரிக்குச் சிரவணமுதலான வநுஷ்டானங்களினாலே வருகின்ற வாக்கியார்த்தஞானத்தை யடைந்து சீவன்முத்தி நிலையும் நிச்சிரத்தத்திலேசொல்லிப் பிரசித்தமாகிய முதலான பிரதிபந்தங்களினாற்கெடுஞ்செயலென திலை யிட்டப்படாதவர்க்கு மோட்சார்த்தமாய்ச்செய்யவேண்டியவநுஷ்டானமேதென்கின்ற சங்கைக்கு.

பிரமவுபாசனையே பண்ணவேண்டியதென்றுத்தரம். (௧)

சகுணவுபாசனைபோல இதற்குக் கிரியையுண்டோவென்னுஞ் சங்கைக்கு.

இந்தத் தியானதீபிகையிலே சொன்னபடி பிரமத்தைத் தியானம்பண்ணுகிறதேயல்லாமல் வேறொருகிரியையுமில்லையென்றுத்தரம். (௨)

இதற்குப் பிரமாணமேதென்கின்ற சங்கைக்கு.

தாயந்திரியமென்கின்ற வுபநிஷத்தே பிரமாணமென்றுத்தரம்

தானாயிருக்கின்ற வஸ்துவை யந்நியமாயிருக்கின்ற வஸ்துவைப்போல வுபாசிக்கக்கூடாதென்கின்ற சங்கைக்கு.

சங்கவாதிபிரமைபோலக் கண்டிங்காணும விருந்தபடியினுபாசனை கூடுமென்றுத்தரம். (ரு)

சங்கவாதிபிரமையாவதேது விசங்கவாதிபிரமையாவதேதென்கின்ற சங்கைக்கு.

மணிப்பிரபையைக்கண்டு மணியென்று நாடுதல் சங்கவாதிப்பிரமை தீபப்பிரபையைக்கண்டு மணியென்றுநாடுதல் விசங்கவாதிபிரமையென்றுத்தரம். (௬)

பிராந்தியாய் நாடினவனுக்குப் பலன் கொடாதோவென்கின்ற சங்கைக்கு.

விசங்கவாதிபிரமைபலன்கொடாது சங்கவாதிபிரமை நாடினபொருள்களைக்கொடுக்குமாகையினாற் பிர்ம்மவுபாசனையுஞ் சங்கவாதிபிரமைபோல முத்தியாகின்ற பலனைக்கொடுக்குமென்றுத்தரம். (௬)

இந்தப் பிரமத்துவவுபாசனைக் கதிகாரியாரென்கின்ற சங்கைக்கு.

பரோட்சஞானியே யதிகாரியென்றுத்தரம். (எ)

உபாசனைபண்ணுகின்றகிரமமெப்படியென்கின்ற சங்கைக்கு

அகண்டாகாசபோதமே தானென்கின்றதே கிரமமென்றுத்தரம். (அ)

இந்த வுபாசனைக்குத் திட்டாந்தமேதென்கின்றசங்கைக்கு

கல்லுந்காணுவிட்டாலுஞ் சாஸ்திரஞ்சொன்னபடி பாவிக்கின்ற மூர்த்திதியானமே திட்டாந்தமென்றுத்தரம். (௯)

பரோட்சஞானத்துக்கு இலட்சணமேதென்கின்ற சங்கைக்கு.

பிரமந்தானென்றறியாமற் பிரமமொன்றுண்டென்று நிச்சயித்ததே பரோட்சஞானமென்றுத்தரம். (௰)

பரோட்சஞானஞ் சந்தேகமானபடியினும் பலனெப்படி கொடுக்குமென்கின்ற சங்கைக்கு.

மூர்த்தித்தியான வுபாசனைபோலப் பரோட்சஞானத்திலேயொருவருக்குஞ் சந்தேகமில்லையாகையாற் சங்கவாதி பிரமைபோலப் பலன்கொடுக்குமென்றுத்தரம். (௰௧)

பிரமத்தைத் தானெனச்சொல்லுகின்ற வேதாந்தத்தைப் படித்து மிவனுக்கு வந்த ஞானபரோட்சமாகக் காரணமேதென்கின்ற சங்கைக்கு.

தேகமே நானென்கின்றவிபரீதபாவனை பிரமத்தைத்தானுகத் தோற்றவொட்டாதென்றுத்தரம். (௰௨)

பரோட்சமாயிருக்கின்ற தொய்தபுத்தியைப் பிரத்தியட்சமாயிருக்கின்ற வஸ்தொய்த புத்தியென்கெடாதென்கின்ற சங்கைக்கு.

பிரத்தியட்சமாயிருக்கின்ற சிலாபுத்தி பரோட்சமாயிருக்கின்ற வீஸ்வரபுத்தியைத்தள்ளாததுபோலப் பிரத்தியட்சமாயிருக்கின்ற வஸ்தொய்தபுத்தியும் பரோட்சமாயிருக்கின்ற தொய்தபுத்தியைக்கெடுக்கமாட்டாதென்றுத்தரம். (௰௩)

சிரத்தையில்லாதவனுக்குச் சிலையிலே யீசுரபுத்திவரக்காரணமேதென்கின்ற சங்கைக்கு.

சிரத்தையுள்ளவனே யதிகாரியல்லாமற் சிரத்தையில்லாதவனைச் சாத்திரத்திலே யெடுத்துக்காட்டத்தேவையில்லையென் றுத்தரம். (௰௪)

வேதாந்தம்படித்தாலல்லாமல் அபரோட்சஞானம் வாராதோவென்கின்ற சங்கைக்கு.

மூர்த்தியுபதேசம்போலப் பிரமத்தையுபதேசம் பண்ணிக்கொண்டாலறியலாமென்றுத்தரம். (௰௫)

சாத்திரவிசாரம்பண்ணாமற் பிரமத்தையுபதேசமாய்க் கேட்டறிகின்றதெப்படியென்கின்ற சங்கைக்கு.

கருமசூத்திரத்தைப் படியாமலுங் கருமானுஷ்டானஞ் சித்தித்தாற்போலவும் ஆகமபுராணங்கள்படியாமல் உபாசனையநுஷ்டிக்கின்றாற்போலவுஞ் சாத்திரவிசாரம்பண்ணச் சத்தியில்லாதவன் மகாத்மாக்களிடத்திலே பிரமமின்னபடியிருக்குமென்கின்றதைக் கேட்டுக்கொண்டு உபாசிக்கலாமென்றுத்தரம். (௰௬)

சாட்சாத்காரமுபதேசங்கொண்டு வாராதோவென்கின்ற சங்கைக்கு

சாத்திரவிசாரமில்லாதவனுக்குச் சாட்சாத்காரம்வாராதென்றுத்தரம். (௰௭)

பரோட்சஞானத்துக்குப் பிரதிபந்தமேதென்கின்ற சங்கைக்கு.

சிரத்தையில்லாததே பரோட்சஞானத்துக்குப் பிரதிபந்தமென்றுத்தரம். (௰௮)

அபரோட்சஞானத்துக்குப் பிரதிபந்தமேதென்கின்றசங்கைக்கு.

விசாரமில்லாததோஷமே அபரோட்சஞானத்துக்குப்பிரதிபந்தமென்றுத்தரம். (௰௯)

சாத்திரவிசாரம்பண்ணினாலுஞ் சிலருக்குச் சாட்சாத்கார மேல்வரவில்லை யென்கின்ற சங்கைக்கு.

விபரீதபாவனையினாலே சாத்திரம்படித்தாலுஞ் சாட்சாத்காரம்வாராமலிருக்குமென்றுத்தரம். (உ0)

சாத்திரம்படித்துஞ் சாட்சாத்காரம்வாராதவனுக்குச் செய்காரியமேதென்கின்ற சங்கைக்கு.

விசாரபலமான சாட்சாத்காரம்வருமளவுஞ் சாத்திரத்தைத் திரும்பத்திரும்ப விசாரிக்கப் பயிர்செயல்வகையினாற் கருட்பநாளிலே டாரியக்குவமாகின்றாற்போல ஞானமுந் திரிகாலவிசாரத்தினால் வருமென்றுத்தரம். (உக)

மரணபரியந்தம்விசாரம்பண்ணின வாமதேவர் சடபரதரிவர்களிருவருக்கு மந்தச்சென்மத்திலே யேன்ஞானமுதயமாகவில்லையென்கின்ற சங்கைக்கு.

பிரதிபந்தத்தினாலென்றுத்தரம். (உஉ)

பிரதிபந்தமாவதேது அதுஎத்தனைவிதமாகவிருக்குமென்கின்ற சங்கைக்கு.

பூதபிரதிபந்தம்-பவுஷியபிரதிபந்தம் - வர்த்தமானபிரதிபந்தமென்று திரிவிதமாகவிருக்கு மிவைகளிற் பூதபிரதிபந்தமாவது மைவிட்ட எருமையிற் பக்ஷச் சந்நியாசியாரிடத்திற் கண்டகதை பவுஷிகப் பிரதிபந்தமாவது சங்கற்பத்துடனே கூடியிருந்து வேதாந்தவிசாரம்பண்ணின வாமதேவருக்குமொருசெனனமுஞ் சடபரதருக்கு மூன்றுசெனனமாகவுங் காணப்பட்டது. வர்த்தமானபிரதிபந்தமாவது விடயாசத்தி பிரக்ஞியாமந்தம் - குதர்க்கம் - விபரீதபாவனை - துராக்கிரவகந்தையென்றுத்தரம். (உா)

இந்தப் பிரதிபந்தத்தைத் தள்ளுமுபாய மேதென்கின்ற சங்கைக்கு.

பூதப்பிரதிபந்தம் அவனவன்புத்திரியை யநுசரித்துப்போக்கத் தீரும். பவுஷிகபிரதிபந்தம் செனனமெடுத்துக் குருமந்திரதேவதைகளை யுபாசிக்கத்தீரும். வர்த்தமான பிரதிபந்தம் விஷியாசத்தி சாதனைசதுஷ்டையத்திற் றீரும் பிரக்ஞியாமந்தம் பலகாற் சிரவணம்பண்ணத் தீரும் குதர்க்கமனனத்தினாற்றீரும் விபரீதபாவனை நிருத்தியாசனத்தினாற்றீரும் துராக்கிரவகந்தை சமாதியினாற் றீருமென்றுத்தரம். (உச)

வேதாந்தவிசாரம்பண்ணியும் பவுஷிகபிரதிபந்தத்தினாற் செனனம்வருமென்றால் விசாரஞானமும் வியர்த்தமாமோ பிர

நிர்ப்பந்தத்திருந்தெனவாய்வருமென்கின்றதற்குப் பிரமாணமேதென்கின்ற சங்கைக்கு.

விசாரத்திலுற்பிறந்தஞானம் பிரதிபந்தந் தொலைந்தவுடனே மோட்சத்தைக்கொடுக்கையிலும் சாத்திரவிசாரமொருக்காலும் பாழாய்ப்போகாது யோகப்பிரட்டனு மிரண்டொருசென்மத்திலே கிருதார்த்தனாவனென்கின்ற கீதாவசனமே பிரமாணமென்றுத்தரம். (௨௫)

பிரதிபந்தந் தீரத்தக்கதாகவுபாசிக்கச்சொன்னது சகுணமோ நிர்க்குணமோவென்கின்ற சங்கைக்கு.

நிர்க்குணமேயென்றுத்தரம். (௨௬)

சகுணமாகவுபாசிக்கலாம் நிர்க்குணத்தையெப்படித்தியானம்பண்ணலாமென்கின்ற சங்கைக்கு.

கேட்டவண்ணந்தியானிக்கிறது இருவகைக்குஞ் சரியென்றுத்தரம். (௨௭)

வாக்குக்கு மனதுக்கு மெட்டாத நிர்க்குணத்தை யெப்படித்தியானம்பண்ணலாமென்கின்ற சங்கைக்கு.

வாக்குக்கு மனதுக்கு மெட்டினதைக் கேட்டுச்சாட்சாத்காரப்பண்ணுகிறதுபோல இதுவுங்கேட்டுச் சிந்திக்கலாமென்றுத்தரம். (௨௮)

யாதொன்று மந்நியமாயுபாசிக்கப்பட்டதெல்லாம் பிரமமல்ல பிரமந்தானே யென்றறியவேண்டுமென்று சுருதிவாக்குஞ்சொன்னபடியிருந்து பிரமவுபாசனை நிஷேதிக்குமென்கின்ற சங்கைக்கு.

அறியப்பட்டதற்குமறியப்படாததற்கு மந்நியமாயிருக்கிறதே பிரமமென்று சுருதிவதத்திலே ஞானத்தை நிஷேதிக்கின்றதென்றுத்தரம். (௨௯)

பிரமவுபாசனையிலேயுமக்கித்தனைபத்தியேதென்கின்றசங்கைக்கு.

உனக்குத்தானித்தனை நிஷ்டையேதென்றுத்தரம். (௩௰)

நிர்க்குணத்தை யுபாசிக்கின்றதற்குப் பிரமாணமேது விதியேதென்கின்ற சங்கைக்கு.

தற்பதத்திலுஞ் சாயிப்பியங் காட்டமாண்டூக்கியமென்கின்றவுபநிஷத்து நாலும் பிரமாணம் பஞ்சீகரண மகாவாக்கியமே யநுஷ்டானவிதியென்றுத்தரம். (௩௧)

பஞ்சீகரணஞான சாதனமல்லவோ எல்லாரு மநுஷ்டிக்கவில்லையேயென்கின்ற சங்கைக்கு.

ஞானசாதனமென்கின்றது நமக்குஞ் சம்மதம அநுஷ்டியாதவன்று மனே கெட்டானதினாலே பிரமவுபாசனைக்குந் தாழ்வில்லையென்றுத்தரம். (௩௨)

எல்லாருமநுஷ்டிக்கயாதவுபாசனையை நீரேன் சொல்லவந்தீ
ரென்கின்ற சங்கைக்கு.

சிலமூடர் இதனிலு மதிகமென்று வசியமந்திரத்தைச் செ
பிக்கக்கடவ னிதனிலும் பரமூடன் கிரியைபண்ணக்கடவனந்த
மூடனாக்குறித்துச் சொல்லவில்லை முமூட்சுக்களின் பொருட்டு
நிர்க்குணவுபாசனை சொன்னேமென்றுத்தரம். (௫௩)

இப்படி யுபாசிக்கப்படுகின்றதே நிர்க்குணமானாலிந்த வ
ஸ்துவுக்கு ஆநந்தாதிகுணங்களுந் தூலாதிகுணங்களு முண்டெ
ன்லக்கூடாதென்கின்ற சங்கைக்கு.

சுருதிசம்மதமாக இந்தலக்ஷணஞ்சூஸ்திரஞ்சொன்ன வியாச
ராக்கேளென்றுத்தரம். (௫௪)

சச்சிதானந்தமே நானென்கின்ற வுபாசனையானால் ஞான
த்திற்குப் பேதமேதென்கின்ற சங்கைக்கு.

வஸ்துதந்திரம் ஞானமென்றுங் கர்த்ததந்திர முபாசனை
யென்றும் பேதமேதென்றுத்தரம். (௫௫)

வஸ்துதந்திரமாயிருக்கின்ற ஞானமெதினாலே வருமெ
ன்கின்ற சங்கைக்கு.

அக்கினியை யக்கினியென்றாற்போலச் சுபாவத்தைச்சுபா
வஞ்சொல்லுகின்றது வஸ்துதந்திரஞானம் விசாரத்தினாலேவ
ருமென்றுத்தரம். (௫௬)

இந்தஞானம்வந்தாலென்னசெய்யுமென்கின்றசங்கைக்கு
சகலசம்சாரத்தையுஞ் சுடுமென்றுத்தரம். (௫௭)

அந்த ஞானத்தைமறந்தாலாவியேதுவென்கின்ற சங்கைக்கு.
மறந்தாலுஞ் சம்சாரத்தைக்கொடாதென்றுத்தரம். (௫௮)

அந்த ஞானமுள்ளவனெப்படியிருப்பானென்கின்ற சங்
கைக்கு.

சீவன்முத்தனாய்த் திருத்தியடைந்து பிராரத்துவசயத்தை
ப்பார்த்திருப்பானென்றுத்தரம். (௫௯)

கர்த்ததந்திரமாயிருக்கின்ற வுபாசனையெதினாலே வரு
மென்கின்றசங்கைக்கு.

உபசாரமாக ஸ்திரீயை யக்கினியென்கின்றது போலக்
கர்த்ததந்திரமாக விருக்கின்ற வுபாசனை குருவுபதேசத்தினாலே
வருமென்றுத்தரம். (௬௰)

அந்த வுபாசனைவந்தாலென்னசெய்யுமென்கின்ற சங்கைக்கு.
உபாசித்தபோது நாம் பிரமமாவோமென்கின்ற புத்தி
யைக்கொடுக்குமென்றுத்தரம். (௬௧)

அந்த வுபாசனையைமறந்தாலாவியேதென்கின்றசங்கைக்கு
விட்சேபத்தின்கையிலேகாட்டிக்கொடுக்குமென்றுத்தரம்

அந்த வுபாசகனுக்குத் தியானமுள்ளவளெப்படியிருக்கவேண்டு மென்கின்ற சங்கைக்கு.

நித்திரைவருமளவு மரணம்வருமளவுந் தியானம்விடாமற் பண்ணிக்கொண்டிருக்கவேண்டுமென் றுத்தரம். (௫௬)

இந்த வுபாசனைமுதிர்ந்ததற்குப் பிரத்தியட்சமேதென்கி ன்ற சங்கைக்கு.

பிச்சையெடுக்கின்றவன் சொற்பனத்திலும் பிச்சையெடுக் கின்றார்போலவும் வேதமோதுகின்றவன் வேதமோதக் காண் கின்றார்போலவுஞ் செபம்பண்ணுகின்றவன் செபிக்கக்காண்கின் றார்போலவு மிந்தவுபாசகனுந் தினந்தோறுந் தியானம்பண் ணக்கண்டானாகி லுபாசகனுக்கு முடிவென் றுத்தரம் (௫௭)

ஞானம் வஸ்துத் தந்திரமென்கின்றவைகளின் யுத்தியேதெ ன்கின்ற சங்கைக்கு.

கூடஸ்தர் சைதன்னியத்தை வேதஞ்சொன்னபடி யிருக்கிற தோ வில்லையோவென்று லட்சணவிருத்தியினாலே யொருபிரகா ரஞ் சோதித்துப்பார்த்துக்கொள்ளுகின்றதே யுத்தியல்லாமற் றா ன் வேண்டினபடி சிந்திக்கப்படாதென்றுணமென் றுத்தரம் ௫௮

தியானங் கர்த்ருதந்திரமென்கின்றதிலே யுத்தி யேதென் கின்ற சங்கைக்கு.

தான் வேண்டினபடி தியானிக்கத் தியானியாமலிருக்க மா றுபாடாய்த் தியானிக்கப்படுகின்றதே யுக்தியாகையால் எந்நேர முந் தியானமே சாவதானமாகப்பண்ணவேண்டுமென் றுத்தரம்

எந்நேரமுந் தியானத்திலே மனதா யிருக்கின்றவனுக்குச் செய்காரியமெப்படி நடக்குமென்கின்ற சங்கைக்கு.

பரபுருடனை யடைகின்றநாரி யெந்நேரமுமவனிடத்திலே யாருடமனதாகவிருந்தாலு மேலெழுந்தவாரியாய்ச் செய்காரி யஞ்செய்தொப்பிக்கின்றாற்போலச் செய்வானென் றுத்தரம் ௫௯

சாட்சாத்காரஞானிக்குஞ் செய்காரியமெப்படி நடக்குமெ ன்கின்ற சங்கைக்கு.

கூத்தாடி பாசாங்கடிக்கின்றாற்போலச் சிவன்முத்தனுஞ் செய்காரியமொன்றுந் தப்பாமற் செய்வானென் றுத்தரம். (௬௦)

உபாசனை லோகவிவகாரத்துக்கு விரோதமென்ற தெதினா லே யென்கின்ற சங்கைக்கு.

மனதிலே தியானமுந் தேகேந்திரியாதிகளிலே செய்தொ ழிலுமாகவிருக்கின்றபடியினாலே விவகாரம் விரோதமென்கிற வுத்தரம்: (௬௧)

ஞானத்துக்கும் விவகாரத்துக்கும் விரோதமில்லையென்கி ன்ற தெப்படியென்கின்ற சங்கைக்கு.

ஆத்துமாமாத்திரஞ் சின்மாத்திரமதனுள்ளதெல்லாமாயா மயமென்கின்ற ஞானத்தினாலே விவகாரசாதனந் திரிவிதகரணத்தினாலொன்றும் வேண்டாதபடியினாலே ஞானம் விவகாரவிரோதமில்லையென்றேயுத்தரம். (௫௰)

சாட்சாத்கார முள்ளவனுக் கிலட்சணமேதென்கின்ற சங்கைக்கு

கடத்தைப்பார்க்கின்றவன் திருஷ்டியைத் தெரியாததுபோலத் தத்துவமுள்ளபடி கண்டுகளித்துக் கவலைகெட்டிருப்பானென்றுத்தரம். (௫௧)

தியானம்பண்ணுகிறவனுக்கு இலட்சணமேதென்கின்றசங்கைக்கு.

பிரபஞ்சத்தை நினைத்தால் தியானங்கலைந்து கெட்டுப்போமென்கின்ற பயத்துடனேபுத்தியைமறித்துத்தெண்டித்துக்கொண்டிருப்பானென்றுத்தரம். (௫௨)

ஒருகாலறியப்பட்டகடத்தை மறுபடிவேண்டியபோதறிகின்றதற்குஞ் சிந்திக்கின்றதற்கு மிப்படியிருக்குமென்று சொல்லுகைக்குஞ் சாதனமில்லையே இப்படிச்சூக்ஷுமப்பிரமமாகிய ஞானிக்கென்கின்ற சங்கைக்கு.

அப்பிரகாசமாயிருக்கின்ற கடமே யொருகால்கண்டவுடனே இப்படித்தெரிந்தால் சொப்பிரகாசசைதந்நியத்திற்குக்கேட்கவேண்டுமோவென்றுத்தரம். (௫௩)

நான் பிரமமென்கின்ற விருத்திப்பிரமாணங் கணப்போதிலே நஷ்டமாய்ப்போமென்கின்ற சங்கைக்கு.

இது கடப்பிரமாணத்திலுஞ்சரியல்லவோவென்றுத்தரம். ௫௪

இப்படித்தத்துவக்கியானிக்கொருசிந்தனையுமில்லாவிட்டாலெந்நேரமுமனதுவெளியிலே நாடுமென்கின்ற சங்கைக்கு.

கற்பிதமாயிருக்கிறவஸ்துப்பிரவிர்த்தித்துக்கொண்டுதனக்கு ஆலியேதென்றுத்தரம். (௫௫)

இப்படியானாலும்முடையசித்தாந்தம் அவமரியாதையாமென்கின்ற சங்கைக்கு.

விதிநிஷேதசாத்திரமறியாதனைத் தத்துவக்கியானியின் பொருட்டுச் சொன்னதல்லவென்றுத்தரம். (௫௬)

விதிநிஷேதசாத்திரம் யாரைக்குறித் துண்டாயிற்றென்கின்ற சங்கைக்கு.

வருணாச்சிரமவமான அவத்தையென்கின்றது அபிமானியின்பொருட்டுண்டாயிற்றென்றுத்தரம். (௫௭)

ஞானிக்கு வருணாச்சிரமாதி தேவையில்லையோவென்கின்ற சங்கைக்கு.

வருணாச்சிரமாதிகள் மாயாகற்பிதவுபாதிமாத்திரத்திலே யுண்டானதல்லாமல் ஆத்துமாவினிடத்திலேயில்லையென்றுத்தரம்.

முன் ஞானவவத்தையி லநுசரித்தவிதிகள் மற்றோரவத்தையிற் கைவிட்டாற் குற்றமில்லையோவென்கின்ற சங்கைக்கு.

குழவிகளுக்குப்பாலியாவத்தையில் விதிநிஷேதந்தேவையற்றதுபோல ஞானாவத்தைக்குத்தேவையில்லையென்றுத்தரம்.

குழந்தையொன்று மறியாதவக்கியானியல்லோ ஞானியுடைப்படித்தானேயோவென்கின்ற சங்கைக்கு.

ஒன்றுமறியாதவனுக்கு மெல்லாமறிந்த சருவேசுரனுக்குமிருக்கின்றஞானிக்கு விதிநிஷேதபேதந் தேவையில்லையென்றுத்தரம். (௬௰)

பின்னை யார்க்கு விதிநிஷேதபேதமென்கின்றசங்கைக்கு.

சொற்ப மறிந்து மறியாமலுமாகவிருக்கின்ற நடுநாடனுக்கென்றுத்தரம். (௬௧)

ஞானியாயிருக்கின்றவன் செகதீசுரனைப்போற் சாபானுக்கிரகம் பண்ணவேண்டுமென்கின்ற சங்கைக்கு.

சாபானுக்கிரகசாமார்த்தியந் தபோபலமேயல்லாமல் ஞானமல்லவென்றுத்தரம். (௬௨)

தபோபலமாகப் பிரமத்தை யறியவேண்டுமென்று தயித்திரிய வுபநிஷத்திலே சொன்னபடியினாற் தபோபலமல்லவோ ஞானமென்கின்ற சங்கைக்கு.

ஞானங் காரணமானது தபசு சாபானுக்கிரகத்துக்குக் காரணமல்லவென்றுத்தரம். (௬௩)

பூர்வாசாரிகளாயிருக்கின்றவியாசர்-வியாக்கிரவர்க்கர்முதலானவர்க்கு இருவகையுங் காணப்பட்டிருக்கிறதெப்படியிருக்க வேண்டாவோ ஞானமுள்ளபேர்களெல்லாமென்கின்றசங்கைக்கு

மந்திரவாதசித்தியும் ஞானமுமொருவரிடத்திலே யிருக்கக்கண்டாற்போலவுஞ் சோதிடமும் ஞானமுமொருவரிடத்திலே யிருக்கக்கண்டாற்போலவு மிரசவாதமும் ஞானமுமொருவரிடத்திலே யிருக்கக்கண்டாற்போலவுஞ் சாபானுக்கிரக சாமார்த்தியமும் ஞானமும் வியாசரிடத்திலே காணப்பட்டன இந்தச் சாபானுக்கிரக சாமார்த்தியமெல்லாம் ஞானமல்ல ஞானமாத்திரமப்பியாசித்தவனிடத்திலே சீவன்முத்தியநுபவமாத்திரமிருக்குமென்றுத்தரம். (௬௪)

சாபானுக்கிரக சாமார்த்திய மில்லாதிருந்தா லிவனென்ன ஞானியென் றெல்லாருமிகழ்ப்பார்களேயென்கின்ற சங்கைக்கு.

ஸ்ரீசாஸ்திரத்தைக் கைவிட்ட சந்நியாசிகளை யெல்லாரும் பூசிக்கின்றதேயல்லாமல் நிந்திக்கக்கூடாதென்றுத்தரம். (௫௫)

போகலம்படராயிருக்கின்ற தூர்த்தாளெல்லாம் நிந்திக்கின்றார்களோவென்கின்ற சங்கைக்கு.

இந்தப்பிரகாரத்தில் வருணாச்சிரமதேகாபிமானிகள் ஞானியை நிந்திக்கட்டும் ஞானிக்கானிமையரு இப்படி வேண்டியவண்ணமிருக்கலாமென்கின்றபடியினாலே ஞானிக்கிராச்சியபாரமும் பண்ணவிச்சையுண்டாகிலும் பண்ணலாமென்றுத்தரம். (௫௬)

மாயாகற்பிதமாயிருக்கின்ற செகத்து மித்தையென்கின்ற புத்திவர்த்தபின் இராச்சியம்பண்ண இச்சைவந்தால் ஞானம் பிரயோசனமாமோவென்கின்ற சங்கைக்கு.

மித்தையாபுத்தியினாலாசையற்றுப்போனாற் கன்மத்தாலுபாசனைதான் தியானந்தான் இராச்சியந்தான்பிராரத்துவமுள்ளபடி பண்ணிவருவன் ஞானியென்றுத்தரம். (௫௭)

தியானிக்கு மிப்படிவேண்டியவண்ண மிருக்கலாகாதோவென்கின்ற சங்கைக்கு.

மூர்த்திதியானம்போலத் தியானத்தினால் நான் பிரமமென்கின்ற நிலையான தியானம்விட்டாவில்லாமற் போகின்றபடியினால் நிரந்தரஞ் சாவதானமாய்த் தியானம்பண்ணிக்கொண்டிருக்கவேண்டும் ஞானியைப்போல வேண்டியவண்ண மிருக்கக்கூடாதென்றுத்தரம். (௫௮)

ஞானிக்கும் ஞானத்தை மறந்திருக்கிறவேளையிலே பிரமத்துவமில்லாமை சரியல்லவோவென்கின்ற சங்கைக்கு.

பிராமணனுக்கு நான் பிராமணனென்கின்றது நினையாவிட்டாலுஞ் சுபாவசித்தமாயிருக்கின்றாற்போல இலட்சணாவிருத்தியினாலே யாத்துமாவைச் சோதித்திருக்கின்ற ஞானிக்கு நான் பிரமமென்கின்றது மறந்திருந்தாலுஞ் சுபாவசித்தமாயிருக்குமேயல்லாமற் றியானம்பண்ணுகின்றவனைப்போல மறந்துங்கெட்டோமென்கின்ற மூடுயில்லையென்றுத்தரம். (௫௯)

இந்தப்பிரகாரத்துக்கு உபாசகனுக்கு நான் பிரமமென்கின்றது மறந்திருந்தாலுஞ் சுபாவசித்தமாயிருக்கின்ற பிரமத்துவமுண்டோ வில்லையோவென்கின்ற சங்கைக்கு.

இந்த வுபாசகன்மாத்திரமல்லப் பாமராள் நாற்கால்மிருகங்கள்முதலான செந்துகளுக்கெல்லாம் பிரமத்துவஞ் சுபாவசித்தந்தானென்றுத்தரம். (௬௰)

பாமராள் மிருகங்கள்முதலானசெந்துகளுக்கு நான்பிரமமென்கின்ற விருத்தியில்லாதபடியினாற் சுபாவசித்தமாயிருக்கின்ற பிரமத்துவத்தினாற் பிரயோசனமேதென்கின்ற சங்கைக்கு.

அப்படி யுத்தியில்லாதது இந்த வுபாசகனுக்குஞ் சரியானப்படியிருந் தபோவசித்தப்பிரம்மத்தியானத் தியானத்திலும் பிரயோசனமற்றுப்போனவனுக்குஞ் சரியென் றுத்தரம். (எக)

இருந் பிரமத்தியானமு மிப்படிப் பிரயோசனமற்றதோ வென்கின்ற சங்கைக்கு.

பட்டினியிடைக்கின்றவனிலும் பிச்சைபுகுந்தாகிலும் பொசிக்கின்றது நாழ்விலையென்றாற்போலவிருதாவியாபாரத்திலேயிருந்து விட்டுச்சப்படுகின்றதிலும் பிரமத்தியான மதிகமென் றுத்தரம். (எஉ)

எந்தெந்தச்சாதனைகளிலும் பிரமத்தியான மதிகமென்கின் றசங்கைக்கு.

பாமரவியாபாரத்திலுங் கன்மாநுஷ்டான மதிகமதனிலுஞ் சகுணவுபாசனையதிக மதனிலும் விசுவரூபவுபாசனையதிகமதனிலுஞ் சாதனசதுஷ்டயமதிக மதனிலுஞ் சிரவணமதிக மதனிலு நிர்க்குணதியானமதிகமென் றுத்தரம். (எங)

இவைகளெல்லா மொன் றுக்கொன் று தாரதம்மியமாயிருப்பானேனென்கின்ற சங்கைக்கு.

இராசாவைக் கிட்டக்கிட்டப் பயுஷிகமும் பிரயாசங் கொஞ்சமாகின்றாற்போலப்பிரமத்தியானத்தைக் கிட்டக்கிட்டவாதிக்க மதிகமென் றுத்தரம். (எச)

பிரமத்தியானத்துக்குமேல் ஞானக்கிரமமெப்படி யடையப்படுகின்றதென்கின்ற சங்கைக்கு.

சங்கவாதப்பிராந்திமுடிந்தவிடத்தில் அரதனங்கொடுக்கின்றாற்போல நிர்க்குணத்தியானமுதிர்ந்தவிடத்தில் பிரமமென்கின்ற ஞானசமாதியடைகின்றதேயல்லாமல் வேறுசாதனமில்லையாலையா லிந்தவர்க வறியாதவர்களெல்லாருக்குஞ் சுருக்கே வழியாக மோட்சத்தைக்கெடுக்கையினால் நிர்க்குணத்தியானத்தைச்சொல்லுகிறோம் பாவிக்கத் திரோதனமே சமாதியென்று மிதுவே சத்தியமென்றும் அமுர்தவிந்தவுபநிஷத்துஞ் சொல்லுகிறதென் றுத்தரம். (எரு)

இதுவொன் றுமறியாதவனுக்குந் தியானத்திலெப்படிச் சித்திக்குமென்கின்ற சங்கைக்கு.

தியானமாத்திரங் கொண்டு நான் பிரமமென்கின்ற யுத்திகிடைப்பட்டவுடனே கிருவிகாரத்திலுண்டாய இலட்சணமும் புத்தியிலே எளிதாய் வேறு கிருவிகாரத்தைக்குருத் சமாதியென்று சொல்லப்படு மாகையினாற் சகலசாதனங்களிலும் பிரமத்தியானமேயதிகமென் றுத்தரம். (எ௬)

இப்படி மூர்த்தித்தியானமுந் தீர்த்தமாட்டலுஞ் செபங்களு மோட்சசாதனங்களாகாவோவென்கின்ற சங்கைக்கு.

பிரமத்தியானத்தை யுபேட்சித்து மூர்த்தித்தியானந் தீர்த்தமாட்டல் செபங்கள் செய்தல் உள்ளங்கையி லிருக்கின்ற பாற்றிரளையைப் பெறிந்துபோட்டு எட்டப்படாத முழங்கையைநக்கினதற்குச் சரியாகையாற் பிரமத்தியானத்திற்குச் சரியான சாதன மொன்றுமில்லையென் றுத்தரம். (௭௭)

பிரமசாட்சாத்காரத்தைவிட்டுத் தியானம் பண்ணுகின்றவனுக்குச் சரியல்லவோவென்கின்ற சங்கைக்கு.

நீசொன்னதுண்மைதானே இந்தப்படியோகசமாதி முதலான சாட்சாத்காரவிசாரவநுசந்தானம் பண்ணமாட்டாதவனுக்கு விதியென் றுத்தரம். (௭௮)

பிரமத்தியானம்போல யோகசமாதியுஞ் சாட்சாத்காரத்துக்குக்கிட்டினபூமியென்கின்ற தெரிஞலென்கின்றசங்கைக்கு.

யோகத்தினால் விட்சேபமெல்லாந் தடைபட்டுச் சித்தநிரோதம்வரு மந்தச்சித்தத்தினாலே சாட்சாத்காரமெளிதாகவே யுமாகையினாலே யோகமுக்கியமென் றுத்தரம். (௭௯)

இப்படியானாற் சாங்கியத்திற்கும் யோகத்திற்கும்விரோதமேதென்கின்ற சங்கைக்கு.

சிதாபாசனையு மாத்துமாவையும் பகுத்துக்காண்கின்றது விசாரணையொருமையாகக் காண்கின்றதுயோகமிவையேவிரோதமென் றுத்தரம். (௮௰)

பிரமத்தியானத்தினாலே சாட்சாத்காரம் வருமென்கின்றதற்கு யுத்தியேது பிரமாணமேதென்கின்ற சங்கைக்கு.

குளவியை நினைத்த புழுக் குளவியாகின்றாற்போலவென்கின்றது யுத்தி மரணகாலத்திலே எதை நினைத்தானு மதுவாய்ப் போவானென்கின்றகீதாவசனமேபிரமாணமென் றுத்தரம் (௮௧)

தியானத்திடப்பட்டல்லவோ சரீரமரணகாலத்தி லுதவவேண்டு முத்தியிலேசரீரம்விழுந்தால்கெதியேதென்கின்ற சங்கைக்கு.

பிரமலோகத்திலேபோய்ப் பிரமாவினிடத்திலுந் தத்துவஞானத்தையடைந்துமோட்சத்தைப்பெறுவனென் றுதாபன்னிவ வுபநிடதத்திற் சொல்லுகிறது இதைத்தவிர மோட்சத்திற்கு வழியில்லையென் றெசுர்வேதத்திற்சொல்லுகிறது நாசிக்கேதுவிற்கு எமனிதுவேவழியாகச்சொன்னான் சத்தியாகர்மருக்கும் பிரகலாதரிப்படிசொன்னார் கிருஷ்ணபகவானு மாத்மகீதையிலே பூமிக்குள்ளேயிருக்கின்ற புதையலையெடுக்கின்றதற்குவெட்டுகின்றதேயல்லாமல் வேறுவழியில்லாததுபோலப் பிரமத்தை

யடைகின்றதற்குத் தியானமேயல்லாமல் வேறுவழியில்லையென்றுந் தேகமாகின்றசல்லைப் புத்தியாகின்ற கூந்தாலியாலே பொளிந்துதள்ளி நாம்பிரமமென்கின்ற தியானத்தினுற் பிரமமாகின்ற புதையலை யடையலாமென்றுராகையாற் பிரமஞானத்திற்குச் சரியான சாதனமொன்றுமில்லையென்றுத்தரம். (௮௨)

சாட்சாத்காரகருத்தறியவேண்டிபிரமத்தை இப்படியடையாமற் றியானத்தினுலெப்படியடையலாமென்கின்றசங்கைக்கு

யுத்திவிசாரித்தால் உண்மைப்பொருளாயிருக்கின்றபிரமம் நாமென்கின்ற தியானத்தினுலே யடையலாமோவென் றொருவனாயுங்கேட்கத்தேவையில்லை பூசமாயிருக்கின்ற காசிலையுபாசிக்கையினுற் ருரகப்பிரமஞ் சித்திக்கின்றுற்போலவுஞ் சங்கவாதிபிராந்தியிலே பிரவிர்த்திக்கிரத்தினமகப்படுகின்றுற்போலவுந் தேகாபிமானத்தைத்தவிர்த்து தியானத்தினு லத்துவிதமாயிருக்கின்றவாத்துமாவே நானென்று தியானிக்கின்றவனிங்கேதானே மோட்சத்தையடைவானென்று வேதஞ் சொல்லுகிறதென் றுத்தரம். (௮௩)

இந்தத் தியானதீபிகையை யநுசந்தானம்பண்ணிவருகின்றவன் பிரமத்தியானத்தைப்பெற்று மோட்சத்தையடைவன்.

நான்காவது - தியானதீபிகைமுற்றிற்று.

ஐந்தாவது,

நாடகதீபிகை.

வித்தியாரணியசுவாமிகள் வேதாந்தம் விரிவிலே பார்க்கமாட்டாதவர்க்கு ஆத்துமக்கியானம்வருகின்றவழியை நாடகதீபிகையிலே சங்கிரகித்துச் சொல்லுகிறுர். ஆத்துமாவாவதாரென்கின்ற சங்கைக்கு.

மாயாசத்திக் காதாரமாயிருக்கின்ற வஸ்துவாகிற ஞானந்தசைதந்நியமே யாத்துமாவென்றுத்தரம். (௧)

இவர்க்குச் சிருட்டியெதனுல் வந்ததென்கின்றசங்கைக்கு.

நிருவிகாரசைதந்நியமாயிருக்கின்ற விவர்க்குந் தம்முடையமாயாவுபாதியினுலே வந்ததென்றுத்தரம். (௨)

சகத்தாகியவஸ்து வேதென்கின்ற சங்கைக்கு.

இரச்சுவிற் சர்ப்பம்போலச் சகத்தாய்த் தோன்றின வாத்துமாத்தானேயென்றுத்தரம். (௩)

சீவனாவதெதென்கின்ற சங்கைக்கு.

உபாதிகளிலேபிரதிவிம்பித்த சரீரங்களிலேபிரவேசித்துவிவகரிக்கின்ற சிதாபாசஞ் சீவனென்றுத்தரம். (௫)

சம்சாரபந்தமாவதேதென்கின்ற சங்கைக்கு.

சிதாபாசத்தோற்றரவானது விதமே பந்தமென்றுத்தரம்

இந்தப்பந்தம் விடுகின்ற முத்தியேதென்கின்றசங்கைக்கு,

விசாரத்தினால் மாயைநட்டமானபின் சித்தாகின்ற வத்துவிதமே முத்தியென்றுத்தரம். (௬)

முத்திக்குச் சாதனமேதென்கின்ற சங்கைக்கு.

வேதாந்தவிசாரத்தினாற் பிறந்தஞானமே முத்திக்குச்சாதனமென்றுத்தரம். (௭)

இந்தவேதாந்தவிசாரமெதனால்வருமென்கின்றசங்கைக்கு.

அநேகசென்ம மீசுரனை யுபாசித்தபேருக்குவருமென்றுத்தரம். (௮)

குருவழிப்பட்டு விசாரம்பண்ணுகின்றவனாரென்று நின்ற சங்கைக்கு.

தேகாபிமானியாயிருக்கின்ற சைதந்நியமே விசாரகர்த்தனென்றுத்தரம். (௯)

குருமூன்னில்லையாய் ஞானங்கொடுக்கின்றவரியாரென்கின்ற சங்கைக்கு.

செகத்தீசுரனே குருமூர்த்திமாகவந்து ஞானங்கொடுக்கின்றவனென்றுத்தரம். (௰)

அந்த வீசுரனெதுசெய்தால் ஞானங்கொடுப்பானென்கின்றசங்கைக்கு.

நிட்காமனுவநுஷ்டானபத்தியினால் ஞானங்கொடுப்பானென்றுத்தரம். (௰௧)

ஈசுரனாவதாரென்கின்ற சங்கைக்கு.

சாத்துவிகவுபாதியிலேதிருமூர்த்திரூபமாய்த் தோன்றின சைதந்நியமே யீசுரனென்றுத்தரம். (௰௨)

ஒரு சைதந்நியத்திற்கு இருவகைத் தாரதன்மிய மெதனால் வந்ததென்கின்ற சங்கைக்கு.

மாயை யவித்தையென்கின்றவுபாதியினால் வந்ததேயல்லாமல் சைதந்நியத்தைத் தொட்டுவரவில்லையென்றுத்தரம். (௰௩)

இவர்மாயையினாற் சிருட்டிபண்ணுகின்ற வகை யெப்படியென்கின்ற சங்கைக்கு.

சாத்துவிகவுபாதியினா லீசுரனையு மிராசதவுபாதியினாற் சீவனையுந் தாமதவுபாதியினால் மனமுதலான பூதபௌதீகங்

பிரயத்நாதிகளின்றிச் சிருட்டித்தார் பிரகிருதி குணத்திரயமென் றுத்தரம். (௧௪)

சிருட்டிக்குச் சாதனம் பாரம்பரையேதென்கின்ற சங்கைக்கு நானென்கின்ற விருத்தியே சாதனமென் றுத்தரம். (௧௫)

இத்தனை வகுப்பிலே சிருட்டியடங்கிற் றென்கின்ற சங்கைக்கு.

நானென்கின்ற விருத்தியிலுமிதுவென்கின்ற விருத்தியிலுங் கர்த்தாவும் விடயமுமாயிருக்கின்ற சிருட்டியடங்கிற்றென் றுத்தரம். (௧௬)

இந்த வகுப்பெல்லாந் தோற்றுவிக்கின்றவ ராரென்கின்ற சங்கைக்கு.

இத்தனையுந் தோற்றுவிக்கின்றவ ராத்துமாத்தானேயென் றுத்தரம். (௧௭)

நானென்கின்ற விருத்தி கர்த்தா வொருவனைக் கற்பிப்பா னேனென்கின்ற சங்கைக்கு.

நானென்கின்ற விருத்தி யோகாக்கிரமமானபடியினாற் கர்த்தா வொருவனைக் கற்பித்ததென் றுத்தரம். (௧௮)

இதுவென்கின்ற விருத்தி சத்தாதிகளைந்தையுங் கற்பிப்பா னேனென்கின்ற சங்கைக்கு.

இதுவென்கின்ற பொருள் விருத்தியிற் கிரியபேதங்களினாலை ந்தாய்க் கிரமமாய்ப் பிரிந்தபடியினாற் பஞ்சவிடயங்களையுங் கற்பித்ததென் றுத்தரம். (௧௯)

கர்த்தாவொன்றென்கின்றதிலும் விருத்தி யிரண்டென்கின்றதிலும் விருத்தி கற்பிதமாமென்கின்றதிலும் பிரமாணமேதென்கின்றசங்கைக்கு

நாடகசாலையின் விளக்கு இராசன் பரிசாரகராடுகின்றவள் தாளமத்தளக்கார ரிவர்களைத் தாரதம்மியமறத் தோற்றுவித்து அவர்களில்லாத வேளையிலும் விளக்குத்தானே விளங்குமாற்போலக் கர்த்தாமுதலானவருள்ளவேளையிலுமில்லாதவேளையிலுங் கண்டிருக்கின்ற சாட்சியே தானென்கின்ற வநுபவமேபிரமாணமென் றுத்தரம். (௨௰)

நாடகசாலையின் விளக்கு இராசாமுதலானதிட்டாந்தத்தைத் தன் சரீரத்திலே இன்னதென்று பகுத்துக்காட்டுமென்கின்றசங்கைக்கு.

அகங்காரமே பிரபுவிடயங்களே பரிசாரகர்புத்தியே கூத்தாடிச்சி இந்திரியங்களே தாளமத்தளக்காரர் இத்தனையுந் தோற்றுவிக்கின்ற சாட்சியே தீபமென் றுத்தரம். (௨௧)

அசைவற்றிருக்கின்ற சாட்சிக்குத் தீவெட்டி திட்டாந்தமாமாதென்கின்ற சங்கைக்கு.

ற்றிவைத்தபகல்வத்தியிருந்தவிருப்பிலே நாலுபுறமுந் தோற்றுவிக்கின்றாற்போல அகண்டபரிபூரணமாயசைவற்றிருக்கின்றவாத்து மூவருமுள்ளும்புறம்புந்தோற்றுவிக்கின்றானென் றுத்தரம்.

உள்ளாவதெதைக்குறித்தது வெளியாவதெதைக்குறித்ததென்கின்றசங்கைக்கு.

உள்ளும்புறம்புமென்கின்றது சரீரத்தைக்குறித்ததல்லாமற்சாட்சியைக்குறித்ததல்லவென் றுத்தரம். (௨௩)

உள்ளே யிருக்கின்றவாரார்வெளியே யிருக்கின்றவரா ரென்கின்ற சங்கைக்கு.

நானென்கின்ற வகங்காரியுள்ளே யிருக்கின்றவன்வெளியே யிருக்கின்றதுவிடயமென் றுத்தரம். (௨௪)

உள்ளும்புறம்புஞ்சஞ்சரிக்கின்றவாரென்கின்ற சங்கைக்கு.

உள்ளும்புறம்புஞ்சஞ்சரித்துக் கூத்தாடுகின்றது புத்தியென் றுத்தரம். (௨௫)

உள்ளும்புறம்புமசையாதிருக்கின்றசங்கைக்கு.

உள்ளும்புறம்புமசையாமலிருக்கின்றவர் அசையாமலின் றுதோற்றுவிக்கின்றவர்சாட்சியென் றுத்தரம். (௨௬)

உள்ளும்புறம்புஞ் சஞ்சரிக்கின்றதே புத்தியானாலப்படி யொருவருங்கொல்லக்காணேம் நான்போனேன்வந்தேனென் றுசொல்லுகின்றார்களிதிலே காரணமேதென்கின்றசங்கைக்கு.

பலகணிவழியுள்ளேவிழுந்தவெயிலிலேகாட்டியகையசைகின்றதைவெயிலசைகிறதென்றாற்போலவுள்ளேயிருக்கின்றபுத்தியுமிந்திரியத்துவாரத்தின்வெளியிலேபுறப்பட்டு அலைந்து திரிந்து தன்னுடையவலைச் சலத்தன்னைத்தோற்றுவிக்குசாட்சியின்பேரிலேயாரோபிக்கிறதாகையாலாற்றுமாவுக்கலைச்சலில்லையென் றுத்தரம்.

இப்போதின்னதத்துவ மின்னவிடத்திலேயிருக்கிறதெனப்பகுத்துக்காட்டினாற்போலச் சாட்சியிருக்கின்றவிடமும் பகுத்துக்காட்டவேண்டுமென்கின்றசங்கைக்கு.

புத்திமுதலானவெல்லா மொழிந்திருக்கின்றவவத்தையிலே சாட்சி யிருக்கின்ற விடத்தைக்காணவேண்டுமென் றுத்தரம். (௨௭)

அப்போதெனக்கொருதேகமுங் காணப்படவில்லை சாட்சியிருக்கின்றவிடம் நீர்தாமே சொல்லுமென்கின்றசங்கைக்கு.

நிலத்திலேயிருக்கின்றார் நீரிலேயிருக்கின்றாரென்பதுபோலப்புத்தி முதலானவைகளிடத்திலேயிலே காணப்பட்டது கொண்டு ஒருதேகத்தையும்பற்றியிருக்கின்றவரல்லசகலசெகற்பனைக்குமதிஷ்டானமாயிருக்கின்றபடியினாற் சர்வபரிபூரணனென் றுத்தரம். (௨௮)

சகலசொப்பனகற்பனையுங்கற்பிக்கின்றதேதென்கின்றசங்கைக்கு சொற்பனநிலையுள்ளபிரபஞ்சத்தினையுஞ் சாக்கிரநிலைவெளிப்பிரபஞ்சத்தையுங் கற்பித்ததுபுத்தியென்றுத்தரம். (௰)

சாட்சியெப்படிக்காண்கின்றதென்கின்றசங்கைக்கு.
இத்தனையுமறிவாயிருந்தறிகின்றவர் சாட்சியென்றுத்தரம். (௰௧)

அவனாராமெப்படி யறிகின்றதென்கின்றசங்கைக்கு.
அவருன்னாலறியப்படுகின்றவரல்ல நீதானாகவேயிருக்கின்றதேயல்லது வேறில்லையென்றுத்தரம். (௰௨)

இப்படிச்சொந்த வறிவுவருகின்றதற்குபாயமேதென்கின்ற சங்கைக்கு.
குருமுகமாய்வேதாந்த விசாரம்பண்ணுகின்றதேயுபாயமென்றுத்தரம். (௰௩)

தானாயிருக்கின்றவறிவை யறியவொட்டாத பிரதிபந்தமேதென்கின்றசங்கைக்கு.
தேகாபிமானோ நாம் பிரபஞ்சஞ் சத்தியமென்றவிருவகையுமே பிரதிபந்தமென்றுத்தரம். (௰௪)

இந்தப்பிரதிபந்தத்தைத்தள்ளுகிறதெப்படியென்கின்றசங்கைக்கு.
இந்தப்பிரதிபந்தத்தைக்கற்பிக்கின்ற புத்தியையும்புத்திகற்பிதபிரபஞ்சத்தையுங் காண்கின்றவறிவுதானாகவிருக்கின்ற வனுபவம்தள்ளுகின்றதென்றுத்தரம். (௰௫)

இந்நாடகதீபிகையையனுசந்தானம் பண்ணச் சாட்சியேதானாகவிளங்கும்.

ஐந்தாவது நாடகதீபிகை முற்றிற்று.

முதலாவதுபஞ்சகம்முற்றிற்று.

இரண்டாவதுபஞ்சகம்.

ஆறாவது.

தத்துவவிவேகதீபிகை.

வித்தியாரண்ணியசுவாமிகள்லோகாநுக்கிரகார்த்தமாகச்சகலவேதாந்தசித்தாந்தரகசியமான தத்துவவிவேகத்தைவெளிப்பண்ணுதற்காக வாதியிலேசிட்டாசாரமான குருவுக்குநமஸ்காரம் பண்ணும்படி யந்தகவிதயிலக்கணவிஸ்தாரத்துடனே கூடியிருக்கி

ணீறமகாமாயாமோகத்தை யெடுத்துவிழுங்குகின்றதேவேலையாயிருக்கின்ற சங்கராசாரியகுரு மூர்த்திகளினது பாதாரவிந்தமடையும்பொருட்டு நமஸ்காரம் பண்ணி அந்தக்குருமூர்த்திகளினது பாதாரவிந்தத்தியானத்தினால்நிர்மலவந்தகரணருக்குஆத்துமாவையெளிதாயறியும்வழி தத்துவவிவேகஞ் சொல்லுகிறார் தத்துவமாவதெதுஅத்துவமாவதெது விவேகமாவதெது வென்கின்ற சங்கைக்கு.

தத்துவமாவது பரமாத்துமா அத்துவமாவது மாயாதற்காரியமிவற்றைப் பகுத்தறிகின்றதேவிவேகமென்றுத்தரம். (க)

பகுத்தறிகின்றதெப்படியென்கின்றசங்கைக்கு

அறிவாயிருக்கின்றதின்னது அறியப்படுகின்றதின்னதென்றுகாண்கின்றதேபகுத்தறிகின்றதென்றுத்தரம். (உ)

அறிவெத்தனைவிதமாயிருக்குமென்கின்றசங்கைக்கு.

அறிவாயிருக்கின்றவாற்றுடாவொருவ னொன்றேயுத்தரம். (௩)

அறியப்படுகின்றதெத்தனைவிதமாயிருக்குமென்கிறசங்கைக்கு.

அறியப்படுகின்றதுஸ்திரமென்றும் அஸ்திரமென்றுமூலாக்ஞியான விருளென்றுந்திரிவிதமாகவிருக்குமென்றுத்தரம். (௪)

அறிவொன்றென்கின்றதனையு மறியப்படுகின்றது மூன்றென்கின்றதனையுந் தெரியச்சொல்லுமென்கின்ற சங்கைக்கு.

சாக்கிரத்திலே விசித்திரமாய்ஸ்திரமாயிருக்கும் விடயங்கள் சொற்பனத்திலேஅஸ்திரமாயிருக்கும்விடயங்கள்சுழுத்தியிலே அந்தகாரமாய்த்தோன்றுமலிருக்கும்விடயங்கள் இவைகளை த்தினந்தோறு மாதந்தோறும் வருடந்தோறுங்கற்பந்தோறுமறிந்துகொண்டிருக்கின்ற வறிவு அந்தவிடயங்கள்போல வொரு காலுந்தோன்றிமறையாதபடியினாலாற்றுமாவொன்றேயொழிய விரண்டில்லை யென் றுத்தரம். (ரு)

இவைகளிலானத்தமாய் நாடவேண்டியபொருளேதுநாட்டுதுதள்ளவேண்டியபொருளேதென்கின்றசங்கைக்கு.

மூன்றவத்தையினுங் காணப்பட்ட பொருளெல்லாந் தனக்கந்நியமானபடியினாற் றள்ளவேண்டியது அறிவாயிருக்கின்றதன்னைக்கைவிடப்படாதபடியினால்ஆநந்தமாசநாட்டவேண்டியதென்றுத்தரம். (௬)

இப்படியறிவாயிருக்கின்ற பொருளைக்காலத்திலுந்தானாகவிருக்குமானாலஞ்ஞானகாலத்திலறியாமலிருப்பானேனென்கின்றசங்கைக்கு.

சகரபாடிகருடனே யோதுகின்றதன் பிள்ளைகுரல் தெரியாததுபோல அநாதிசித்தமஞ்ஞானத்துடனே கூடிக் குழம்பித்தோற்றுகையாற் றோற்றாமலிருந்ததென்றுத்தரம். (எ)

அநாதிசித்தவஞ்ஞானமாவதெதுவென்கின்றசங்கைக்கு.

அக்கினியிற்சூடுபோலவுஞ் சலத்திற்சயித்தியம் போலவும்பிரமத்தினிடத்திலே சீவன்செகதீசுரனையுண்டாக்குகின்றமூலப்பிரகிருதியேயநாதிசித்தவஞ்ஞானமென்றுத்தரம். (௮)

இந்தவஞ்ஞானமெதனாலுண்டாயிற்றென்கின்ற சங்கைக்கு

இரச்சுவினிடத்திற் சர்ப்பந்தோன்றியதுபோலப் பிரமத்தினிடத்திலுண்டாயிற்றென்றுத்தரம். (௯)

இதற்குலட்சணமேதென்கின்றசங்கைக்கு.

சத்துமல்ல அசத்துமல்ல சதசத்துமல்லவொன்று மல்லபலவுமல்லசர்வயவமுமல்லநிரவயவமுமல்லபிரமாணமாகியுமிருக்கும் அப்பிரமாணமாகியுமிருக்கு நிரூபித்துப்பார்க்கில் சூனியமாகப் போமென்று வேதஞ்சொல்லுகின்றது இவையிலட்சண மென்றுத்தரம். (௰)

இப்படியுண்டாகிய பிரகிருதியேதுசெய்யுமென்கின்ற சங்கைக்கு.

உன்னுடையமுக்குணத்தினாலே சீவன்செகதீசுரனை யுண்டாக்குகின்றதென்றுத்தரம். (௰௧)

இதுஎதனாற்போமென்கிறசங்கைக்கு.

பிரமமே நானென்கின்றவத்துவித ஞானத்தினாற்போமென்றுத்தரம் (௰௨)

முக்குணத்தினாற்சீவன்செகதீசுரனையுண்டாக்கின விதமெப்படியென்கின்ற சங்கைக்கு.

மூலப்பிரகிருதியினுடைய சாத்விககுணமான சுத்தமாயையிற்பிரதிபலித்தவனீசுவரன் பஞ்சகிருத்தியபராயிருக்கின்றவிற்சுவதந்திரியாயிவையுண்டாக்குமாயை தானேயவர்க்குக் காரணசரீரம்இராசதகுணமாகிய சுத்தமாயையானவவித்தையிலே பிரதிபலித்தசைதந்நியஞ் சீவனித்தப்பிராக்ஞனுக்குக்காரணசரீரமானவவித்தைதாரதன்மியமாய்வெகுவிதமானபடியினாற்சிதாபாசருமீசர்தாமதகுணப்பிர கிருதியிலேயிருந்து இந்தச்சீவனுக்குப்போக்கியபோகவிதிகளையுண்டாக்கியீசுராக்கினையிலாகாசம் வாயு அக்கினி அப்பு பிருதிவி என்னப்பட்ட முக்குணத்தோட்டே கூடிச்சூட்சுமபூதமஞ்சுமுண்டாயின இந்தப்பூதங்களுடைய சத்துவாம்சத்திலேபூதத்துக்கொவ்வொருமாத்திரையெடுத்து ஒன்றாககூட்டிவைத்தது அந்தக்கரண மிது சஞ்சலவியாபாரத்தினால்மனமென்றும் நிச்சயவியாபாரத்தினாலபுத்தியென்றும் இரண்டுவிதமாகவிருக்கும் மற்றுஞ்சாத்துவிகாம்சத்திற் பூதத்துக்கோரொருமாத்திரையமெடுத்துத்தனித்தனியாயவைத்தது சுரோத்திராதி ஞானேந்திரியம் பூதங்களுடையவிராசதாம்சத்திற் பூதத்துக்

கோரொருமாத்திரையையெடுத்துஒன்றாகக்கூட்டிவைத்துவியானுதி பஞ்சவாயுக்கள்மற்றுமிராசதாம்சிஷ்டத்திற்பூதத்துக்கொருமாத்திரையெடுத்துத்தனித்தனியே வைத்ததுவாக்காதிகன் மேந்திரியங்கள்ஆகவிந்தப்பதினேழு தத்துவமும்இலிங்கசரீரமென்றும்சூட்சுமசரீரமென்றும் போகசாதனமென்றுஞ் சொல்லப்படுமிந்தச் சூட்சுமசரீரத்துடனே கூடுவதாய அவித்தையாகியபிரதிவிம்பனுக்குப் பிராக்ஞனென்கின்றபேர் மாறித்தைசத னென்றும் பேராயிற்று சகலஜீவாளுடைய சூட்சுமசரீரமுஞ்சூட்சுமபூதமுங்கூடிச்சமஷ்டிபுத்தியினாலேயிரணியகெற்பனென்றுமீசரர்சூட்சுமசரீரமென்றுஞ் சொல்லப்படுமிந்தச் சூட்சுமசரீரத்துடனே கூடியதாயமாயாப்பிரதிவிம்பருக்கு அந்தரியாமியென்கின்றபேர்மாறிச் சூத்திராத்துமாவென்றும் பேர்வந்தது எங்குந் தாதாத்மியமாக விருந்தபடியினாலே யிதுவேசமஷ்டியென்பது அவ்வவன் சரீரமாத்திரந்தாதாத்மியமாகவிருந்தபடியால் இதுவேவியட்டியென்பதுசிவாளுக்குப்போகமும்போகத்திற்கிடமானதூலசரீரமுண்டாகக்கண்டதாய்த்தாமதகுணமாகவிருக்கின்றவாகாசாதிகளைப்பஞ்சீகரணம்பண்ணினாரதெங்ஙனென்றால்பஞ்சபூதமுமொவ்வொன்றையிரண்டாக்கிமுதற்பாதிஐந்தையுமொவ்வொன்றுநான்காக்கித்தனக்கத்திய பூதங்களிரண்டாம் பாதிஐந்துடனே தன்னம்சிஷ்டத்துடனேகூட்டாமல்மற்றநாலுபூதங்களுடனுங் கூட்டுகின்றதுபஞ்சீகரணம் இப்பிரகாரம்பஞ்சீகரணம்பண்ணினதூலசரீரபஞ்சபூதங்களிலே அண்டங்களும் புவனங்களும் நால்வகைத்தூலசரீரங்களும் போக முதலானவஸ்துக்களுமுண்டாயின இந்தத்தூலபௌதீகங்களெல்லா மொருமைப்பாடாயீசுர தூலசரீரமென்றும் விராட்டென்றுஞ்சொல்லப்படுமிதனுடனேகூடினவீசுரனுக்குச்சூத்திராத்துமாவென்கின்றபேர்மாறி வைசுவாநரனென்கின்ற பேர்வந்தது தைசதார்களெல்லாந்தூலசரீரங்களுடனேகூடிவிசுவாகாரியத்தேகாளென்றுமனுஷியென்றுந்திரியக்குவென்றும்பேரானார்களீசுரவாக்கியமனனம்பத்திஞானமென்கின்றகாண்டத்திரயானுஷ்டானம்பண்ணிபந்தரமுகமாகாமலவெகுர்தமுகமானார்கள்எல்லாருமிப்படிராகத்துவேஷிராய்ப் பண்ணினகன்மத்தின் வசத்தினாற் சென்மபேதங்களிலே யாற்றிற்சுழிவழியேசுற்றுகின்ற புழுப்போலச்சுழல்கின்றார்கள் தயைப்பிருக்கின்றவொருவர்அனந்தப்புழுக்களைக்கனாயிலேவற்றினவுடனே மரத்தினிழலிலேயிருந்து சுகமடைந்தாற்போலச்சர்க்கருபடரிபாகத்தினாற்குருருபமாவர்த வீசுரனுடையஞானவுபதேசத்தினால் அபூர்வமாக வொருவன்

யிஷ

பஞ்சகோசவிவேகத்தையறிந்து முத்தியடைவானென்றுத்தரம்.

பஞ்சகோசமாவதேதென்கின்றசங்கைக்கு.

தூலசரீரமேயன்னமயகோசமென்றுஞ் சொல்லப்படுங் கன்மேந்திரியமும் பிராணவாயுவுங்கூடிப்பிராணமயகோசமென்றுசொல்லப்படுமனமும் ஞானேந்திரியமுங்கூடிமனோமயகோசமென்றுசொல்லப்படும்புத்தியும் ஞானேந்திரியமுங்கூடிவிஞ்ஞானமயகோசமென்னப்படும் இந்தக்கோசத்திரயாத்மகஞ் சூட்சுமசரீரமென்றுஞ்சொல்லப்படுமிவ்விக்காரணசரீரமேயானந்தமயகோசமென்றுத்தரம். (௰௪)

இந்தப்பஞ்சகோசங்களுடனே யாத்துமாவுக்குத் தாதாத்மியமெப்படியென்கின்றசங்கைக்கு.

நீலவஸ்திரத்துடனே கூடியவண்ணமாய்த்தோன்றினபடிகம்போல வாத்துமாவாகவிருக்கின்றதானும்பஞ்சகோசங்களுடனே கூடியவைகளேதானாகத்தோன்றுகின்றதேதாதாத்மியமென்றுத்தரம். (௰௫)

இந்தப்பஞ்சகோசங்களே தாமல்லவென்று தள்ளுகின்றவிவேகமெப்படியென்கின்றசங்கைக்கு.

அன்னுவயவியதிரேகமேவதனைத் தள்ளுகின்ற விவேகமென்றுத்தரம், (௰௬)

அன்னுவயமாவதேது வியதிரேகமாவதேது விவேகத்தினால்பஞ்சகோசத்தைத் தள்ளியப்பாற்பட்டிருக்கின்ற பிரமமே தாமெனறியும் வாறெங்ஙனென்கின்றசங்கைக்கு.

தானுறவழங்கின தூலசரீரந்தோற்றுதல்சாற்பனுவவஸ்தையிலே தான்தோன்றுகின்றதே அன்னுவயந்தான்தோற்றியிருந்தூலசரீரந்தோற்றாததே வியதிரேகஞ் சூட்சுமசரீரந்தோற்றாதசுழுத்தியவஸ்தையிலே தான்தோன்றுகின்றதே அன்னுவயந்தான் தோற்றுகிறும்இலிங்கசரீரந்தோன்றாததேவியதிரேகமிந்தச்சூட்சுமசரீரந்தள்ளப்பட்டதே மூன்றுகோசமுந்தள்ளப்பட்டனசுழுத்திதோன்றாதசமாதியிலே தான்தோன்றுகின்றதே யன்னுவயந்தான்தோற்றுகிறுஞ்சுழுத்திதோன்றாததேவியதிரேகமுஞ் சிப்புல்லிலே பக்கத்துமட்டைதள்ளி நடுவிலாணியெடுக்கின்றதுபோல வன்னுவயவியதிரேகயுத்தியினாலே தானுய்வழங்கின பஞ்சகோசத்தைத் தள்ளியப்பாற்பட்டிருக்கின்ற பிரமமேநாமென்கின்ற வுறுதிப் புத்தியுள்ளவர்களேபேரறிவர்களென்றுத்தரம். (௰௭)

சீவனுக்கும்பரமாத்துமாவுக்கு மிப்படிபேதத் துவமசாதித்ததற்குப் பிரமாணமேதென்கின்றசங்கைக்கு

சாமவேதமகாவாக்கியமேபிரமாணமென்றுத்தரம். (௰௮)

அர்த்தவாக்கியத்தற்கர்த்தமேதென்கின்றசங்கைக்கு.

முன்சுயம்பாகியாகவிருந்தவனுக்குக்காலாந்தரத்திலே துரைத்தனம்வந்து தண்டிகையிலேயேறக்கண்டவிடத்திலே யவனிவனென்கின்ற சொல்லிலே சட்டுமுதலான வுபாதிலட்சணமுமிவனென்கின்றசொல்லிலே தண்டிகைமுதலான வுபாதி இலட்சணமும் விட்டிரண்டுசொல்லினுஞ்சரீரமாத்திரமாக அருத்தமாகக்கொண்டு இவனேயவனேயிவனென்று ஒருவனைப்புணரப்பறக் காட்டுகின்றதுபோலச்செகத்திற்குபாதானகாரண மானபிரமமாயாசபளிதமான விசுரன் தாமசபரிணாமமானவருடையசரீரமிம்மூன்றையுங் காட்டுந்தற்பதமலினதத்துவமான வவித்தையாப்பிரதிபிம்பனையனுடைய சரீரவுபாதியிவை கட்கப்பட்டாலங்கூடத்தரிம்மூன்றையுக்காட்டுந் தொம்பதமிவர்களிருவரையுமொருவனென்றபடிமகாவாக்கியமிரண்டிட்டத்திலுமுள்ள வுபாதியினுடனேகூடினவைகதந்தியங்களையும் விட்டகண்டமாயிருக்கின்றசச்சிதானந்தமொன்றைத்தானேபுணரப்பறக்காட்டும் வழியேயவிட்டலட்சணைவிட்டும்விடாதலக்கணையென்றுத்தரம். (௧௯)

இப்படிக்கொத்தஞானம்வரத்தக்கசுரு சந்நிதானத் திலே செய்காரியமேதென்கின்றசங்கைக்கு.

சிரவணாதிகளேசெய்காரியமென்றுத்தரம். (௨௰)

சிரவணாதிசெய்காரியமெத்தனைவித மவைகட்கு இலட்சணமேதென்கின்றசங்கைக்கு.

சிரவணாதிகள்நான்குவிதம் சகலவேதங்கட்குமாறுலிங்கத்தினாலர்த்தவிசாரம்பண்ணிப்பிரமதாற்பரியமாககாண்கின்றதே சிரவணமந்தபுத்தியினாலனவாதஞ்சித்திக்கின்றதேமனனமிப்படியிருவகையினாலுந் தெளிந்தபொருளிலேமனதையேகாக்கிரமாகவைக்கின்றதே நிருத்தியாசனந்தியானம் பண்ணுகின்றவனையுந்தியானத்தையுமழித்துத் தியானிக்கப்படுகின்றவஸ்துவுமாத்திரமாகவிருக்கின்றசித்தமே சமாதியென்றுத்தரம். (௨௧)

இப்படிக்கொத்தசமாதிக்குப்பலனேதென்கின்றசங்கைக்கு அநாதிகாலசஞ்சிதகன்மநாசமுந்தன்னை நிருமலம்பண்ணுகின்ற தருமமும்வாசனாட்சயமும் அபரோட்சஞானமுமஇந்தநான்குந்தனக்குப்பிரயோசனமென்றுத்தரம். (௨௨)

இந்தவநீதசுகசமாதியிலேயிருக்கின்றவனப்படியேயிராமத்பிரபஞ்சத்திலே விழிப்பானேனென்கின்றசங்கைக்கு

பிராரத்துவ சேடத்தினாலென்றுத்தரம். (௨௩)

இப்படித்தத்துவவிவேகத்தைப்பலப் படவிசாரம்பண்ணினமனதைச்சமாதியிலேஇலயப்பண்ணிச்சகலசங்சாரத்தையும்விட்டுப்பதப்பிரமமாகலாமென்றுத்தரம். (௨௪)

தத்துவவிவேக முற்றுப்பெற்றது.

ஏழாவது,

பஞ்சபூதவிவேகதீபிகை.

வித்தியாரணியசுவாமிகள் சத்துத்தானே இத்தனையுமாயிருக்கிறதென்கின்ற சாமவேதார்த்தத்தைப் பஞ்சபூதவிவேகத்திலே வெளிப்படையாம்படி சொல்கின்றார். சத்தென்று சொல்லப்பட்டதேது இத்தனையென்று சொல்லப்பட்டதேதென்கின்ற சங்கைக்கு.

சத்தென்னப்பட்ட தத்துவிதப் பிரமம் இத்தனையென்று சொல்லப்பட்டது பஞ்சபூதமதினுடைய குணங்களைத்தம் அவைகளையறிகின்ற இந்திரியங்களைத்தம் இதற்குக் காரியமாகவிருக்கப்பட்ட இந்திரியங்களைத்தம் அந்தக்கரணமொன்று நாமென்கின்றவொருவனித்தனையுங்கூடினதற்கு இத்தனையென்றுத்தரம். (௧)

இந்தப் பூதமைந்துக்குமுள்ள எத்தெந்தப்பூதத்திற் கெந்தெந்தக்குணங்களுண்டென்கின்ற சங்கைக்கு.

ஆகாயத்திற்குக் குணம்-௧-வாயுவிற்குக் குணம்-௨-அக்கினிக்குக்குணம்-௩-அப்புவிற்குக்குணம்-௪-பிருதிவிக்குக் குணம் ரு-என்றுத்தரம். (௨)

இந்தப் பூதங்களிலே இந்தக்குணங்களைப் பகுத்துக்காட்ட வேண்டுமென்கின்ற சங்கைக்கு.

தொனியொன்றுமே யாகாயத்தின் குணம் - சீறுசீறென்கின்ற சத்தமும்-சீதவுஷ்ணபரிசமும் - வாயுவின் குணம் புருபுருவென்கிற சத்தமும் உட்டணபரிசமும் பிரகாசமென்கின்ற ரூபமும்-அக்கினியின் குணம்-குளுகுளுவென்கின்ற சத்தமுஞ் சயித்தியப் பரிசமுஞ் சுக்கிலரூபமு மதுரரசமும் அப்புவின் குணம் கடகடவென்கின்ற சத்தமுங் கடினபரிசமும் பஞ்சவர்ணரூபமு மறுசுவையிரசமு நற்கந்தந்துர்க்கந்தமும் பிருதிவியின் குணமென்றுத்தரம். (௩)

இதற்குப் பிரமாணமேதென்கின்ற சங்கைக்கு.

சிரோத்திராதி ஞானவிந்திரியத்தினாலநுபவிக்கப்படுகின்றதே பிரமாணமென்றுத்தரம் (௪)

இந்திரியங்களுக் கெப்படி வெளிநாட்டந்தானேயோ உண்ணாட்டமுண்டோவென்கின்ற சங்கைக்கு:

செவியைப் பொத்தினால் மூடினால் உள்ளிளாச்சல்கேட்கையாலுங் குடிக்கையிற் பொசிக்கையிற் சீதவுஷ்ணபரிசமறிகையினாலுங் கண்ணைமூடினவிடத்தி லுள்ளிருட்டுருபத்தோற்றுகை

யிருக்கும் வார்த்தைபண்ணுகிறபோது சகங்களையறிகையாலும் வப்பட்டிடும்போது நற்கந்த துர்க்கந்தங்களை யறிகையினாலும் உண்டாட்டமுண்டென்றுத்தரம். (ரு)

இதற்குச் சகாயவிந்திரியமேது அதற்குத்தொழிலேதுவெ ன்கின்ற சங்கைக்கு.

வாக்காதிசகாயவிந்திரியமும் வசனாதிதொழிலுமென் றுத்தரம். (௬)

அந்தவிந்திரியமானமனதும் அதன்றொழிலு மேதென்கி ன்ற சங்கைக்கு.

பத்துஇந்திரியத்துக்கு மிராசாவாயிந்திரியத்தின் வழியே குணதோஷம் விசாரிக்கின்றதா யிருதயகமலத்தினடுவேயிருக்கி ன்றது மனது வைராக்கியம் பொறுமைமுதலான சாத்துவீகப் பிறவிர்த்தியுங் காமக்குரோதமுதலான தாமதப்பிறவிர்த்தியுமித ன்றொழிலென்றுத்தரம். (எ)

இந்த மூன்றுவகைப் பிறவிர்த்திக்குப் பலனேதென்கின்ற சங்கைக்கு.

சாத்திகத்திலுண்டாம் புண்ணியம் இராசதத்தி லுண்டாம் பாவம் தாமதத்திலிருவகையுமற்று வீண்காலம் போமமென்றுத் தரம். (அ)

இப்படிப் பதினொரு இந்திரியத்தினாலுமறியப்படுகின்றசக லசெகத்துஞ்சத்துத்தானேயென்பது கூடாதென்கிறசங்கைக்கு

விசாதீகஞ் சுசாதீகஞ் சுகதபேதமிம்மூன்றுமற்றது சத்து த்தானேயென்றுத்தரம். (கூ)

விசாதீகஞ் சுசாதீகஞ் சுகதபேதமாவதேது இந்தச்செக த்து இந்தமூன்று மல்லவென்கின்றதெப்படியென்கிறசங்கை க்கு.

மரத்துக்குக் கல்லுவிசாதீகமது மரஞ்சுசாதீகம் இலை-பூ-காய்.சுகதபேதம் இந்தப்படி சத்திற்குச் செகத்து விசாதீகமெ ன்னக்கூடாது அசத்தில்லாதபடியினாற் சத்திற்குச் செகத்துச் சுசாதீகமென்னவுங்கூடாது மருசத்தில்லாதபடியினாற்சுகதபே தமென்னவுங்கூடாது சத்து நிர்வயமாகையா லிவையெல்லாம் அசத்துத்தானேயென்றுத்தரம். (ய)

அதுகூடாது எல்லாஞ்சத்துத்தானேயென்கின்றசங்கைக்கு

சூரியனந்தகாரத்துடனே கூடியுமிரான் அவனந்தகாரமு மல்லவென்கின்றதுபோலச் செகத்தேயசத்தானும் சத்துடனே கூடியிராது சத்தாகவுமாட்டாதென்றுத்தரம். (யக)

சத்தைத்தவிர வொன்றுமில்லாவிட்டாற்சிருஷ்டிக்குமுன்

னெல்லாஞ் சத்தாயிருக்குமென்று வேதவாக்கியஞ் சொல்லுவா னேனென்கின்ற சங்கைக்கு.

தேகவாசனையுடனே கூடியிருக்கின்ற வேலையைக் குறித்துச் சொல்லுகிறதேயல்லாம லுண்மையல்ல வாகையினாற் சங்கையு முக்காமுஞ் சுவிதத்திலேயல்லாம லச்சுவிதத்திலேயில்லையென் றுத்தரம். (௰௨)

அநியாயமாயிருக்கின்றதேன் உண்மையேதென்கின்ற சங் கைக்கு.

அசையாமற் கெப்பிரமாட்பிரமையுமல்லாம லந்தகாரமு மல்லாமல் வாக்குமனதுக்கு கோசரனாயிருக்கின்ற பிரமமே சத்தெ ன்றுத்தரம். (௰௩)

பிருதிவிமுதலானவை பரமாணுவாய்ப் போனபடியினா லி ல்லையென்கின்றது சம்மதித்தேன் பிரளயத்திலே யாகாசமு மில் லாமற் போமென்கின்றது கூடாதென்கின்ற சங்கைக்கு.

அத்தியந்தம் நிச்சசத்தாயிருக்கின்ற ஆகாச முன்புத்தி யிலே பட்டாற்போல நிராகாசமாயிருக்கின்ற சத்துருப்முடைய புத்தியிலே படுமென்றுத்தரம். (௰௪)

சத்தாயிருக்கின்ற சுத்தசைதந்நியத்தை எப்போது அநுபவி த்தோமென்கின்ற சங்கைக்கு.

நிர்ச்சிந்தையாயிருக்கின்றவேளையிலே யநுபவித்தோமெ ன்றுத்தரம். (௰௫)

எப்போது சத்தென்கின்ற புத்தியுமில்லையென்கின்ற சங் கைக்கு.

அது உன்மனதுக்குச் சம்மதமென்றால் நிர்ப்புத்தியாயிரு க்கின்றவவஸ்தைக்குச் சாட்சிமாத்திரமாகவிருந்தோமென்கின்ற வநுபவமே போதுமாகையினால் மனோவிகாரமற்றவேளையிலே சாட்சிமாத்திரமாகவிருக்கின்றாற்போல மாயாப்பிறவிர்த்திக்கு மூலமாஞ் சத்திருக்குமென்றுத்தரம். (௰௬)

மாயைக்கு இலட்சணமேதென்கின்ற சங்கைக்கு.

சத்துமல்லா மலசத்துமல்லாம லுற்றுப்பார்த்தாலில்லாமற் போகின்றதே இலட்சணமென்றுத்தரம். (௰௭)

சத்தைவிட மாயாசத்தியில்லாவிட்டாற் சத்தென்ற இலட் சணமாகட்டுமென்கின்ற சங்கைக்கு.

அசத்து மாயாகாரியமல்லாமற் சுருபமல்ல வாகையால், கடசத்தி மண்ணிலேயென்றாலு மேகதேசமாக விருக்கின்றாற் போல மாயாசத்தியும் பிரமத்தினிடத்திலே யேகதேசமாகவிரு க்குமென்றுத்தரம். (௰௮)

பிரமத்தினிடத்திலே யிருக்கின்றமாயை யேதுசெய்யுமெ ன்கின்ற சங்கைக்கு.

சுவரைப்பற்றியிருக்கின்ற வருணஞ் சுவரைத்தானே பலவி தசித்திரமாகப் பேரிட்டாற்போலப் பிரமத்தைப் பற்றியிருக்கி ன்ற மாயையும் நிருவிகாரத்தினிடத்திலே விகாரத்தைக்கற்பிக்கு மென்றுத்தரம். (௰௯)

மாயையினாற் கற்பிக்கப்பட்ட விகாரங்களேதென்கின்றசங் கைக்கு.

முந்தினவிகாரமாகாச மதற்கு இலட்சணம வகாசமென் றுத்தரம். (௨௰)

சத்திற்குச் சுபாவமெத்தனை யாகாயத்திற்குச்சுபாவமெத்த னையென்கின்ற சங்கைக்கு.

உண்டென்கின்றதுமாத்திரமே சத்தின்சுபாவம் உண்டென் கின்றதுஞ் சத்தமும் ஆகாயத்தின் சுபாவ மசத்திலே சத்தமில் லைச் சத்துஞ்சத்தமு மாகாயத்தின் சுபாவமென்றுத்தரம் (௨௧)

சத்துத்தானே யாகாசமானாற் சத்தின்குணமாகாசமென்று சொல்லவேண்டுமேயல்லாமல் ஆகாயத்தின்குணஞ்சத்தமென்று வாதிகள் சொல்லுவானேனென்கின்ற சங்கைக்கு.

பிரமத்தினிடத்திலே யாகாயத்தைக் கற்பித்த மாயைக்குக் குணகுணிகளைத் தாறுமாறாத்திருப்பிவித்து அப்படிப்பிரமிக்கி ன்றது மாயைக்குச் சுபாவமென்றுத்தரம். (௨௨)

இது தெளியும்வழி யேதென்கின்ற சங்கைக்கு.

வேதாந்தவிசாரம்பண்ணினாற் சத்தினிடத்திலே யாகாசங் கற்பிதமானபடியினாலே சத்தே பிரதானமாகவு மாகாயத்தைய ப்பிரமாணமாகவுமறியப்படுமென்றுத்தரம். (௨௩)

சத்தைத்தவிர புறம்பாயிருக்கின்ற வாகாயத்தைச் சத்தெ ன்றறிகின்ற தெப்படியென்கின்ற சங்கைக்கு.

ஆகாயமுண்டென்னுமிடத்தி லுண்டென்கின்றசொல்லி னும் விம்வகித்துப்பார்த்தால் காட்டப்பட்டபொருளைத்தவிர வா காசமில்லாதபடியினாலுமாகாசஞ் சத்துந்தானேயென்றறியென் றுத்தரம். (௨௪)

ஆகாசத்தோன் றுகின்றபடியினா லில்லையென்கின்ற தெப்ப டியென்கின்ற சங்கைக்கு.

யாதொன்றுஞ்சத்தைத்தவிர அசத்தாகவிருந்து தோற்று கிறது அதெல்லாஞ்சொற்பனபதார்த்தம்போல மித்தையென் றறியென்றுத்தரம். (௨௫)

இப்படி யாகாயத்திலே சத்தையு மசத்தையும் பிரித்துத்

காணநின்றபோது ஆகாயமித்தையாவானேனென்கின்ற சங்கைக்கு.

கற்பிதமாயாமயமானபடியினாற் காரணம்போல மித்தையாகக்கண்டதென்றுத்தரம். (௨௭)

பொய்யாயிருக்கின்ற வாகாசமு மெய்யாயிருக்கின்ற சத்துமேகமாகப்பொருந்திச் சகலத்திற்றுந்தோற்றுகையாற் பிரித்துக்காணகின்ற வழியெப்படி யென்கின்றசங்கைக்கு.

சாதிவேற்றியைப்போலவுங் குணக்கிரியைப்போலவுமுடலுமுயிரும்போலவுஞ் சத்துமாகாயமும்வேறென்றறியென் றுத்தரம்.

இப்படியறிந்தாலும் சத்துமாகாயமும் வேறென்றறியப்படவில்லைய தேதினாலென்கின்றசங்கைக்கு.

பூர்வபுத்தியே சாக்கிரமாகாதபடியினாலுஞ்சந்தேகத்தினாலுமேறவில்லைசாவதான மாய்ப்பிரமாணமூலமாய் விசாரித்தாலேறுமென்றுத்தரம். (௨௮)

விசாரித்தறிந்தவனுக்குப் புத்தியிலெப்படியிருக்குமென்கின்றசங்கைக்கு.

சத்தாயிருக்கின்றவஸ்துஅகண்டமென்று மாகாயம்பரிச்சின்னமானபடியினால் மித்தையென்றும்புத்தியிலே திடப்பட்டிருக்குமென்றுத்தரம். (௨௯)

இப்படியறிந்தவன் லோகத்தாருடனே யெப்படிப்பேசுவானென்கின்றசங்கைக்கு.

சத்தைத்தானே யாகாயமென்றும் பேசுகின்றவனையுமாகாயத்தைச் சின்மாத்திரமென்றும் பேசாதவனையுங் கண்டவுடனே யாச்சரியப்படுவானென்றுத்தரம். (௩௰)

இப்படியாகாயமித்தையென்றுஞ் சின்மாத்திரமேசத்தியமென்றும் பிரித்தறிந்தபின்செய்காரியமேதென்கின்றசங்கைக்கு

இந்தஞானத்தின்படியே வாயுமுதலானபூதங்களினுஞ்சத்துப்பரிபூரணமானபடியினாற்காண்பிக்கிறதென்றும் ஆகாயம்பரிச்சின்னமானபடியினாற் காண்பிக்கவில்லையென்றும்பூதங்களெல்லாமித்தையென்றும் திடப்படுத்தவேண்டுமென்றுத்தரம். (௩௧)

பூதங்கள்பரிச்சின்னமாவெப்படிக் காண்பிக்கப்படுகின்றன பூதங்களுக்குச்சுபாவகுணமென்ன அந்நியகுணமென்ன வென்கின்றசங்கைக்கு.

சத்தினிடத்திலே யேகதேசகற்பிதமாயைமாயையினிடத்திலேயேகதேசகற்பிதமாகாசம் ஆகாசத்திலேயேகதேச கற்பிதம் வாயுவாயுவுண்டென்கின்றது சத்தினங்கிஷம் சத்தைவிட்டுப்பார்த்தால் வாயுக்காருதற்போனபடியினாலே மாயையினங்கிஷஞ் சத்தமாகாசவங்கிஷம் ஆகாசமாகவிம்மூன்றும்வாயுவிற்குக்கார

ணசுபாவகுணம் பரிசமிவைகளிலுஞ் சத்தைப்பகுத்தாற்காணுமை
ற்போகின்றபடியினாலே வாயுமித்தையென்றுத்தரம். (௯௨)

இப்படிவாயுவு மித்தையென்றறிந்தபின்பு செய்காரியமேதெ
ன்கின்றசங்கைக்கு.

வாயுவிற்பத்திலொன்றாய்க்கற்பிக்கப்பட்ட அக்கினியு மித்தை
யென்றேகாணவேண்டும் அக்கினியுண்டென்கின்றதுசத்துடனுடை
ய அங்கிஷிஞ்சத்தை விட்டுப்பார்த்தாலில்லாமற்போகின்றதுமா
யையினங்கிஷிஞ் சத்தமாகாசத்தி னங்கிஷிப்பரிசம் வாயுவினங்
கிஷிமச்சகக்காரணகுணம் நாலுஞ்சுபாவகுணமரூபமாயித்தனை
யஞ்சத்தைத்தவிர வேறல்லவென்று காண்கின்றவாசனை பண்ண
வேண்டுமென்றுத்தரம். (௯௩)

இப்படியக்கினியு மித்தையென்றறிந்தபின் செய்காரிய மே
தென்கின்றசங்கைக்கு.

அக்கினிபத்திலொன்றாய்க் கற்பிக்கப்பட்டது அப்பு அப்புவுக்
கு இரசத்துடனேகூடவாறுகுணம் அப்புவிற்பத்திலொன்றாய்
க்கற்பிதம் பிருதிவிபிருதிவிக்குக் கந்தத்துடனேழு குணமென்
று பிருதிவியிற்பத்திலொன்றுகற்பிதம்பிரமாண்டம்பிரமாண்ட
த்திற்கற்பிதம் புவனங்கள் புவனத்திற்கற்பிதஞ் சரீரங்களென்று
மிருக்க இவைகள் சத்தைவிட்டுப் பார்த்தாலிவைகட்குச்சுரூபமில்
லாதபடியினாலுஞ் சின்மாத்திரமென்று காண்கின்றதே மசெய்கா
ரியமென்றுத்தரம். (௯௪)

இப்படித்துவிதமெல்லாமாயாகற்பிதமென்று அநாதரவு பண்
ணிப்போட்டாற்சேஷமில்லையோ வென்கின்றசங்கைக்கு.

சாங்கியன் கணாதன் பௌத்தன் முதலானபேர்கள்சகத்துப்
பேதத்தைச்சத்தியமென்று நிச்சயபுத்திபண்ணியத்துவிதத்தை
யநாதரவுபண்ணின பேர்க்குப் பிரத்தியபாய மில்லையென்றால்
மாயாகற்பிதமாக விருக்கின்றதுவிதத்தையநாதரவு பண்ணிப்
போட்டிருக்கின்ற நமக்குப்பிறத்திய பாயமிலேசமில்லையென்று
த்தரம். (௯௫)

இப்படித்துவிதத்தையவமதிபண்ணினாற் பிரயோசனமேதெ
ன்கின்றசங்கைக்கு.

துவிதத்திலே யநாதரவுபண்ணினு லத்துவிதத்திலேபுத்திதிட
ப்பட்டுச் சீவன்முத்த னிவனாவானென்றுத்தரம். (௯௬)

இப்படிச்சத்தையு மசத்தையும் பகுத்தறிந்தால் சீவன்முத்தி
யெப்போதுவருமென்கின்றசங்கைக்கு.

திடப்படவறிந்தவன் சேர்முத்தியென்றுத்தரம். (௯௭)

பிராணன்விடும்போதே அந்தநிலைமைவரவேண்டாமோ வென்கின்றசங்கைக்கு.

நாங்கற்றபோதகஞ்சொற்பன சுழுத்தி யவத்தையிலேமறந்திருந்தாலுஞ் சாக்கிரோதயத்திலே சந்நிதியிலே முன்னிற்கின்றாற்போலப் பிராணன்போகின்ற மூர்ச்சையிலே மறந்திருந்தாலுஞானம்போகாதென்றுத்தரம். (௫௮)

கற்றபோதம் பின்னையெதினாற்போமென்கின்றசங்கைக்கு.

வேதாந்தத்திற்குமேற்பட்ட பிரமாணமொன்றுண்டானால் அதனால் போகிறதேயல்லாமற் சுழுத்திமூர்ச்சையிலே போகின்றதல்ல வாகையினால் தத்துவஞானந்தம்மைக்கான்றினும் வாதையில்லையென்றுத்தரம். (௫௯)

ஆகையினாலித்தப் பஞ்சபூதவிவேகத்தை விசாரம்பண்ணின் சகலபிரபஞ்சத்தையுஞ் சின்மாத்திரமாய்க்கண்டு அத்துவிதநிலைபெற்றவன்சீவன்முத்தன் இந்தப்பிரமாகார நிலையைப் பெற்றவனே யொருயோகமுங் கிட்டாதென்று பகவானுங் கீதையிலேசொல்லியிருக்கிறார். இரண்டாவது பஞ்சபூதவிவேகம் முற்றிற்று.

எட்டாவது,

பஞ்சகோசவிவேகதீபிகை.

வித்தியாரணியசுவாமிகளேழைகளிடத்திற் கிருபையினாலே பஞ்சகோசவிவேகத்திலே எளிதாய்ப்பிரமத்தையறியும்படி சொல்லுகிறார் தைத்திரியமென்கின்ற வுபநிடதத்திலே குகைக்குளிருக்கின்ற பிரமத்தையறிந்தால் முத்தியுண்டென்று சொன்னதற் கர்த்தமேதென்கின்ற சங்கைக்கு.

தேகத்துக்குட்பட்டது பிராணன் அந்தப் பிராணனுக்குட்பட்டது மனம் மனத்துக்குட்பட்டது விஞ்ஞானம் விஞ்ஞானத்துக்குட்பட்டது ஆநந்தமிந்தவைந்துங்குகையென்றுமிவைக்குள்ளிடமாயிருக்கப்பட்ட தாத்துமாவென்றுமுத்தரம். (௧)

இந்தவைந்தையுந் தானே யாத்துமாவென்று சகலவாதிகளும் பின்னைகளுஞ் சொல்லுகையா லதனைத் தள்ளுவதெப்படியென்கின்ற சங்கைக்கு.

பிதா போசித்தவன்னம் வீரியத்திலுண்டானதேகமாகையாலு மன்னத்தினால்விர்த்திக்கையினாலும் அன்னமயமாகின்ற சரீரத்தைநாமென்னக்கூடாது தேகத்திற்குள்ளிருக்கின்ற இந்திரியங்களையேவுகிறவனுப் பலதாரதன்மியத்தினாற் றிரிசியமாகவிருக்கின்ற பிராணமயனையுந் நாமென்னக் கூடாதுதேகத்

னை நானென்கின்றபுத்தியும் விடுமாகிலேயனைதெல்கின்ற வபிமானத்தையும் பண்ணிக்கொள்ளி காமக்குரோதமுதலானவ வித்தைகளிலும்பல்கின்ற மனோமயனையுந் தாமென்னக்கூடாது காய்ச்சினவிரும்புண்டைபோலச் சாக்கிரத்தில் நகசிகைபரியந் தங் கலந்திருந்து சுழுத்தியிலணைந்துபோகின்ற விஞ்ஞானமய னையுந் தாமென்னக்கூடாது புண்ணியபோகத்திலுஞ்சுழுத்தியிலு மந்தரமுகமாயானந்தப் பிரதிவிப்பத்துடனேகூடி க்ஷணகாலத் திலே நட்டமாய்ப்போகின்ற வானந்தமயனையுந் தாமென்னக் கூடாதென்றுத்தரம். (௨)

இப்படியிந்தவைந்து மேயாற்றுமா வல்லவென்றபோ னிவைக்கற்பிதமாகவாற்றுமாவை வேறேகாணுமென்கின்றச ங்கைக்கு.

பஞ்சகோசங்களையு மிவைகட்குச்சொன்ன இலட்சணத்து டனேதோற்றுவித்து அப்பாலிலியொன்றுங்காணுமென்றிருக் கின்றவிம்பனைசத்தியமேயாற்றுமாவென்றுத்தரம். (௩)

இந்தப்பஞ்சகோசங்களை யாற்றுமாவாகக்கண்டா லாற்று மாவைக்காணுகின்றவராரென்கின்றசங்கைக்கு.

சுதசித்தசை சத்தியமாகின்ற வாற்றுமா செடங்களையெல் லாமறிகிறவர் தாஞ்சேடமாகாதபடியினு லொன்றிலுமறியப்ப டாதவனென்றுத்தரம். (௪)

அறிவாயிருந்துமொன்றினுலு மறியப்படாதபோதே யா ற்றுமாவறிவென்கின்றதெப்படியென்கிறசங்கைக்கு.

வெல்லத்திற்குத்தன்றுடையரசந் தன்னாலறியவனுபவிக்க ப்படாதிருந்தாலு மற்றியமாயிருக்கின்ற விந்திரியங்களினுலனு பவிக்கப்பட்டுங்கொண்டு மதுரஞ்சுபாவமென்றதுபோலச்சகல த்தையுமறிகின்றவாற்றுமாவுக்குத்தானறி வென்பதற்குச்சந்தே கந் தேவையில்லையென்றுத்தரம். (௫)

அறியப்பட்டது பிரமமோ வறியப்படாதது பிரமமோ வென்கின்றசங்கைக்கு.

இந்தவிருவகையுமல்ல இதற்குப்பாற்பட்டது பிரமமென் றுத்தரம். (௬)

இப்படியிருந்தா லவனைத்தாமறிவதெப்படியென்கின்ற சங் கைக்கு.

எனக்குநாவுண்டோ வில்லையோவென்கிற சொற்போலவறி வாயிருந்து மறிவெப்படியிருக்குமென்றுகேட்டவனுக்கிலச்சை யில்லையோவென்றுத்தரம். (௭)

அஞ்ஞானியாகவிருக்கின்றவனுக்குப் பிரமநிச்சயம்வர வழிபாடேதென்கின்ற சங்கைக்கு.

அறிவிருந்தாலொழிந்தவெல்லாஞ் சடமாய்ப்போனாலும் நித்தியபோதமாயிருக்கின்ற வறிவே பிரமமென்று காணவேண்டுமென்றுத்தரம். (அ)

இந்தவறிவாயிருக்கின்ற வாத்துமாவேபிர்ம்மமானாற் சச்சிதானந்தமேதென்கின்ற இலட்சணத்திலே சித்தில்லாத இலட்சணந்தவேன்சொல்லவில்லை யென்கின்றசங்கைக்கு.

இப்படியறிவாயிருக்கின்றது தானேயெப்போதுமுண்டென்றறிகையினாலு மொருகாலத்திலு மில்லையென்பதுபோகாதபடியினாலு மாத்துமாசத்தென்பது கூடுமாயாகற்பிதமாக விருக்கின்றகாலதேசவஸ்துக்களையாத்துமா வறிகையால் சித்தென்பதுகூடுங்கடந்தபொருளானபடியினாலு மிந்தமூன்றினாலும் வரையற்றதானந்தமென்பது கூடுமென்றுத்தரம். (௯)

இப்படிக்கொத்தவாத்துமாவெப்படிக்கொத்தவனென்கின்றசங்கைக்கு.

இந்திரியங்கட்கு விடயமாகாதபடியினா லிப்படிக்கொத்தவனென்றுஞ்சொல்லக்கூடாது நானாகவிருக்கின்றபடியினா லப்படிக்கொத்தவனென்று பரோட்சமாகச்சொல்லவுங்கூடாது இப்படியிருக்கையினாலுஞ் சொல்லப்படாதவனே யாத்துமாவென்றுத்தரம். (ய)

இப்படிக்கொத்தவனே யிப்படிப்பட்டவனென்று நிர்ணயம்மாகாவிட்டாலிவன் சீவனென்றும் இவனீசுவரனென்று மகாவாக்கியத்தினால் இருவருக்கும் ஐக்கியம்வந்தால் மோட்சமென்றுஞ் சொன்னவேதவாக்கியமெப்படிக்கூடுமென்கின்றசங்கைக்கு.

ஓர்புருடனுக்குப் புத்திரபௌத்திராதிகளைக்குறித்துத் தகப்பன்பாட்டனென்று வந்த இரண்டுநாமமு மிந்தவுபாதிகளில்லாவிட்டால் மாயையவித்தையென்னப்பட்ட விரண்டுபாதியினுமீசுவரனென்றுஞ் சீவனென்றுஞ் சொல்லப்பட்டதொரு பிரம்மத்தைத்தானே யுபாதிமித்தையென்றறிந்தவுடனே சீவனுமல்லீசுவரனுமல்ல நாம்பிரமந்தானேயென்கின்றவைக்கியம் வருமென்றுத்தரம். (யக)

இப்படிக்கொத்த ஞானத்திற்குப் பலனேதென்கின்ற சங்கைக்கு.

இப்படியாத்துமாவே பிரமமென்றும் பஞ்சகோசவிவேகத்தினாற் பகுத்தறிகின்றவன் றானிருக்கின்ற சீவன்முத்தனுக்குச் சங்சாரமில்லையென்ற வேதவாக்கியப்படிக்கு முத்தனைப்பிரமமாகவேயிருப்பவனைக்காலத்திரயத்திலுஞ் சங்சாரந்தொடராது இதுவேபலனென்றுத்தரம். (யஉ)

எட்டாவது-பஞ்சகோசவிவேகம் முற்றிற்று.

ஒன்பதாவது,

துவிதவிவேகதீபிகை.

வித்தியாரண்ணியசுவாமிகள் துவிதவிவேகம் சொல்லுகிறார் துவிதமெத்தனை விதமென்னும் சங்கைக்கு.

ஈசுரனாற் சிருட்டிக்கப்பட்டது தொய்தமென்றும் சீவனாற் சிருட்டிக்கப்பட்டது தொய்தமென்றும் இரண்டாயிருக்கு மிவற்றிற்பஞ்சீகரணம் பண்ணினதால பூதபௌதிகபரியந்த முண்டான தத்துவமெல்லா மீசுரசிருட்டியென்று சொல்லப்படும் இவைக்குட்பட்ட சாக்கிரமுதல் மோட்சமுதல் பரியந்தமுமுள்ள வத்தைகளினுடைய கற்பனையு மந்தந்தவவத்தைகயிலேயுள்ள காரியருஞ்சிரமும் இல்லைமேமுறையானமுதலான சகலகற்பனையுஞ்சீவசிருட்டியென்று சொல்லப்படுமென்றுத்தரம். (க)

இவைகளாயீசுரசிருட்டியென்று சொல்லப்படாதோவென்னின் சங்கைக்கு.

பிராணிகளுண்டாக்கப்பட்டபெண்ணைந்தியளுகைந்தபோகபத்தாவிற்குப்போக கற்பனைக்கேயிடமாகுற்போல நல்லதுமெல்லாதென்கிற விடயங்கள் போக கற்பனைக்கேயிடமாயின ஆகையினுமிவையெல்லாஞ் சீவசிருட்டியென்றே சொல்லப்படுமென்றுத்தரம். (உ)

ஈசுவரனுடைய காரியமுஞ் சீவனுடையபோகமு மீசுரசிருட்டியென்றுஞ் சீவசிருட்டியென்றுஞ் சொல்வதெப்படியென்னுஞ்சங்கைக்கு.

ஈசுரனாற் சிருட்டிக்கப்பட்ட மண் பொன் பெண்முதலானவைகளிலிவையெனக்ககப்பட்டதென் றொருவன் சந்தோஷித்தா னிவை நமக்ககப்படாமற்போயினவென் றொருவன் சிலேசிக்கின்றான் விரத்திவந்தவ னுபேட்சையாக விருக்கின்றானிப்படிப் பிரியாப்பிரியமுபேட்சையென்று மண்முதலானவைகளிற் காண்பிக்கின்ற மூன்றாங்காரங்களு மனோகற்பிதமான சீவசிருட்டியேயல்லாமலீசுரசிருட்டியல்ல விந்த மூன்றாங்காரமு மற்றாத்தன்பாவத்திலிருந்ததே யீசுரசிருட்டி மாதாவென்றுமுடன்பிறந்தாளென்றும்வெகுவிதவிகாரமாகத்தோற்றுகின்றமொருபெண்டாட்டி யீசுரசிருட்டி யதனைக்குறித்துண்டானவிகாரங்களு மந்தவாங்காரத்திற்கேற்க வனைவன் மனநிலே சங்கற்பித்தசங்காரமுஞ் சீவசிருட்டியென்றறியவேண்டுமென்றுத்தரம். (ந)

பிராந்தியினுஞ் சொப்பனத்தினு மனோராச்சியமாகவு முற்பிக்கப்பட்ட வந்தக்காலகற்பனையெல்லாஞ் சீவசிருட்டியா

கட்டுஞ் சாக்கிரத்திற் பிரமாணத்திற்பிரமாணியமாக அறியப்பட்டபிரமேயங்களெல்லாஞ் சீவசிருட்டியென்பது கூடாதென்கின்றசங்கைக்கு.

லோகத்திலே சகலபதார்த்தங்களையுந் தோற்றுவிக்கின்ற வெயிலானது பதார்த்தத்தின்மேலே விழுந்து அவைகளையாவரிச்சு அந்தந்தப் பதார்த்தசுவருபத்தையடைந்து அவைகளைத்தோற்றுவிக்கின்றதுபோலச் சாக்கிரத்திற்பிரமாதா விடத்திலுமுண்டான பிரமாணப்பிரமேயத்தையடைந்து அவைகளினுகாரமாயவைகளினைகியானத்தைத்தள்ளியவைகளைத்தோற்றுவிக்கையினுலிப்படிச் சங்கற்பிக்கப்பட்டசித்த விருத்திப்பிரபஞ்சமெல்லாஞ் சீவசிருட்டியல்லாமலீசுவசிருட்டியென்று சொல்லக்கூடாதிப்படிச் சித்தாந்தமாயுள்ளவளவிற்பார்க்கின்றவிடயமெல்லா மீசுரசிருட்டியுஞ் சீவசிருட்டியுங் கூடியிரண்டிரண்டாயிருக்கும் அவற்றுள் ஈசுரசிருட்டியானவிடயஞ் சிதாபாசனு லறியப்படுஞ் சீவசிருட்டியான விடயஞ் சாட்சி ஞானத்தினுற்பிரகாசிக்கப்படுமிப்படியீசுரசிருட்டியுஞ் சீவசிருட்டியும் பிரிவுபட்டுத் தோற்றினவுடனே சீவசிருட்டியைத்துடைத்தடக்க வேண்டு மதுவேமேஞேதாசமென்றும் வாசனுக்ஷயமென்றுஞ் சீவன்முத்தி வருகிறதற்குச்சாதனமாகவுஞ் சொல்லப்படுமென்றுத்தரம். (சு)

ஈசுரசிருட்டி சீவன் முத்தியவத்தாலுந் துடைப்படாமலிருக்கின்றதுபோலச்சீவசிருட்டியுமிருந்ததனுற்சாட்சியாயிருக்கின்ற தமக்கானி யேதென்கின்றசங்கைக்கு..

சகலதுக்காதிசங்காரமெல்லாஞ் சீவசிருட்டி மூலமே யல்லாமலீசுரசிருட்டி யினுற்சங்காரமற்பமுமொருவ னில்லை யிந்தவாதத்திலேசந்தேகமுள்ள பேர்க்கு அன்னுவயவிதிரேகயுத்தியினுல் விளக்குகின்றேம் ஒருதேசியனென்னில் ஈசுரசிருட்டி யுண்டோ சங்கார மில்லை யென்கின்ற அன்னுவயயுத்தி சீவ சிருட்டி யில்லையோவா சங்காரமில்லை யென்கின்றது விதிரேகயுத்தி யிரண்டு மொத்துவரவேண்டு மொத்துவாராமலெங்கேதடைப்பட்டதென்றுற் சமாதி சுழுத்திமுதலான வேளையிலே யீசுர சிருட்டியுண்டாயிருக்கையிலு மொருத்தருக்குஞ் சகதுக்காதி சங்காரமில்லையாகையா லன்னுவயயுத்தி தடைப்பட்டது பிரளயத்திலீசுரசிருட்டியடங்கலும்விதிரேகித்துப்போயிருக்கையிலு மொருத்தருக்குஞ் சீவன்முத்திவாராதபடியினுல் விதிரேகயுத்திகூடாது ஆகையா லீசுரசிருட்டிசங்காரத்துக்குமூலமென்னக்கூடாது சீவசிருட்டியே சங்காரமூலமிதனையு மன்னுவயவிதிரேகத்தினுல்திடம்பண்ணிவிக்கிறேஞ் சீவசிருட்டியுள்ளவரெல்லாஞ் சங்கார முண்டெங்கின்ற அன்னுவயஞ் சீவசிருட்டியொழிந்த விடத்திலே

சங்காரமில்லையென்பது விற்கேம் இந்தஇரண்டுமொத்து வந்த
கேபிரமாணம் அதெங்ஙனெனின்லீசுரசிருட்டியானவெளிப்பிர
பஞ்ச சங்காரமொழிந்திருக்கையிலுஞ் சொற்பனத்திற் சீவசிரு
ட்டியன்னுவயிச்சறுகொண்டு சுகதுக்காதி சங்காரமுமவ்விடத்
திலே யன்னுவயிக்கக்கண்டோஞ்சமாதிசுழுத்திமுதலானவேளை
யிலே யீசுரசிருட்டியானவெளிப்பிரபஞ்ச மிருக்கையிலுஞ் சீவ
சிருட்டியான வந்தக்கரணகற்பனை விரோதித்துக்கொண்டு சுக
துக்காதி சங்காரமும் விரோதித்துக்காணப்படுகிறதாகையால்
சீவசிருட்டியே சகலசங்காரத்திற்கு மூலமென்று சித்தாந்தமி
ரண்டு சிருட்டியுங் கூடிவழங்குகின்ற சாக்கிரவவத்தையிற் சீவத்
துவிதமொழிந்தவனே சீவன்முத்தன் இன்னமொருபத்தி சஞ்
கண்ணிற்காணுமற் றூரதேசத்திலேநெடுங்காலத்தன்பிள்ளை போ
யிருக்கையிலு மவனவ்விடத்தி லிறந்து போயீசுரசிருட்டிமா
றியுந்துக்கத்தைக் கொடாமல் இருந்தது நம்முடைய பிள்ளை யி
யிருக்கின்றானென்கின்ற சீவசிருட்டியிருந்து சுகத்தைக்கொடுத்
தது அந்தக்காலத்திலொருவன்வந்து பிள்ளைசெத்தானென்கின்
றசொல்லைக்கேட்டு நம்முடையபிள்ளையை யிழந்தோமே யென்
று சீவசிருட்டிமாறினவுடனே துக்கத்தைக்கொடுத்தது அவன்
செத்துப்போயிருக்கையிலு மந்தவார்த்தை கேளாம லிருந்த
காலமெல்லாஞ் சீவசிருட்டியிருந்து சுகத்தைக்கொடுத்தது ஆ
கையினாற்சகலபிராணிகட்கும் பந்தப்படுத்துகின்றது அந்தக்க
ரணபிரபஞ்சமே யல்லாம லீசுரபிரபஞ்ச மல்லவாகையாலந்தக்
கரணபிரபஞ்சமாகிய சீவசிருட்டியைத்துடைக்கவேண்டு மென்
றுத்தரம். (௫)

ஆனாலந்தக்கரணப்பிரபஞ்சத்திற்கு முன்னிலையானமூலமீசுர
சிருட்டியானபடியினு லீசுரசிருட்டியொழிந்தபின் பேதத்துவி
தம்வரவேண்டு மென்றபாவாதிசங்கைக்கு.

சீவானுடைய புத்தியோகத்தினு லீசுரப்பிரபஞ்சமொழிப்
பதுமல்ல சிருட்டிப்பதுமல்ல வீசுரசங்கற்பத்தின்படியே யாகி
ன்றது அவருடையசங்கற்பத்தின்படியே பிரளயத்திலே யீசுரத்
துவிதமெல்லா மொழிந்தவிடத்திற்குஞ் சாக்கிரமுதலானமோ
ட்ச சாதன மில்லாதது கொண்டு விரோதியா யிருக்கின்றது வி
தம்போயிருக்கையினு மத்துவிதமறியக்கூடாதாகையினு லத
ற்குக்குருசாத்திரவந்தக்கரணாதிகளாயிருக்கின்றமோட்சசாதனங்
களைக்கொண்டு விரோதியாயிருக்கின்ற வீசுரத்துவித நடக்கின்ற
காலத்திலே தானே சீவத்துவிதத்தைமாற்றி யத்துவிதம்பெறலா
மானபடியினாலது நமக்குச்சாதனமுமா மதுநம்மால் துடைப்

படுகின்றதுமல்லவிப்படியீசரத்துவிதத்திற்குஞ் சிவாத்துவித சித்திரும்பேருஞ் சொல்லப்பட்டதாகையினுலீசரசிருட்டிநம்மால் தடைபடாதென்றுத்தரம்.

சிவாத்துவிதமேயத்தப் பரிக்கு மென்றபடியினுஞ் சிவாத்து விதமின்னபடியென்று மறைவழிப்படியின்னபடி யென்றும்பிர மாணமூலமாகச்சொல்ல வேண்டு மென்கின்ற சங்கைக்கு.

சாத்திரீகமென்றுஞ் அசாத்திரீகமென்றுஞ் சிவாத்துவித பிரவர்த்தி விதமாகவிருக்குமிதிற்சாத்திரீகமாவது வேதாந்தசாஸ் திரஞ்சொன்னபடி கேட்டுஇருதயத்திலேநிருணயித்துக்கத்துவசித் தாந்தயுத்திக்கிரமமுறைகளையந்தக்கரணப்பிரபஞ்ச மசாத்திரீ கத்துவிதமாவது சாத்திரத்தைக்கடந்துபிரபஞ்சத்தைப் பிரமா ணமாகவெல்லாவியந்தக்கட்டின்படியே நிர்ணயிக்கின்றவந்தக்க ரணபிரபஞ்சவிருத்திவிசேஷமென்று மற்ற மென்றுமிருவகையாகவி ருக்கு மிவைகளிற் காரிய பரியந்தம்நடக்கின்ற காமக்குரோதா திப்பிரபஞ்சத் திவிரமென்றுஞ் சொல்லப்படும்பிறவிர்த்தி யற்று ப்பிரபஞ்சத்தைக்குறித்துச்சங்கற்பிக்கின்ற டம்ப ராக்ஷிப்பிர பஞ்சமெல்லாமந்த மென்றுஞ்சொல்லப்படுமிந்தவிருவகையுங் காணவேண்டு மென்கின்றவன் சிரவணத்திற்கு வருமுன்னமே சாதனமப்பியசிக்கின்ற காலத்திலே தானேயசாத்திரீகமான விருவகைப் பிரபஞ்சத்தையுந்தவிர வேண்டுமில்லையென்றுஞ் கே ள்வியிலொரு பயமென்றுத்தரம். (எ)

ஆனாற்கேள்வி முயலுமட்டும் தவிர்ந்திருந்திடமான பிரயாடு தான் அசாத்திரீகப்பிரபஞ்சம்வரலாமேயென்னில் வரலாகாது ஏத்தாற் சீவன்முத்திகூடாது ஆதியிலே தட்டுத்தஞானம் வர வேண்டுமென்று மதிக்கபின் தவிர்கின்றது சீவன்முத்திக்காகவு மாகையினுல் ஞானம்வந்தபினந்தக் கரணப்பிர பஞ்சத்தைத் தவிராதிருந்தாலேகாமாதி விருத்தியிலே முடன்றுசுகதுக்காதியி லேபந்தப்படுகின்றவனுக்கு நிரந்தரநிஷ்டை முதலியவை நிரதிசய வானந்த மாயிருக்கின்ற வதுவொன்றுமில்லாமல் மறைபடுகை யினுலே முத்தனுகின்றது கூடாதென்றுத்தரம். (அ)

சீவன்முத்திவேண்டாம் பிரமசொரூபானவைதாத்திரய சாட் சிமேப நடமென்று பிரிந்துநித்தமேற முத்தியென்கின்ற சாத்திர ம்போலவிம்மேவிப்படியிருக்கலாமேனிற் சந்தோஷிப்பனுலு லிருக்கைத்தானத்திலே வேதாந்தசிரவணம் பண்ணினது கொ ண்டு சொல்லை முனையிடங்கின்ற சாத்திரமேடினக்குப் போதுமெ ன்றுத்தரம். (௯)

அசராதிமேயடக்கியும் புண்ணியபட்சபம்வந்து எரிந்து

விழுகின்ற போகங்களையுங்கண்டுசொர்க்கத்தி லிச்சை யில்லையெ
ன்னும் சங்கைக்கு.

எழுபத்தொரு சதுர்யுகமானந்தபோகம்பொசிக்கின்றசொ
ர்க்கத்திலொருகாலத்தில் வருகின்றதுக்கத்தைக்கண்டதிலேவெறு
ப்புவந்து சொர்க்கம்வேண்டாமென்கின்ற வுனக்கு அனந்தகோ
டிசெனனமரண சங்சாரத்திற்கு மூலமான அந்தக்கரணப்பிர ப
ஞ்சத்தைத் தவிர்ந்து சீவன்முத்தியப்பியாசிக்கவேண்டுமாகப்படு
யிருக்க இன்னமயவலோகத்தைக் கேட்டவேதாந்த சாத்திரங்களெல்
லாந்த ற்பரியமுஞ்சாட்சியேநாமென் றபற்றினபுத்தி வாங்காம
லிருக்கவேண்டு மென் றுஞ்சரீராதிகளின்மேல் நானென்கின்ற புத்தி
வாராமல் மரிக்கவேண்டு மென்றதைக் கேட்டபிமானத்தாற் கட
மானதுகில பிரபஞ்சமுமெய்யென் றபாரமமத் போம் யென்று
நிடம்பண்ணவேண்டு மென்று மனங்குவிந்தபடியினா லிப்படிக்
கேட்ட யாதத்தை விட்டுப்போட்டு அதற்குவிபரீதமானவசுத்த
புத்தியைப்பண்ணிக்கொண்டு அசாத்திரீகப்பிரபஞ்சந்தவிரமா
ட்டோமென்றால் அத்தியாசித்த சாஸ்திரம்வாசக்யொவத்தினால்
லெப்பிள்ளைக்குற்சரியாய்ச் சுத்தப்பிரவிர்த்தியினால் நித்தியவத்தி
யாலியுதாயஞ் சரியென் றவருமது மாத்திரமல்லாமலநாதிகால
ந்தொடுத்து இவ்வளவையுஞ்சங்சாரத்தில் பந்தப்படுத்தினது அ
ன்னந்தக் கரண நேராட்டமே யுள்ளது இப்போதுத் தவக்கியா
னமற்பியாசிக்க சீவன் முத்தி வேண்டாமந்தக்கரணப்பிரபஞ்சம்
விடப்போகா தென்றாலிவன்கற்றஞானமென்ன செய்யுங்கிருத
ியமென்னவென்று மெல்லாருமந்தக்கரணத்தினாலும் பந்தப்ப
டுவதுபோலப் பந்தப்படுவதையா லந்தக்கரணகற்பனையை
நன்றாய்த்தவிர்ந்து சாட்சியேநாமென் றுநின் று அந்தக்கரணத்
தைச்சாட்சி யிடத்திலேயாவிக்கொண்டு சரீராதிசகல சங்சார
த்தையு மறந்துசகலலோகத்திலும் தனிகனைப்போலப் பூசினை
யடைந்து ஆனந்தபானத்தைப்பண்ணிச் சீவன்முத்தி யடைய
லாமென் றுத்தரம். (௰)

இப்படிச்சீவத்து விநம்பந்தப்படுத்துமானால் தீவிரப் பிரப
ஞ்சத் தைக்கைவிட்டுரேம்காரியத்துக்குவாராதமந்தப்பிரபஞ்
சமிருந்தது கொண்டாலிம்ப தென்கின்றசங்கைக்கு.

மநோராச்சியஞ் சகலப்பிரபஞ்ச விருத்திக்குமிசமானபடி
யினாற் சகலவாதத்திற்கு மூலமென் றவிந்தமநோராச்சியத்தை
நிக்கித்தவிரவேண்டு மிப்படியிரும்பைக்கொண் டிரும்பை யி
ராவுகிறாற்போலச்சாத்திரீகப்பிரபஞ்சத்தைக்கொண்டு அசாத்தி
ரீகப்பிரபஞ்ச மந்தக்கரணப்பிரமையையுந் தள்ளிப்பின் பிரபஞ்ச

மேடிபோலச் சாத்திரீகப்பிரபஞ்சத்தையுந் தவிர்த்தானே தானாய்த்திடப்பட்டதே சீவன்முத்தியதலசித்தாந்த மரியாதையெல்லாமறிந்த சீவன்முத்தியிலட்சண மெல்லஞ் சாத்திரீகப்பிரபஞ்சத்தைத்தவிர்கின்ற வழியென்றுத்தரம். (௫௧)

இப்படிய சாத்திரீகஞ்சாத்திரீகவலையைந்தவிர்த்தானே தானுவவகைச்சலறதின்றவிடஞ் சீவன்முத்தியென்றறிக.

ஒன்பதாவது-துவிதவிவேகமுற்றிற்று.

பத்தாவது

மகாவாக்கியவிவேகதீபிகை.

வித்தியாரண்ணிய சுவாமிகள்மகாவாக்கியவிவேகஞ் சொல்லுகிறார் மகாவாக்கியமென்பதேதென்னையந்தவாக்கியங் களுக்கர்த்தமேதென்கின்றசங்கைக்கு.

நான்குவேதங்களினு முடிந்தபொருளைச்சொல்லு கின்றது மகாவாக்கிய மென்றுத்தரம். (௧)

அதற்கர்த்தமேதென்கின்றசங்கைக்கு.

ஞானவடிவாயிருக்கின்றதே பிரமமென்று இருக்கு வேதஞ் சொல்லுகின்றது நானேயந்தப்பிரமமென்றெசுர்வேதஞ் சொல்லுகின்றது நீயுமதுவேயென்று சாமவேதஞ்சொல்லுகின்றது இந்தப்பிரமமேதானென்று அதர்வணவேதஞ்சொல்லுகின்றதென்றுத்தரம். (௨)

இருக்குவேதத்திற்சொன்ன அர்த்தமெங்ஙேயிருக்கின்றதென்கின்றசங்கைக்கு

யாம்தோரறிவினுஞ் சத்தமுதலானவிடயங்களையு மறியப்படுகின்றவந்தப்போதமேபிரமமென்றுத்தரம். (௩)

இப்படிச்சொன்ன பிரமமெத்தனை விதமாயுண்டென்கின்றசங்கைக்கு

மும்மூர்த்திகள்முதலானதேவதைகளிடத்திலுமனுஷமிருகமுதலானவிடங்களிலுஞ்சைதன்னியமொன்றேயொழியவிரண்டில்லையென்றுத்தரம். (௪)

இப்படிமுந்திய வாக்கியத்தினால்ஞானநிர்ணயமானால் மற்றமூன்றுவாக்கியத்திற்கு மர்த்தமேதென்கின்றசங்கைக்கு.

பரிபூரணமாயிருக்கின்றபரமாத்மாவேயிந்தத்தேகத்திலே புத்திக்குச்சாட்சியா யிருக்கின்றதைசந்நிய மிப்படித் தானாகவிருக்கின்ற பிரமமே யகமென் றெசுர் வேதஞ் சொல்லுகிறதென்றுஞ் சீவனுடையதேகேந்திரியாதிகட்கப்பாற் பட்டிருக்கின்ற

வஸ்து இந்தப்பிரமாணப்படிபிறரால்நீயே செகத்காரணபிரமமெ ன்றுசாமவேதஞ் சொல்லுகின்றதென்றுமிப்படிச் சுயம்பிரகா சமாக விருக்கின்ற வாத்துமா நானேபிரமமல்லாமல் வேறொன் றுமல்லவென்று அதர்வணவேதஞ் சொல்லுகிறதென்றுத்தரம்.

பத்தாவது-மகாவாக்கியவிவேகதீபிகைமுற்றிற்று.

மூன்றாவதுபஞ்சகம்.

பதினொராவது.

யோகாநந்ததீபிகை.

வித்தியாரண்ணிய சுவாமிகள் தீபிகாபஞ்சகம்விவேக தீபி காபஞ்சகமாகப் பத்துஞ் சொல்லி யிந்தப் பதினுஞ்சொன்ன படிபிரமத்தைப்பகுத்தறிந்தவனுக்குச்சகலதுக்கமும்போய்த்த டைடற்ற வானந்தத்தையடைவனென்பதனையாநந்தபஞ்சகத்தி னாலே வெளிப்பண்ணும்படி யருள்செய்கிறார் பிரமக்கியானத்தி னால் இந்தவிருவகைப் பிரயோசனமுண்டென்கின்ற தற்குப்பிர மாணமேதென்கின்றசங்கைக்கு.

பிர்ம்மவித்தானவன் பரத்தையடைவன்ஆத்துமக் கியானி சகல சோகமுங் கடப்பன் பிரமரசம் போசித்தவனுக்கேயா நந்த மற்றவனுக்கில்லை சகலத்தையுந்தானாய்க் கண்டவனுக்கே பயம்போந்துவிதமாய்க்கண்டவனுக்கேபயமுண்டு பிர்ம்மானந் தத்தை யறிந்தாலொருகாலுமொன்று நிமித்தியமாயும் பயமில் லைஞானியைச் சன்மாக்கினிசெட்டாது பிரமத்தை யறிந்த வுட னே சகலபாசமு நசிக்கும் பரத்தையறிந்தா லிருதயக் கிரந்தியு ஞ்சகலசந்தேகமும் வெந்துபோம் ஞானிக்கொருகாலுஞ் சென னமரணமில்லை பிரமத்தையறிந்தவன் பிரமமேயாவனென்று முழங்குகின்றவேதமும்புராணமும்பிரமாணமென்றுத்தரம். (௧)

அந்தக்கியானானந்தமெந்தனைவிதமென்றசங்கைக்கு.

பிரமானந்தம் வித்தையானந்தம் விடயானந்தமென்று ஞானா நந்தந்திரிவிதமாகவிருக்குமென்றுத்தரம். (௨)

கேதமிதனை யடைந்தவர்களாரென்கின்ற சங்கைக்கு.

வருணன் சொல்லக்கேட்டுப் பிருகு இந்தநிலைபெற்றார்சநற் குமாரரிடத்திலும் நாரதர்பெற்றாரென்றுத்தரம். (௩)

எந்தவழியாகவடைந்தார்க ளென்கின்ற சங்கைக்கு.

சகலமுமானந்தத் திலும்பிறந்தானந்தத்திலு மிருந்தானந்த மாத்திரமாக மிஞ்சுகையால்நாமேபத்துவிதானந்த மென்கின் றவழியாகவடைந்தா ரென்றுத்தரம். (௪)

அடைகின்றபிரமமெதிருஷ்டானந்தமாக விருக்குமெங்கின்றசங்கைக்கு.

திரிபுடியில்லாத படியிருந்த பிரமமேயானந்தமென்றுத்தரம்.

திரிபுடியாவதெது திரிபுடியிருந்தாலதிலானந்தமெப்படியில்லையென்கின்றசங்கைக்கு.

விக்கியானமயனென்கின்ற ஞாதுருமமேருமய னென்கின்ற ஞானமும் விடயங்களென்கின்ற ஞேயமுந்திரிபுடி விடங்கலந்தமென்போலவித்திரிபுடியிலேவருகின்றவிடயசுகமாயிரந்துக்கத்துடனே கூடினதுகொண்டு சுகமல்லவென்றுத்தரம். (௬)

அத்துவிதத்திலே திரிபுடியில்லையென்பதெப்படி யென்கின்றசங்கைக்கு.

பூர்வசற்புத்திக்கு முன்னேகண்டானந்தமானது சமாதி சுழுத்தி மூர்ச்சைபோலத்திரிபுடியற்றிருக்குமென்றுத்தரம். (௭)

இப்படியானால்த்துவிதத்திலே யானந்தமில்லாததுபோல வத்துவிதத்திலு மானந்த மில்லையுண்டானாலனுபவிக்கவேண்டுமத்திரிபுடியுமில்லை யென்கின்றசங்கைக்கு.

திரிபுடியற்ற விடத்திலே யத்துவிதமென்று மதிலானந்தமென்றுமிரண்டில்லாத படியிருந்தத்துவிதமே யானந்த மென்றுத்தரம். (௮)

ஆனந்தமுண்டென்பதற்குப்பிரமாண மேதென்கின்றசங்கைக்கு.

நானுகந்தோற்றின வஸ்துவிற்குப்பிரமாணந்தேவையில்லையென்றுத்தரம். (௯)

அத்துவிதானந்தந் தானுகந்தோற்றுமென்கின்ற சொல்மாத்திரமல்லாமல் காணப்படாதோ வென்கின்றசங்கைக்கு.

சுழுத்தியைப்போல வறியென்றுத்தரம். (௰)

சுழுத்தியிலேயத்துவிதானந்தந் தானுகவிளங்குகின்றதற்குப்பிரமாணமேதென்கின்றசங்கைக்கு.

சுழுத்தியிலிந்திரிய மில்லாதிருக்கையிலும்நான்சுகமாய்த்தூங்கினோபோனே னென்றவனுடைய வனுபவமே பிரமாணமென்றுத்தரம். (௰௧)

சுழுத்தியானந்த மல்லவிட்சேபதுக்கமில்லாததுகொண்டு சுகமென்றுரோபிக்கிறீரென்கின்றசங்கைக்கு.

சுழுத்தியிலே சுகமில்லாவிட்டால் பாய்தலையணைமுதலான சாதனமேன் தேடுகின்றார்களென்றுத்தரம். (௰௨)

துக்கம்போகும் படிக்குப் பாய்தலையணை தேடுகின்றதேயல்லாமற் சுழுத்தியிலே சுகமில்லை யென்கின்றசங்கைக்கு.

அப்படியானால் வியாதிக்காரருடைய பாய்தலையணைகண்டவுடனே

துக்கம்போக்க வேண்டுமேப்படியுங்காரணமேயாகையால் நித்தி
ரைக்குச் சாதனமேயல்லாம லாநந்தத்துக்குச் சாதனமல்லவெ
ன்றுத்தரம். (௰௩)

ஆனாற்சுழுத்தியானந்தத்திற்குச் சாதனமெப்படி யென்கின்
றசங்கைக்கு.

சாக்கிரமுதலானவிட்சேபத்திலே யடிபட்டு நொந்தமனது
சுழுத்தியிலே யாற்றுமாவை நாடினவுடனே யதிலானந்தம் பிர
திவிம்பிக்கு மந்தவானந்தத்தை யனுபவிக்கையினாலொரு துக்
கமுந்தோற்றாது ஆகையாற் சுழுத்தியா நந்தமாகவேண்டும் இல்
லாதிருந்தாற் சகலர்க்கு நாட்டமாகாது இந்தப்படிக்கு வேதத்
திலே வைத்துவிட்டாந்தஞ்சொல்லுகிறதென் றுத்தரம். (௰௪)

ஐந்துவிட்டாந்தமேதென்கின்ற சங்கைக்கு.

வல்லூறு பருந்து குழந்தை மகாராசா மகாபிராமணனென்
றுத்தரம். (௰௫)

இந்தவைந்துக்கு மனுபவமாகக் காட்டவேண்டுமென்கின்ற
சங்கைக்கு.

கயிற்றிலே கட்டப்பட்ட வல்லூறெந்தத்திக்கிலோடினாலுந்
தன்னிலையிலேவந் திளைப்பாறுகின்றாற்போலச் சீவோபாதியா
ன் மனதும் புண்ணியபாவங்களைப்போகிக்கச் சாக்கிரசொற்ப
னத்திலே சுழன்று சுழுத்தியிலேவந்து சுகமடையவேண்டும் பருந்
தானது கூட்டிலே விழுகின்றபோது அதிகவேகமாய் விழுகின்
றாற்போலச் சீவனுமொன்றினாலுமறிபடாமற் சுழுத்திசுகத்தை
நாடுகையாற் சுழுத்தியா நந்தமாகவேண்டு முலையுண்டு மஞ்சத்
திற்கிடக்கின்றபிள்ளை யிராகத்துவேஷமில்லாதபடியினாலா நந்த
மாயிருப்பதுபோ லிராகத்துவேஷமில்லாத சுழுத்தியு மாநந்த
மாகவேண்டும் சகலபூமியுந் தன்வசம்பண்ணிக்கொண்ட இரா
சாக் கிருதார்த்தனாகவிருக்கின் றாற்போல கிருத்தியாக விருக்கின்ற
சுழுத்தியு மாநந்தமாகவேண்டுஞ் சீவனுமுத்தனாகவிருக்கின்ற
மகா பிராமணன் தனக்குக்கர்த்தவியமில்லையென்று கவலைகெட்
டிருக்கின்றாற்போலக் கவலையில்லாத சுழுத்தியு மாநந்தமாக
வேண்டுமென் றுத்தரம். (௰௬)

இப்படிச் சீவன் முத்தியடைந்து பந்தம்போனவனுக்குச்
சுகமேயல்லாமன் மற்றப்பேருக்குச் சுகமில்லையோ வென்கின்ற
சங்கைக்கு.

நன்றாய் விடுபட்டவனுக்கும் நன்றாகப் பந்தப்பட்டவனுக்
கும் சுகமுண்டு நடுநாடனுக்குச் சுகமில்லையென் றுத்தரம். (௰௭)

சுழுத்தியிலே யிதரயாபாரமேன்றேனையில்லை யென்கின்ற
சங்கைக்கு.

ஸ்ரீயிலல் ஏறுவாப்பட்டவனுக்கு விட்டுக்காரியமும் வெளித் தோற்றமுந் தெரியாததுபோலச் சமூகத்திலாதாரத்தி லிருந்தவனுக்கு விநாசியிற்பட்டகொத்தளமுஞ் சாக்ஷிபிரபஞ்சமுந் தெரியாது லயித்திருந்தபின் சுகமாய் நித்திரைபோலே மௌனமாகிச் செவ்வெனிருந்திருந்து லக்ஷணஞ் ஞானத்திலும் ஆநந்தரூபங் காணப்படுகிறது மகேமௌனம் வீண்ஞானமேயு மஞ்ஞானத்திலழுந்தினர்போல தாழுத்தமாமென்று சொல்லப்படும் மிப்படி ஞானவிருத்தி குடிகொடுமென்று மனுவிருத்தி தாலமென்றும் வேதமுஞ்சொல்லுகின்றதென் றுத்தரம். (௰௮)

இப்படிப் பிரமாணத்துக்கு விலக்காக அழுந்தியிருந்த சீவன் முத்தி சேவைத்திலென் அழுந்தினமென்கின்ற சங்கைக்கு.

செவ்வயாத்திரையிலே மாறுதல் விருத்தியின் முன்வியுத்தியின் சனைப்போது மெய்விட்டுத்திற்பட்டையாதவிடாமல் திருவிடையமாக விருக்கின்றன பின்கருமங்கள் தன்னை மறைக்கப்பண்ணியிருத்தலைப் போலவே மனவாசனையால் நித்திரைக்குமுன் னுமபின்னும் பட்சபாதமிருக்கின்றபடியிருந்தானந்தமே பிரமமென்றுத்தரம். (௰௯)

சும்மாவிருக்கின்றதும் பிரமானந்தமாகுந் தோம்பதும் பிரமாநந்தமாகவேண்டு மென்கின்ற சங்கைக்கு.

வேதமறிந்தவனுக்குத் தானென்கொடுக்கின்றார் கொண்டு சொல்லக்கேட்டு வேதம் நானறியேனென்னக்குத் தானுந்தரவேண்டுமென்றவனைப்போல நீயும் பரிகாசஞ்சொல்லுகின்றாய் குருவையுஞ் சாத்திரத்தையுமன்றியிலே யாராலே பிரமத்தையறியலாமென் றுத்தரம். (௨௰)

வேதாந்தமெல்லாம் பாடம்பண்ணினாற் போதாதோவென்கின்ற சங்கைக்கு.

அநுபவமறிந்தாலல்லாமற் கூடாதென் றுத்தரம். (௨௧)

விற்பத்தியிலுலர்ந்தப்பார்த்துக்கொண்டாற் போதாதோவென்கின்ற சங்கைக்கு.

சாட்சாத்காரம் வந்தாலல்லாமற்போதாதென்றுத்தரம் (௨௨)

சாட்சாத்காரமெப்போது வருமென்கின்ற சங்கைக்கு.

இருகாரத்துடனாகும் குருவையுபாசித்தால் வருமென்றுத்தரம். (௨௩)

குருவையுபாசித்தாலெப்படிவருமென்கின்றசங்கைக்கு

விசுவாசியுத்தியமெப்பிலே வருமென்றயாநத்தையும் விஷயமையுதிச்சையிறத்தமுகமிருத்தமிலேயிருவிப்பதலேவருமென்றயானந்தக்கையும் முன்னுடைய சுபவாசனைவாசனையில்லாமல் சேறல்லவென்று காணசஞ்சலவி யுபதேசிப்பாவானென்றுத்தரம்.

சுபாயாவத்தமானது பிரதிவிம்பவானத்தையும் வாசனாஞ்

நீகத்தை யெப்படிச்செனிப்பிக்குமென்கின்றசங்கைக்கு.
சுழுத்தியவஸ்தையிலே தான் பிரமாநந்தமென்கின்றசுபா
க்கிஞ்சமாக விருந்தாலு மவ்விடத்திலே பிரதிவிம்பாநந்தமா
யிருக்கவுத்தலதவிட்டுக் கன்மஞானத்தில்வந்த மெசற்பலத்தில் வி
ருந்தாலும்பாவி நேத்திரத்தில் சாக்கிரத்திற்காட்சியின இரும்பு
லவடைபோலத் தேகமெல்லாங்கலந்து உதயிசுகதுக்கமெய்
ற மூலமேயாக விருப்பாரிகளிற் சுகதுக்கமிரண்டுங் கன்மசா
ரிய பிரபஞ்சத்தில் வெறுப்பாகிய வுதாசீனமதன சுபாவமாயிரு
க்கின்றதென் றுத்தரம். (௨௫)
அசகக்கமடந்தன விதமிரண்டுமென்பியிலே சும்மா யிருக்
கின்றவேளையிலே தோற்றுமென்கின்றசங்கைக்கு.
வாசியப்பாகயவைராக்கியமென்று சுகதுக்கமிரண்டு விதமா
கவிருக்குமவஸ்தைகளிலே யெனக்கொரு சிந்தனையு மில்லை
சுகமாயிருக்கின்றேனென்று எல்லாருஞ்சொல்லுகையாலு மா
ற்றமா சுபாவாநந்தமென்கின்றதற்குச்சந்தேகமில்லையென்று
த்தரம். (௨௬)
தன்னுடையசுபாவாநந்தமிருந்தாலே யோவென்கின்றசங்கை
க்கு.
நீரிருக்கின்ற குடத்தைத்தொட்டவுடனே காண்பிக்கின்றகுளி
ர்மை தண்ணீராகாவிட்டாலு மதுகொண்டு குடத்திலேதண்ணீ
ருண்டென்றறிவது போல வுதாசீனவெளிப்பிக்காண்பிக் கின்றசு
கமுன்னிலாங்காரத்தினால் மறைபட்டிருக்கின்ற சுபாவா நந்த
த்திலாசையென்றுத்தரம். (௨௭)
இப்படியானாற் சுபாவாநந்தமெப்படித் தோன்றுமென்கின்ற
சங்கைக்கு.
பிரமாப்பியாசத்தினாலகங்காரத்தை மறைக்கப் பிரமாநந்தசு
பாவம் வெட்டவெளியாமகங்காரம்நன்றாய்மறைந்தாற்சித்தமிரு
க்கின்றபடியினால் நித்திரையுமல்லபிராந்தருவமிருக்கின்றபடியி
னாற்றேகம்விழாது இப்படித்துவிதமுந் தோன்றாமல்நித்திரையு
மில்லாமலிருக்கின்றபிரமாநந்தநிலைவெளியாமென்றுத்தரம்.
இப்படிக்கொக்கத்திலே வரத்தக்கதாக பிரமாப்பியாசம்பண்
ணுகின்றவகை யெப்படியென்றதற்குப் பிரமாணமேதென்கின்றசங்
கைக்கு.
பிரபஞ்சவிஷயத்தில் வீழாமல்புத்தியைத் திடம் பண்ணிக்
கொண்டு பிரபஞ்சத்தைக்கிரமத்திலே யொழிக்கவேண்டும் யா
தொருவழியினாற்புத்திபேதிக்கிறதோ அந்தவழியெல்லாமாகவே
ண்டுஞ் சஞ்சலமான மனதையாற்றியாவிளிடத்திலே யசையா
மனதுமுத்தம்வேண்டும்இப்படியிருக்கினால் அந்தயோகத்தினால் யா

தொன்றினல் மனது ஆத்துமாவிடத்திலேயேலயித்துயாதொ ருசங்கற்பமு மாதியுமந்தமுமில்லையென்றதொருநிலை பெற்று னினிலையென்னப்பட்ட கன்மபேதங்களினுலுமசைக்கப்படாதுஅ ந்தப்பிரமாநந்த மிவனையடையுமென்கின்ற வேதாவசனமே பிர மாணமென்றுத்தரம். (௨௯)

இந்தவப்பியாசமி குதியுங்கடின மென்கின்றசங்கைக்கு.

நுரும்பைநாவினுற் சிட்டுக்குருவிசமுத்திரத்தை யிறைத்தா ற்போல மனோநிக்கிரகம் பண்ணுவதுங்கிலேசப்படாமற் கிரமத் திலே நிறுத்தவேண்டும் பிரபஞ்சவிருத்தி மறக்கின்றபோது எ ண்ணெயற்ற விளக்குப்போலவந்தக்கரணமுஞ் சின்மாத்திரமா கச்செழிக்குமென்றுத்தரம். (௫௰)

சித்தமாத்துமாவி லயிச்சபோது கருமபந்த மெப்படிவிடு மென்கின்றசங்கைக்கு.

கருமசங்காரத்திற்குச் சித்தமே காரணமான படியினுலந்தச் சித்தத்தைச்சோதிக்கும்போது சகலகன்மமும்விட்டுப்போமெ ன்றுத்தரம். (௫௧)

சித்தத்தைச்சோதிக்கின்றவகை யெப்படிச்சோதித்தால் மோ ட்சமென்றுஞ்சோதியாதிருந்தால் பந்தமென்றுஞ் சொல்வதற் குப்பிரமாணமேதென்கின்றசங்கைக்கு.

அந்தக்கரண விஷயத்திற்பற்றுப்போலப்பிரமத்திற்பற்றுவை ட்டுச்சோதிப்பது அந்தக்கரணம்விஷயத்திற் பற்றினுல் அசுத் தப்பிரமத்திற் பற்றினுற் சுத்தமாகையால் மனமேபந்தத் திற்கு முத்திக்குங்காரண மென்றறி வேதமேபிரமாணமென் றுத் தரம். (௫௨)

சமாதியிலாநந்தமெப்படியென்கின்றசங்கைக்கு.

சமாதியில்நிர்மலவந்தக் கரணத்திற்குஞ் சூசனையாயறிகின்ற தேயல்லாமல் வாக்கினுற்சொல்லப்போகாதென் றுத்தரம்.(௫௩)

சமாதியில்லாதவேளையி லாநந்தமெப்படித்தோற்றுமென்கி ன்றசங்கைக்கு.

சமாதியிலே நிச்சயித்தபடிக்கு மற்றவேளையிலுமந்த நிண்ண யபடிக்கு நம்பியிருப்பானென்றுத்தரம். (௫௪)

இந்தயோகத்தில் முதிர்ந்தவனுக்கு அடையாளமேதென்கின் றசங்கைக்கு.

பலபுருடரையடைந்துநின்றஸ்திரீபோலவனுஞ் சந்தானத்திலேதா ற்பரியமில்லாமற் பிரபஞ்சத்திலேதாற்பரியமில்லாதிருப்பானெ ன்றுத்தரம். (௫௫)

இந்திரியங்கள் பெலம்பண்ணிப் பிரபஞ்சத்திலே யிழுத் தாற் செய்காரியமேதென்கின்றசங்கைக்கு.

சமையெடுக்கின்றவன் வைத்து வைத்திருப்பாறு மிஃதுபோலவிந்திரியங்களைக் கிரமத்தலேமமித்துச் சமாதியி லிருப்பாற்றவானென்றுத்தரம். (ருசு)

இவனுக்குவிஷயானந்த மெப்படித்தோற்றுமென்கின்ற சங்கைக்கு.

அநுசந்தானத்திற்கு விரோதியான விடயாநந்தமும் நெருப்பிலே தள்ளுவதுபோலத் தோற்றுமென்றுத்தரம். (ருஎ)

பிரமாநுசந்தானமும் பிரபஞ்சவிவகாரமு மொருமனதிற்குச்செய்யக் கூடாதென்கின்றசங்கைக்கு.

ஞானியில்மனதுங்காக்கைக்கண்போலவிருவகையிலும்போக்குவரத்தாக விருக்குமென்றுத்தரம். (ருஅ)

சமாதியிலிடத்திலே மருகன்றபிரமாநந்தத்தையுந் தன்பிரதிபந்தமான விஷயாநந்தத்தையு மநுபவிக்கின்றஞானியெப்படியிருப்பானென்கின்ற சங்கைக்கு.

இரண்டுபாஷையுமறிந்தவன்போல இருவகையாநந்தத்தையுங்கண்டு களித்துப்பொசித்திருப்பானென்றுத்தரம். (ருகூ)

இப்படிப்பிரமாநந்தத்திலேயோகப்பிரத்தியட்சமாகவிருக்கப்பட்டயோகாநந்தஞ் சொல்லப்பட்டது.

யோகாநந்தம்முற்றிற்று.

பனிரண்டாவது

ஆத்மாநந்ததீபிகை.

யாதொருவனுடைய மூச்சுக்காற்றுத் தானேவேதங்களாகவிளங்குகிறதுயாதொருவேதத்தினால்சகலசெகத்தையுங்கடவுளாக்கினார் அவற்றைவெளிப்பஸ்துமுகமவித்தியாரண்ணியசுவாமிகளுக்கு நமஸ்காரம் யோகியானவன் யோகத்தினால் தன்னுடைய சுபாவாநந்தத்தை யறியட்டு மூடனாகவிருக்கின்றவனுக்குகதியேதெல்கின்றசங்கைக்கு.

தருமாதரும வசத்தினால் இலட்சஞ்செனம மெடுக்கட்டுமென்றுத்தரம். (க)

இப்படித்தள்ளி விடலாமோ வெல்லாரிடத்திலுந் தயவு பண்ணத்தேவையில்லையோ வென்கின்றசங்கைக்கு.

நாமையோவென்றதனால் பிரயோசனமேது அந்த மூடன்வெளிமுகமூடனோ மந்தமுகமூடனோ வென்றுகண்டு அவனுக்கேற்றவுபதேசம்பண்ணுகிறுமென்றுத்தரம். (உ)

அந்தமிந்நிலை பெறுவருக்கெந்தவுபதேசம்பண்ணுவதென்கின்றசங்கைக்கு.

வெளிமுகமாகவிருக்கின்ற மூடனுக்குக் கர்மவுபதேசங்களைப்பண்ணுவது அந்தரமுகனாகவிருக்கின்றவனுக்கு ஆத்துமானந்தமார்க்கத்திலே ஞானத்தையுபதேசிக்கவென்றுத்தரம். (௫)

தெகமிப்படிமூடராயிருக்கின்ற பேருக்குஉபதேசித்தபேருண்டோ வாத்துமாநந்தமாவதேதென்கின்றசங்கைக்கு.

வியாக்கிரவர்க்கர்தம்முடைய ஸ்ரீமயித்திரிக்குஉபதேசித்தார் ஆநந்தமாயிருக்கின்றவஸ்து ஆத்துமாவென்றுகாட்டுகின்றதுபதேசமென்றுத்தரம். (௬)

இப்படியானுல் விஷயங்களெல்லா மாத்துமாவல்லவோவென்கின்றசங்கைக்கு.

பெண்சாதிபுருடன் பிள்ளைதனம்பசுஅந்தணர்லோகங்கள் வானோர்கள் வேதங்கள்பூதங்கள் சகலமுமாத்துமாவைக்குறித்துப் பிரியமல்லாமலவைகளாலாநந்தமல்லவென்று வேதஞ்சொல்லுகிறதென்றுத்தரம். (௭)

ஆநந்தமாக விருக்கின்றவவைகளை ஆநந்தமல்லவென்பதெப்படியென்கின்றசங்கைக்கு.

பெண்சாதிக்குப்புருடனிடத்திலே விருப்பம்பிறந்தபோதுவியாதிபசிபிணி லவனிவனையிச்சியாததுகொண்டு பத்தாவைக்குறித்துவந்த ஆநந்தமிவளுடைய சுபாவமேயல்லாமல் அவனாநந்தமென்னக்கூடாது புருடனுக்கும்பெண்சாதியிடத்திலே விருப்பம்பிறந்தபோது வியாதிபசிபிணி லவளிவளை யிச்சியாதது கொண்டு பெண்சாதியைக்குறித்து வந்தவாநந்த மிவனுடைய சுபாவமேயல்லாம லவளாநந்தமென்னக்கூடாது முள்ளுப்போலிலைசதைத்தமுகினு முத்தமிட்டுக்கொள்ளுமாநந்தம்பிதாவிற்கேயல்லாமற் குழைந்தைக்கில்லை சந்தோஷிப்பட வறியாத ரத்தினகனகாதிகளைச் சாவதானமாக தரித்துக்கண்டு மகிழ்ந்தவருவதுசன்னுடைய வாநந்தமல்லாமலைசுவரியத்திற்கில்லை பெருதின்பேரிலே பொதியேற்றுமாநந்தஞ் செட்டிக்கேயல்லாம லெருதுக்கில்லை நான்பிராமணனென்று சபையிலேபூசையடையுமாநந்தந்தனக்கேயல்லாமல் சேதனமானசாதிக்கில்லை சொர்க்கலோகம்பிரமலோகந் தனக்குவேண்டுமென்று மாநந்தந் தனக்கேயல்லாம லந்தலோகத்திற்கில்லை தேவன்முதலான வானோர்களைப்பாவப்போகப் பூசைபண்ணுவது தான்பிழைக்கும் பொருட்டாலல்லாமற் றேவதைகளுக்காகவல்ல வேதத்தியானம்பண்ணுவதுந்தனக்கேயல்லாமல்வேதங்கட்காகவல்ல இடந்தாகப்பாக மூசித்தலவகாசங்கட்காகபூதங்களை யிச்சிப்பது தனக்காகவல்லாமற்பூ

தங்கட்காகவல்ல இப்படியாண்டவனடியா னொருவ்ப்து முதலாக வானாருந் தனக்காக வல்லாமற்பலருக்கல்லவாகையாற் சகலவிடயத்தையுந் தறித்துத்தானே பிரியவஸ்து வல்லாமல்விடயங்கள் பிரியவஸ்துவல்ல வாகையா லாத்துமாவே பிரியவஸ்தென்பதற்குச்சந்தேகந் தேவையில்லையென் றுத்தரம். (௬)

இப்படிவரப்பட்டவாநந்தமெத்தனை விதமாய்ச்சொல்லப்படு மென்கின் றசங்கைக்கு.

பொன்முதலானவஸ்துவிலே யாசையென்றுங் கன்மவுபாசனையிலே சிரத்தையென்றுங் கிடையாதவஸ்துவிலே யிச்சையென்றுங்குருதேவதைகளிலே பத்தியென்று நான்கு விதமாகச் சொல்லப்படுமென் றுத்தரம். (௭)

இந்தவிடயங்களிடத்தி லிருக்கும்பிரீதிபோல வாத்துமாவிடத்திலுமொருபிரீதியிருக்கிறது அதுகொண்டுவிடயம்பிரியவஸ்துவல்லவென்பானே னென்கின்றசங்கைக்கு.

ஒருவிஷபத்தைவிட்டொரு விடயத்தை நாடுவதுபோலவாத்துமாவைக்கைவிடப்படாதபடியினாலாத்துமாவே யாநந்தமற்றதெல்லாமாநந்தமல்லவென் றுத்தரம். (௮)

வாஞ்சைதுவேஷமிரண்டிற்குமிடமற்றவாத்துமாவானாலுமட்டோங்கிளிஞ்சில்போல வுபேட்சைக்கிடமாகுமொன்கின்ற சங்கைக்கு.

உபேட்சிப்பவனுடையரூபமானபடியினா லுபேட்சைக்குவிடயமல்லவென் றுத்தரம். (௯)

வியாதி கோபங்களினால் முட்டுப்பட்டவ னாத்தும தியாகப்பண்ணநினைக்கின்றபடியினாலாத்துமா துவேஷிக்கிறதற்கு விஷயமாமென்கின்றசங்கைக்கு.

தகிக்கயோக்கியமானசரீரத்தைத் தகிக்கிறானே யல்லாமல்தகிப்பனாகவிருக்கின்றதன்னைத்தகிக்கக்கூடாதென் றுத்தரம். (௰)

இந்தவிருவகைக்கும் விடயமாகாதவாத்துமா பிரியத்திற்குத்தான்விடய மாகட்டுமென்கின்றசங்கைக்கு.

பிதாவிற்குப்புத்திரன்றானே சகலபந்துக்களிலும் பிரியமாயிருப்பது போல வாத்துமாவைக்குறித்தே சகலவிடயமும் பிரியமானபடியினாலிதிற்பிரீதிவஸ்து ஆத்துமாவல்லாமற் பிரியம்விடயமல்லவென் றுத்தரம். (௰௧)

இப்படியதிற்பிரீதி வஸ்துவாத்துமாவானாலாத்துமா தானே பிள்ளையாகுமென் றதியின் பிள்ளை யுன்னையந்தினாலாத்துமாதானே பிள்ளையாய்வந்து பிறந்தானென்றும் பிள்ளையில்லாதவனுக்குக்கதியில்லையென்றும்வேதஞ்சொல்லுகையாற் புத்திரன்றானே வாத்துமாவாகட்டுமென்கின்றசங்கைக்கு.

கௌணாத்துமாவென்று மித்தையாத்துமாவென்று முக்கியாத்துமாவென்றுந் திரிவிதமுண்டு ஒவ்வொருவகையில் ஒராத்துமா பிரதானமாகவிருக்கும்புத்திரனை யாத்துமாவென்றது இதர்தமூவகையிலொருவகையல்லாமல் முக்கியமல்லவென்றத்தாம். (௧௨)

மூவகையாகச்சொல்லப்பட்டதேது இவைகளிலெந்தவாத்துமா முக்கியமென்கிறசங்கைக்கு.

ஒருபுருடனைச் சிங்கமென்பதுபோலப் பிள்ளையை யாத்துமாவென்பதுங்கவனைக்கட்டையைக்கள்ளனென்பதுபோலப் பஞ்சகோசத்தைத்தானென்பதுமித்தை கட்டையைக் கட்டையென்பதுபோலச் சாட்சியைத்தானென்பது முக்கியந்தான் செத்தாலும் பிள்ளை பிழைத்தாற்போதுமென்பதிலும் குடும்பத்தை யிரட்சிக்கையிலுங்கௌணாத்துமாவான புத்திரனே முக்கியம் நான் பருத்தேன் இளைத்தேனென்னுமிடத்திற் றேகமே முக்கியமாகக்கண்டாற்போலச் சொர்க்கலோகம் வேண்டுமென்று காயத்திலே தபசுபண்ணுமிடத்தில் மித்தையாத்துமாவான லிங்கசாரீரமே முக்கியம் நான் சுயம்பிரகாச நிருவிகாரியென்னு மிடத்தில் முக்கியாத்துமாவான சாட்சியே முக்கியமாகையாற் பஞ்சகோசத்தைத் தள்ளிலுந் தள்ளப்படாதவாத்துமாவே யாநந்தரூபனென்றுத்தரம். (௧௩)

இவனைப்பிரித்தறியதெப்படித் தள்ளப்பட்ட பஞ்சகோசங்களொவ்வொருகாலந்தமாய்த் தோற்றுவானேனென்கிற சங்கைக்கு

அன்றாடக மூன்றவத்தைகளினுடைபோக்கு வரத்தைச்சாணிகின்ற சுயப்பிரகாச சைதன்னியமேதானென்பதே பிரித்தறிவது புத்திராதிபிராண பரியந்தமுள்ள வெல்லாமாத்துமாவைக்கிட்டினதற்குத வாநந்த தாரதம்மியமாகத் தோற்றுகிறதென்றுத்தரம். (௧௪)

ஆத்துமாவைக்கிட்டினதற்காக வாநந்தத்தாரதம்மியங்காண்கின்றவகை எப்படியென்னுஞ்சங்கைக்கு.

லோகத்திலே ஐசுவரிய மகாசுக சாதனமானபடியினாற் கைவிடப்படாதவாநந்தமென்று சொல்லப்படும் புத்திராதிகட்குப் பீடைவந்தவிடத்தில் ஐசுவரியத்தைக்கைவிட்டும் புத்திராதிகளை யிரட்சிக்கையினாற் புத்திராதிகளே யாநந்தம்வீட்டிலே தீப்பற்றினால் புத்திராதிகளைவிட்டுந் தானோடிப்போகையினாற் சரீரமே யாநந்தங்கொடுக்கிறதுந் தானிக்காற்றிலுஞ் சரீரத்தையுபேட்சித்து மிந்திரியங்களைப்பதனம்பண்ணுகையால் இந்திரியமே யாநந்தமாக்கினைபண்ணக் கொண்டுபோம்போது இந்திரியங்களையுபேட்சித்துப் பிராணதிகளை யிரட்சிக்கையினாற் பிரா

ஞானிகளை யாதொன்றும் பிராணன்போகின்றபோதும் பிராணுகிக ளல்லா நமக்கென்னதுக்காவென்று நிச்சயித்துக்கொண்டுவிட்டுப் பிர ஞானிகளுண்டாகின்றபோதும் நசிக்கும்போதும் நசியாமல் சங் கலைசாக்ஷிமாக விருக்கின்றதாந்தக்கோ பொருள்களுங் கைவி டப்படாத பரமார்த்த சொரூபமொன்றுத்தரம். (௯௫)

தகப்பனுக்குப்பின் நல்லாதினத்திலிருந்து பொசிக்கமாட்டா த சாக்ஷியை யாற்றுமாவென்னக்கூடாது பாவமும் பழியும் இலா ணமுந் தனமுந் தன்னுடையதாக வொப்புக்கொண்டு தகப்பனு க்குப்பின் அந்த வாதினத்திலிருந்து பொசிக்கின்றபுத்திரனை யாற்றுமாவாகவேண்டு மவனுக்கு மேற்பிரியவத்து மில்லை யென்கின்றசங்கைக்கு.

முன்சொன்ன விவேகவிசாரத்தை யெல்லாம் விட்டுத்திரும்ப வுமிப்படிச் சந்தித்தவன் சிஷ்டுனே பிரிந்வாசிபோசி, ... இருவருக்குமெத்த வுத்தரஞ்சொல்லவேண்டுமே தெரியவென்னி ற் சிஷனுக்குச்சொல்லு முத்தரம் பிள்ளையண்டாகின்றதற்கு மு ன்னும் பிள்ளையில்லையேயென்று துக்கங் கருட்பவற்பத்தியா னுஞ் சிலிசுருட்டேபோமோவென்று துக்கந் தீரப்பட்டாலும் ... றப்பிழைக்கவேண்டுமென்றுந் துக்கப்பிறந்தபின் கனங்கள் பறவை தோஷம்வரப்போகிறதென்றுந் துக்கங் குமாரனுடைத் தாக்குப்பண்ணுகின்றுவென்றுந் துக்கமுபநயனம் பண்ணி ற்படிக்கின்றுனில்லையென்று துக்கம் புலவரானுல் கேட்பிக்க வேண்டுமென்று துக்கப்பெண்ணினோருக்கு பரகாரகனம்பண்ணு கின்றுவென்றுந் துக்கங் குடும்பவாருவதற் றரித்திரப்படுகிறு னென்றுந் துக்கம் நருட்டியருகு பிருந்துபாராமல் செத்துக் கெட்டுப்போகப்போகிறுவென்றுந் துக்கமிப்படிப் புத்திரா களைப்பகுத்துப் பார்க்கின்ற துக்கமே ரூபமாக விருக்கும்பிரதி வாதிக்குச்சொல்லுவது தர்க்கசங்கையிருவ பேசபரமிண்டுமில்லா மற் கெட்டுப்போவலொங்கின்றதே சாபஞ்சபித்தநிலைற் பிரதிவா திக்காணியேயென்கின்றதேதென்றுல பிரமவித்துக்களிடத்திலே லக்ஷிம்சங்கைபண்ணினுற்சரீர்புகமஇரவரவாதிருரகத்திலேகடப் பாமனென்கின்ற புராணவசனத்தினுற் பிரதிவாதிக்கனைதயம் வரு மென்றுத்தரம். (௯௬)

சித்தாந்தமேதாயிற்றென்கின்ற சங்கைக்கு.

இப்போதுசொன்னபடி பகுத்தறிந்து சாட்சியாகவிருக்கின் றதுதானே சகலத்திலும் பிரிவில்லது வென்றுற்றுமாநந்தத்தி லே யெந்நேரமுங் களித்திருக்கின்றதே முக்கியமென்று மதுவே சித்தாந்தமென்றுமுத்தரம். (௯௭)

நீர்க்கரைத்தருமரவிற்குச் சலனமில்லையைப்போல வானத்தே முகிலுஞ்ச லனமடைவதுபோலு மத்தக்காரணவிருத்தியிலே சித்தமாத்திரந்தோன் றியிராமற்றத்தோற்றுஞ் சிற்பமில்லையென்கின்ற சங்கைக்கு.

உஷ்ணமும் பிரகாசமுஞ் சுபாவமாகவிருக்கின்ற வக்கினியினுடைய வுஷ்ணத்தையும் வெளுப்பும் பிரகாசமுமொன்றாயிருந்து மிந்திரியபேதத்தால் வேறுவேறாய்க் காணுகின்றதுபோலவுந் தாமரைப்பூவிற்குச் சுபாவமாயிருக்கின்ற ரூபரசகந்தங்களெல்லாமொருவிந்திரியத்திலே யோரொரு குணமேயடைந்துவிளங்குகின்றதுபோலவுமத்துமாவினுடைய சச்சிதானந்தங்களோரொரு விருத்தியிலே யோரொருசுபாவந் தோற்றுமென்றுத்தரம். (௰௮)

இந்தவிருத்தியிலே சச்சிதானந்தந் தோற்றமென்கின்ற சங்கைக்குத் திருமலையாகவிருக்கின்ற சாத்துவிகவிருத்தியிலே யாத்துமாவினுடைய சித்து மானந்தமுந்தோற்றும் பலினமாகிய ராசதவிருத்தியிலே யானந்தந் தோன்றாதென்றுத்தரம். (௰௯)

இப்படிக்கொத்த வானந்தமாநந்த முத்தினை வசியாயத்திலே சொல்லவேயோகமென்றுபிரிவேயு மிந்தவத்தியாயத்திலே சொன்ன விதத்தினாலுஞ் சாதிக்கப்படுமென்றுத்தரம். (௨௰)

இந்தப் பிரமானந்தமேதென்கின்ற சங்கைக்கு.

யோகத்தினாலே யாதொரு பிரமானந்தமடையப்படுகிறதோ அந்தவித்தையினாலேயானந்தமாக வெளிப்படுத்துப் பிரயோஜனஞ் சாங்கியத்தினாலடையப்படுகின்ற பதம் யோகத்தினாலுமடையப்படுமென்கின்ற விதமேயப் பிரமானந்தமென்றுத்தரம். (௨௧)

சாங்கியமென்றும் யோகமென்றும் மிரண்டுவிதமாகப்பகுத்துச் சொல்லுவதேன் விரண்டும்பெறுக்கும் பலன் சரியாகவருவானேனென்கின்ற சங்கைக்கு.

ஒருவருக்குச் சாதனமெளிதாயிருக்கும் ஒருவருக்கு ஞானநிச்சயமெளிதாயிருக்குமென்பதற்காகவே கிருஷ்ணனுமிருவகைப்படச்சொன்னார் பகவானென்கின்ற விருவருக்குஞ் சின்மாத்திரமாகவிருக்கின்ற ரூபமொன்றாகவோம்பேதமில்லாமையும் விஷயத்தை வர்ச்சிக்கையும் பிரதிபோதியாக விருக்கின்றதேகாந்தகாரிலே பத்திபாசத்தவிர்க்கின்றதுஞ் சரியானபடியினால் மோட்சஞ் சரியாகவருமென்றுத்தரம். (௨௨)

அவிதமென்பதுதோற்றுகை யாற்றுவிதமெப்படி யுத்தியிலே யிடப்படுமென்கின்ற சங்கைக்கு.

பத்திக்கேற்றதுவிதமேயில்லையென்றுபோகும்படிக்கு அத்துவிதத்தத்துவமென்கின்ற பர்த்தியாகத்திலே வெளிப்படுத்துகிறதேயன்றுத்தரம். (௨௩)

எக்கிரமமுமில்லாத வாத்துமாநந்தத்தை அநுசந்தானம்பண்ணிக்கொண்டு பிரபஞ்சத்தைப்பாராம லிருப்பவன் காரியத்தினால் யோகியாயாலொழிந்தாக மோட்சங்கிடைக்குமென்று மதி நாமுகனுக் கநுக்கிரம்பண்ணினேரும்.

ஆத்துமாநந்தமுற்றிற்று.

பதின்மூன்றாவது

அத்துவிதாநந்த தீபிகை.

முன்சொன்ன யோகாநந்தந்தானே ஆத்துமாநந்தமாகட்டுந் துவிதந்தானே கூடியிருப்பவனுக்குப் பிரமத்துவமெப்படிச் சித்திக்குமென்கின்றசங்கைக்கு.

ஆகாசமுதல் தன்சரீரபரியந்தமுள்ள சகல செகத்தெல்லாந் தனக்குபாதான காரணமாக விருக்குமாநந்தத்திலுந் தோன்றி யாநந்தத்திலிருந் தாநந்தத்திலயமாகின்றபடியினாலே மண்ணைத் தவிரக் குடமில்லையென்றாற்போல ஆநந்தத்தைத்தவிர வேறொன்றில்லையென்று வேதஞ்சொன்னபடியினா லத்துவிதப்பிரமங் கூடுமென்றுத்தரம். (க)

குயவனாலுண்டாக்கப்பட்ட கடங்குயவனாலுடைந்ததென்றாற்போலச் செகத்துக்குப்பிரமம் நிமித்தகாரணமாகட்டுமென்கின்ற சங்கைக்கு.

மண்ணைவிட்டுக் கடங்காணாததுபோலப் பிரமத்தைவிட்டுச் செகமிராதபடியினால் நிமித்தகாரணமென்னக் கூடாதென்றுத்தரம். (உ)

காரணத்தினின்று செகத்துண்டானது ஆரம்பமாகவோ பரிணாமமாகவோ விவர்த்தமாகவோ வென்கின்றசங்கைக்கு.

பிதாவும் புத்திரனும் வேறுபட்டிருக்கின்றாற்போலக் காரணத்தைவிட்டுக் காரியம் வேறுபட்டிருக்கக் காணாதபடியினால் நிரங்கிசவஸ்துவிலே யாரம்பபட்சங் கூடாது பால் தயிரானாற்போலக் காரணந் தன்னுருக்கெட்டு வேற்றுருவானாற்போலப் பரிணாம பட்சங்கூடாது பழுதைதானே பாம்பாகத்தோற்றுவதுபோல விளங்குந் தன்னுருக்கெடாது வேற்றுருவானதுபோல விவர்த்தபட்சமே சித்தாந்தமென்றுத்தரம். (ங)

நிரங்கிசவஸ்துவிலே விவர்த்தந் தோன்றக்கூடாதென்கின்ற சங்கைக்கு.

நிரங்கிசமாகவிருக்கின்ற வாகாயத்திலே நீலாதிகளைக் கற்பிக்கின்றாற்போல நிரங்கிசமாகவிருக்கின்ற பிரமத்தினிடத்திலே

செகத்துவிவர்த்த மென்பது கூடுமென்றுத்தரம். (௪)

அசங்கமாகவிருக்கின்ற பிரபஞ்சகத்தை யெப்படிச் சிருஷ்டிக்குமென்கின்றசங்கைக்கு.

இந்திரசாலக்காரனிடத்தி லிருக்கின்றமாயை யிந்திரசாலத்தைக்கற்பிப்பதுபோலப் பிரமத்திலேயொருமாயாசத்தி யுண்டு அதுவே செகத்தைக்கற்பிக்கிறது பிரமமல்லவென்றுத்தரம். (௫)

மாயாசத்தியுண்டென்றபோதே யத்துவிதங்கெட்ட தென்கின்றசங்கைக்கு.

அர்த்தசத்தியும் பிரமத்தைத்தவிர வேறல்லவாகையாலத்துவிதத்திற்கானியில்லை யென்றுத்தரம். (௬)

இப்படியானாலந்தச்சத்தியுமில்லை யென்கின்றசங்கைக்கு.

காரியங்கண்டபடியினாற் சத்தியுண்டென்றுத்தரம். (௭)

இந்தச்சங்கை பார்த்தபேருக்கு மாசியமாகவிருக்குமிதற்குப்பிரத்தியட்சமுண்டோ வென்கின்றசங்கைக்கு.

அக்கினியிடத்திலிருந்த தன் சத்தியக்கினிதானாகவுமணிமந்திரவவுஷதங்களினாலக்கினிக்கற்றியமாகவுங் காணப்படுவதே பிரத்தியட்சமென்றுத்தரம். (௮)

இப்படிப்பிரமமுமல்ல பிரமத்தைத்தவிரவுமல்லவென்று மாயாசத்தியுண்டென்பதற்குப்பிரமாணமென்னென்கின்றசங்கைக்கு

பிரமத்திற்கனந்த சத்தியுண்டென்கின்றவேதமும் வாசிட்டமும் பிரமாணமென்றுத்தரம். (௯)

வாசிட்டத்திலப்படிச் சொல்லியிருக்கிறதென்கின்ற சங்கைக்கு.

வாரீரகுநாதனே பிரமத்தினிடத்திலேயநந்தசத்தி யுண்டந்தச்சத்தியிலே பிரமந்தானே பிரபஞ்சமாகத் தோற்றுகிறது சரீரங்களிலே சித்சத்தியுமாகாயத்திலே நிரவகாசசத்தியும் வாயுவிலே சலனசத்தியு மக்கினியிலே யூஷ்டணசத்தியுமப்புவிலே சீதசத்தியுங் கல்லிலே கடினசத்தியு மிவைமுதலானவநந்தசத்தியும்பிரமத்திலிடத்திற் காரியத்தினாற்காண்பிக்கிறதென்றுஞ் சிருட்டிக்கும்முன்னிந்தச் சத்திமுட்டையினிடத்திலே பாம்பிருக்கின்றதுபோலவும் விதையில் மரமிருப்பதுபோலவுங் காணப்படாமற்பிரமத்தினிடத்திலே யிருந்ததென்று தேசகாலவிசித்திரத்தினாற் பூமியிலே பயிர்கள்முளைப்பனபோலப் பிரமத்திற்சத்தியுமோரொருசாமர்த்திய சகாயமாகக் கூடினவுடனே விகாரமாயிருக்கின்ற கடவடிவையடைந்து தனக்காதாரமாகவிருந்தமண்ணுக்குமண்ணென்கின்றபெயர் மாத்திரமேயென்பிக்கின்றதனாற் சத்தியில்லையென்னக்கூடாதென்றுத்தரம். (௰)

மண்ணிற்சத்திகாரியமாவதற்குக்குலாலனவேண்டினாற்போல

பிரமத்திற்சத்தி செகத்தாவதற்கு நிமித்தகாரணமாமென்கின்ற சங்கைக்கு.

கடசத்தியுடைத்தானமண் கடமானபடியினாற் சைதந்நியமா யிருக்குங் குலாலன்வேண்டினாற்போலமாயாசத்தியுடைத்தான பிரமஞ்சயஞ்சைதந்நியமானபடியினால்வேறேநிமித்தகாரணந் தேவையில்லையென்றுத்தரம். (௰௧)

மண்ணேசத்தியென்றுந் தன்விகாரங்கடமென்றும் லோகத்தி லேயொருவருஞ் சொல்லக்காணோமெல்லாருங் கூட்டிக்க டமென்றே சொல்லுகின்றார்களிதிலேகாரணமேதென்கின்ற சங் கைக்கு.

விசாரியாதவஞ்ஞானமே காரணமென்றுத்தரம். (௰௨)

விசாரமாவதேதுவிசாரித்தவனெதைக்கடமென்பனென்கின் றசங்கைக்கு.

குலாலன்வியாபாரத்திற்குமுன் மண்ணென்கிறபெயரோவழங்கு கின்றபடியினாற் கடசத்திக்குமண்ணைத்தவிரவிலக்குலாலன்வியாபா ரத்திற்குப் பின் கடமென்றுவிளங்கினபொழுதுமண்ணைத் தவி ரவில்லாதபடியினாற் கடசத்திக்கர்த்த மண்ணைத்தவிரவுமில்லையெ ன்றுபார்க்கின்றதேவிசாரமப்படி விசாரித்தவன் கடமுங்கடத்து க்காதாரமாயிருக்கின்றமண்ணை விடாமலிருந்தபடியினால் வி காரங்கூடமண்ணை விட்டுப்பார்த்தாலவர்க்குமாத்திரமே யல்லா மலிரண்டுகாலத்திலு மொருபடித்தாயிருக்கின்ற மண்போலப் பொருளாகாதென்றுத்தரம். (௰௩)

விகாரமென்றுங் கடமென்றுஞ் சொல்லப்பட்ட பொருளே பொய்யானால் மண்ணென்றறிந்தவுடனே யேன்காணாமற் போக வில்லையென்கின்றசங்கைக்கு.

விகாரம்பொருளுமல்லவுண்மையுமல்லவென்று காணப்பட்ட தேதோற்றமற் போனமதென்றுத்தரம். (௰௪)

காரியம்பொய்யென்றறிந்துகொண்டுபிரயோசனமேதுகாணா மற்போகவேண்டாவோவென்கின்றசங்கைக்கு.

புருஷனிழல்தன்னிருக்குள்ளே தலைகீழாய்த் தோற்றினாலும் நிழல்பார்த்தவனந்த வஸ்துமுகரூபம்பொய்யென்றறிவது போ லக்காரியந்தோற்றினாலும் பொய்யென்றறிந்ததேயில்லை யென் றபோனது காணாமற்போனதல்ல வத்துவிதவாதிகளுக்கிப்படி க்கொத்தவறிவுதானேபுருடார்த்தமென்றறிவார்களென்றுத்தரம்

இந்தத்திட்டாந்தப்படிக்குச் செகத்தையும் பொய்யென் றா ணிப்பார்த்துக்கொள்ளச்சொல்லியெங்கேசொல்லுகிற தென்கின் றசங்கைக்கு.

மண் பொன் இரும்பென்கின்ற மூன்று திட்டாந்தத்திலே காரியமல்லாமற் பொய்யென்று பகுத்தறிவது சாமவேதத்திலே சொல்லியிருக்கிறதென்றுத்தரம். (௰௬)

கடம்பூஷணாதிகளென்றும் பரிணாமிச்சது விவர்த்தத்திற்கெப்படித் திட்டாந்தமாமென்கின்றசங்கைக்கு.

பால்தயிரானதுபோலப் பரிணாமப்பட்டுப் போகாமல் மண்ணாலானவற்றின் வியவகாரமழிந்துபோனாற்காரணரூபமிருக்கையினால் விவர்த்தத்திற்குத் திட்டாந்தமாய்ச் சொல்லலாமென்றுத்தரம். (௰௭)

இப்படிக்குச்செகத்தையேதாகப்பார்க்க வேண்டுமென்கின்றசங்கைக்கு.

காரியமெல்லாங்காரண ரூபமாகவே காணவேண்டு மென்றுத்தரம். (௰௮)

சத்தியத்தையறிகின்றவிடத்திலே யசத்தியமென்றறிகின்ற வறிவெப்படி வருமென்கின்றசங்கைக்கு.

மண்ணென்றறிகின்ற விடத்திலேவிகாரம் அசத்திய மென்றறிவதுபோலவென்றுத்தரம். (௰௯)

மண்ணென்றெதுக்காக வறியவேண்டும் விகாரத்தையேன் மறக்கவேண்டுமென்கின்றசங்கைக்கு.

சத்தியவசனமானபடியினாலந்தச்சுருதியின் காரிய மென்றறியென்றுத்தரம். (௨௰)

அவ்வளவைத்தைச்சத்தியென்று சொல்லவேண்டுமேயல்லாமற்கடமென்று நிருவகிப்பதெப்படி யென்கின்ற சங்கைக்கு.

இந்திரசாலக்காரனிடத்தில் சத்திகாண்பியாதபோது மாயையென்றுங் காண்பித்தபோது கந்தருவசேனையென்றுஞ் சொல்வதுபோலமண்ணிற் சத்திகாரியமாய்க் காண்பியாதபோது சத்தியென்றுங் காண்பித்தபோது கடதோற்றமென்றுஞ்சொல்லப்படுமென்றுத்தரம். (௨௧)

இந்தயுத்திக்குப்பிரமாண முண்டோவென்கின்றசங்கைக்கு.

இப்படிமண்மெய்யாக விருப்பதெல்லாம் வாக்கினாற் சொல்வதுமாத்திரமேயல்லாமல் அர்த்தமில்லையென்றும் விகாரமாகவிருக்கின்ற மண்மாத்திரமே பொருளென்றும் வேதஞ் சொல்லுகிறதென்றுத்தரம். (௨௨)

ஒருகாலத்திலேசத்தியென்று மொருகாலத்திலே காரியமென்றுங்காண்பிக்கின்ற கடஞ்சத்தியமென் றங்கீகரியாவிட்டால் விகாரமெப்படிக் கூடுமென்கின்றசங்கைக்கு.

உள்ளதையுள்ளபடி பார்க்கின்றது புருஷார்த்தமில்லாததையுண்டென்றுபார்க்கின்றதே யநர்த்தமென்றுத்தரம். (௨௩)

ஆனால்சகல பிரவஞ்சத்தையுஞ் சோதித்துப்பார்க்க வேண்டுமென்கின்றசங்கைக்கு.

ஒருகடத்தை மண்ணென்றறிந்தாற்கொண்டுலோகத்திலேயுண்டான பாண்டமெல்லாமண்ணென்று வகுப்பதுபோல ஒருவிடயத்தையூன்றிப்பார்த்துப் பிரமமென்றறிந்தாற்சகல பிரவஞ்சமும்பிரமமென்று வகுப்பதாமென்றுத்தரம். (௨௪)

பிரமத்திற்கிலட்சணமேது செகத்திற்கிலட்சணமேதென்கின்றசங்கைக்கு.

சத்துச்சித்தானந்தமூன்றும் பிரமலட்சணம் நாமரூபமிரண்டுஞ்செகத்திலட்சணமென்றுத்தரம். (௨௫)

கடத்திஷ்டாந்தத்தைப்போல இவ்விடத்திலும் சத்தி யின்னது சத்திக்காதாரமின்னது சத்தியின்காரியமான விகாரமின்னதென்கின்றதைப்பகுத்துக்காட்டுமென்கின்றசங்கைக்கு.

இன்னபடியென்று நிருணயிக்கப்படாத மாயைதானே சத்தி பிரமந்தானே சத்திக்காதாரம் நிருவிகாரமாக விருக்கின்றபிரமத்திவிடத்திலே கற்பிக்கப்பட்ட நாமரூபந்தானே சத்தியின்காரியமான விகாரமென்றுத்தரம். (௨௬)

இந்தமாயையெந்த வடைவிலே விகாரத்தையடைந்ததென்கின்றசங்கைக்கு.

சிருட்டிக்குமுன்னின்னதென்று காணப்படாமல் அவ்வியாகிருதமாக விருந்தமாயை முந்தமுந்தாகாசமென்கின்ற விகாரத்தையடைந்ததென்றுத்தரம். (௨௭)

கடவிகாரத்திற்குமண்ணேசுரூபமாககாணப்பட்டாற்போலே ஆகாசமாகிற விகாரத்திற்கும் பிரமமே சுரூப மென்கின்றதைப்பகுத்துக்காட்டவேண்டுமென்கின்ற சங்கைக்கு.

அஸ்திபாதி பிரியத்தைத்தவிர அவகாசமென்கின்ற ரூபத்திற்குநாமரூபத்துக்குஞ் சுரூபமில்லாதபடியினாலும் நாம ரூபம்சிருஷ்டியிலே யுண்டாய்ப் பிரளயத்திலழிந்துகொண்டு இந்தவிரண்டுமித்தையென்று மண்போலச்சச்சிதானந்த மெப்போதும் நிலைபெற்றிருக்கையினாலும் பிரமம்சத்தியமென்றுபகுத்தறியவென்றுத்தரம். (௨௮)

ஆகாசத்திற்றம் பிந்தினவிகாரங்களேது அதிலேசச்சிதானந்தத்தைக்காண்பதெப்படி யென்கின்றசங்கைக்கு.

வாய்வு அக்கினி அப்பு பிருதிவு ஓஷதை அன்னம்புருஷன் மிருகாதிகளெல்லாம் விகாரமென்பது இப்படிவெகுவிதமாயிருக்கப்பட்ட நாமரூபங்களெல்லாம் சச்சிதானந்தத்தைவிட்டுக்காணாதபடியினாலித்தனையுஞ் சச்சிதானந்த மென்பதிலேசந்தேகமில்லையென்றுத்தரம். (௨௯)

சச்சிதாநந்தத்தைவிடாம லிருக்கின்றதினால்நாமரூபம் நித்தியமாகட்டுமேயென்கின்றசங்கைக்கு.

உற்றுப்பார்க்காவில்லாத நாமரூபஞ்சத்தியமாகவிராமற் பிரமத்திலே தோற்றியழிவனவற்றை விவேகம்பண்ணி யனுபவிக்கவேண்டுமென்றுத்தரம். (௬௰)

எப்படிவிவேகம் பண்ணுவதென்கின்றசங்கைக்கு.

அலைநுரை சமுத்திரத்திலுண்டாய்ச் சமுத்திரத்தி லயிப்பது போலவென்றுத்தரம். (௬௧)

இப்படிப்பார்த்தாலு நாமரூபமேமுன்னிற்கின்றன அவற்றை ப்போக்குதற் குபாயமேதென்கின்றசங்கைக்கு.

பழுதையிற் பாம்புபோலநாமரூபத்தையுற்றுவிசாரணைபண்ணினால் பார்க்குமிடமெல்லாம் சச்சிதாநந்த மாகப் பார்த்து இந்தப்படி நெடுங்காலம் நிரந்தர மப்பியாசிக்கின்றபோதுநாமரூபமில்லையென்று காணுமப்போ யத்துவிதநிலைநிட்டைப்பட்டசீவன்முத்தனுவானென்றுத்தரம். (௬௨)

நாமரூபம்பொய்யென்று முறைப்படுதெப்படியென்கின்ற சங்கைக்கு.

நாமரூபத்தைக்கண்டவுடனே மன்னிற்கடமுதலா யனேகம் சிருட்டிக்காற்போலவு நித்திராசத்தி கூடாத சொற்பனங்களை க்காண்பித்தாற்போலவும் பிரமத்தினிடத்தில் இத்தனையையுமாயைகற்பித்ததென்று எந்நேரமும்பார்த்து அஞ்சயப்பட்டாலிந்த நாமரூபம்பொய்யென்று தள்ளப்படுமென்றுத்தரம். (௬௩)

நித்திராசத்தி கூடாதசொற்பனத்தையெப்படிச் சிருட்டிக்கு மென்கின்றசங்கைக்கு.

சொற்பனத்திலே தானுகாசத்திலே பறக்கவுந்தன்தலையை வெட்டித்தான்கையில் தூக்கிப்போகவு மொருநாழிகைக்குள்ளேயனேகவருஷஞ் சென்றுபோகவும் செத்துப் போன புத்திரர்கள் திரும்பவந்திருக்கவுமிப்படிக்காண்கின்ற தெல்லாங்கூடாதகாரியமல்லவோவென்றுத்தரம். (௬௪)

இப்படியானுற் பிரமவிசாரத்துக்கேதாயிற்றென்கின்றசங்கைக்கு.

நித்திராசத்திக்கே யித்தனைவல்லமையுண்டானால்மகாமாயாசத்திதானது நிருவிகாரமாவிருக்கும் பிரமத்தினிடத்திலேசெடசித்தாபாசாளெல்லாம் விகாரத்தைககற்பிப்பது அதிசெயமல்லவென்றுத்தரம். (௬௫)

இந்தவிகாரமும்பிரமமுங்கலந்து தோற்றமிடத்தில் ஒன்றுசத்தியமும் ஒன்றுமித்தையுமாகப் பார்ப்பதெப்படி யென்னுஞ்சங்கைக்கு.

எங்குஞ்சரியாகவிருக்கும் புடவைசத்தியமென்றுமறிவிசனித்தனியே காண்பித்தசித்திரங்கள் மித்தையென்றுமறிவதுபோல, வெங்குஞ்சரியாகத்தோற்றுஞ்சச்சிதாநந்தஞ்சத்தியமென்றும் இதில் தனித்தனியே தோற்றும் நாமரூபமித்தையென்றுங் கண்டுபேட்சிக்கவேண்டுமென்றுத்தரம். (௯௬)

தொழிலுடன்பட்டவனே தானாகத்தோற்றுகையால் தன்னையசங்கனென்னறிவதெப்படி யென்றுஞ்சங்கைக்கு.

கிணற்றிலேதன்ரூபந்தலைகீழாய்த்தோற்றினும் தன்னைத்தானல்லவென்று தள்ளிக்காமலிருக்கின்றதன்னைத்தானென்று சந்தேகமறக்கண்டிருப்பதுபோல மூன்றவத்தையிலுங் கர்த்தாவாயோடித்திரியுந் தன்னைத்தலானலவென்றுபேட்சித்து இதற்குச்சாட்சியாயிருக்குஞ்சித்தைத்தானென்று சந்தேகமறக்கண்டிருக்கவேண்டுமென்றுத்தரம். (௯௭)

மனதிலேலயவசியமாக மூண்டிருக்கும்பிரபஞ்சகாரியத்தையுபேட்சைபண்ணுவதெப்படியென்னுஞ்சங்கைக்கு.

க்ஷணத்திற்கொருகால வெவ்வேறாய் வருகின்ற மனோராச்சியத்தைச்சகலருமப்படிலேயுபேட்சிப்பதுபோலவும் வாலிபத்திலே யௌவனம்வேண்டுமென்றுவாராமலும்யௌவனத்தில் வாத்திகம்வேண்டுமென்றும் வராமலும்நேற்றுச்செத்தபிள்ளையையின்றைக்குவேண்டுமென்றுவாராமலும்நேற்றைத்தினம் இன்றைக்கும்வேண்டுமென்றும் வாராமலு மனோராச்சியம்போலவங்ஙன்ங் கண்டதங்ஙனமழிந்து போகின்றதுபோலநாமரூபந்தோற்றினும் பொய்யென்று பேட்சிக்க வேண்டுமென்றுத்தரம். (௯௮)

இப்படிச்சருவாற்றுமனுய்ப்பிரபஞ்சத்தையுபேட்சிக்கச்சொன்னால்சரீரநிருவாகமெப்படி நடக்குமென்கின்றசங்கைக்கு.

கூத்தாடிபோலவாசனைதானேநிருபவிக்குமென்றுத்தரம். ௯௯

ஒருகாலத்திற் பாலனென்று மொருகாலத்தில் விருத்தனென்றும்வழங்கின சரீரமேதானாககாண்கையால் தானேகரீதியாயிருக்கும் பருங்கலசையாத்து போலநாமரூபங்கள்வேறு வேறாகத்தோற்றினும் சைதந்நியமொன் றெப்படி யென்று திடப்படுமென்கின்றசங்கைக்கு.

வேறுவேறாய்ச்சிலையில் பிரதமைதோற்றினும் நடுவிலிருக்கும்பாருங்கலசையாதுபோல நாமரூபங்கள்வேறு வேறாகத்தோற்றினும் மேகரீதியாயிருக்கின்ற சின்மாத்திரமேநாமென்றறியவேண்டுமென்றுத்தரம். (௱)

இத்தப்பார்வனை முதிர்ந்தநிலையெப்படி யிருக்குமென்கின்றசங்கைக்கு.

கண்ணாடியிற் றோன்றின பட்டணத்தைப் போலவும் சச்சிதானந்தத்திலே செகத்துக்காணப்படுகிறதென் றுத்தரம். (௪௧)

நாமரூபமல்லவோ மூர்த்தித்தோற்றமல்லது அதனையு பேட்சிப்பதெப்படியென்னி னென்றசங்கைக்கு.

கண்ணாடியைக்காணுமற் பிரதிவிம்பந்தோன்றுதுபோலச் சச்சிதானந்தங்காணுமற் பிரதிவிம்பந்தோன்றுதாகையால் மூர்த்தித் தோற்றுஞ்சச்சிதானந்தத்தைப்பார்த்துமேல் நாமரூபத்திலே புத்திபடாமல் நிறுத்தினால் நாமரூபந்தடைப்பட்டு அத்துவிதமாக அத்துவிதப்பிரமநிலைதானாகையுஞ் சுயித்தநிலையில்லதானே நிஷ்டியைப்பாரக்கடவய், (௪௨)

பதின்மூன்றாவது-அத்துவிதாநந்தமுற்றும்.

பதினாலாவது.

வித்தியாநந்ததீபிகை.

யோகாநந்தத்தினாலு மாத்மாநந்தவிவேகத்தினாலுந் துவிதத்தை யித்தையென்று சிந்தனைசெய்து பிர்மாநந்தங் கண்டவனுடைய வித்தியாநந்தத்தை நிருபிக்கிறேன் வித்தையாநந்த மாவனென்று அது எத்தனைவிதமாகவிருக்குமென்னுஞ் சங்கைக்கு.

விடயாநந்தம்போல வித்தியாநந்தமு மநந்தக்கரணவிருத்திரூபமாகவிருக்கும் அது துக்காதியர்த்தியென்றுங் காமியலாபமென்று ங்கிருதகிருத்தியத்துவமென்று படையவேண்டியதெல்லா மடைந்தசந்தோஷமென்றும் நான்குவிதமாகவிருக்குமென்றுத்தரம்.

துக்கமெத்தனைவிதமவைஞானத்தினாலெப்படிப்போயினவென்னுஞ் சங்கைக்கு.

இகலோகதுக்கமென்றும்பரலோகதுக்கமென்று மிரண்டுவிதமாகவிருக்கும் ஆத்துமாவைநானென்றறிந்தாற் பொசிப்பவனில்லாமற்போனபடியினாலே நாமரூபம் பொய்யென்றறிந்தாற் போக்கியமில்லாதபடியாலும் போகபோக்கியங்களைக் குறித்து வரும் இகலோகதுக்கம்போயிற்று கமலபத்திரோதகம்போல ஞானியை யாகாமியம்பற்றாதபடியினாலும் அக்கினியிற் பஞ்சுபோலச் சஞ்சிதகன்மம்வெந்துபோனபடியினாலும் புண்ணியபா வமிசிர்த்தமையாகவரும்பரலோகத்துக்கம்போயிற்றென் றுத்தரம்.

காமியமெத்தனைவிதம் அவைஞானத்தினாலெப்படியடையப்படுமென்னுஞ் சங்கைக்கு.

காமியப்பதினொருவிதம் அவையெங்ஙனமென்னில்சவுந்திரிய

யௌவனமுடையவனும் ஆரோக்கிய திடகாத்திரனும் பஞ்சாய
கோடி பூமண்டலமுழுமையுமேகசக்கிரனாகவாண்டுபோசிக்கின்றமகாரா
மனுஷானந்தம் இந்தக்கற்பத்திற்புண்ணியபலத்தினாற்கந்தருவ
பதத்தையடைந்த மனுஷ்யகந்தருவன் ஆநந்த மனுஷானந்த
த்திலும் நூறத்தனையதிகம் கெந்தருவானந்தமிதிலும் நூறத்தனை
யதிகம்பூர்வகற்பத்திற் புண்ணியத்தினாற் கெந்தருவ பதத்தைய
டைந்த தேவ கெந்தருவனானந்தத்திலும் நூறத்தனையதிக
ம் பிதிர்லோகத்தையடைந்த பிதிர்களாநந்தமிதிலும் நூறுகொண்
டதாகக்கர்பாதியிலே தேவனாகப்பிறந்த தேவானந்தம் இதினிலு நூற
த்தனையதிக மந்தக்கற்பத்தில் அசுவமேதாதிகள் பண்ணியுன்னி
தபத்தை யடைந்தவன் கர்மதேவனிதிலும் நூறத்தனையதிக
தேவானந்தமிதினிலும் நூறத்தனையதிகம் இந்திரானந்த மிதிலு
ம் நூறுகொண்டது பிரஜாபதியானந்தமிதிலும் நூறுகொ
ண்டது விராட்புருஷானந்த மிதிலும் நூறுகொண்டது சூத்திரா
த்துமாவானந்தம் ஆக இந்தப்படி வாக்குமனதுக்கெட்டின வா
னந்தம் பதினொன்றுஞ் சொல்லப்பட்டன வாக்கு மனதுக்கெட்
டாத ஆத்மானந்தத்தையடைந்த ஞானிக்கு இராகத்துவேஷாதிக
ளுடனே கூடியிருக்குமிந்தப் பிரேமானந்தத்தையும் நாய்க்க
ண்சோறுபோலதை தோஷங்கண்டு வெறுத்தபடியினாலு மித்
னையுமிந்திரசாலமாய்க் காண்கையினாலு மிதனைப்பராயிருந்து
புசிக்கின்றதும் நாமொருவன்தானேயென்று மநுசந்தானத்தி
னாலும் அவர்களைப்போல சிரமமன்றியிலே ஞானிக்குச்சகல
ப்பாகமு மொருமிக்கவடைந்ததென்றுத்தரம். (௫)

கிருத கிருத்தியமெத்தனை விதம் அவை ஞானம்வந்ததுகொ
ண்டு எப்படிச்செய்து முடிந்ததென்னுஞ் சங்கைக்கு.

இந்தலோகத்தைக்குறித்தும் பரலோகத்தைக்குறித்தும் மோ
ட்சத்தைக்குறித்தும் கிருத கிருத்தியத்துவ மூன்றுவிதமுண்
டென்று மவ்வவையெல்லாம் ஞானிக்குத் தீர்ந்தமுறியாகப்பண்ணி
முடிந்ததென்றுத்தரம். (௬)

அடையவேண்டிய புருஷார்த்தமெது அது ஞானத்தினலே
ப்படியடையப்பட்டதென்னுஞ் சங்கைக்கு.

அடையப்போகின்ற புருஷார்த்தம் பிர்ம்மமென்றும் அது
அபரோட்சஞானத்தினாலு மடைந்து வகுப்பற்றதென்று மிந்த
நாலுவகையும் திருப்திதீபிகையிலே வெளிப்படையாயிருக்கின்றன
வவ்வவையு மிவ்விடத்திற் சுருக்கமாகக்கண்டு கொள்ளென்றுத்தரம்.

இந்தநிலவருமளவும் பிரம்மாப்பியாசம் பண்ணவேண்டி
யது.

பதினான்காவது வித்தியானந்தமுற்றிற்று.

பதினைந்தாவது

விடயாநந்ததீபிகை.

பிரமானந்தத்திலே ஏகதேசமாயப்பிரம்மானந்தத்திற்கு வழியாயிருக்கின்ற விடயாநந்தத்தை நிருபிக்கின்றோம்.

விடயாநந்தமாவதேது அது எத்தனை விதத்திலே காணலாமென்கின்ற சங்கைக்கு.

விருத்தியிற் பிரதி பிம்பித்த வானந்தம் விடயானந்தமதனை மூவகைத்திறத்திற் காணலாமென்றுத்தரம். (க)

எல்லாவிருத்தியிலு மாநந்தமேன் பிரதிபிம்பிக்கவில்லையென்கின்ற சங்கைக்கு.

சலத்திற் பிரதிபிம்பிக்கின்ற சந்திரன் மலினசலத்திற் சாமானியமாகத் தோற்றுவதுபோலவும் நிருமலசலத்தில் நிருமலமாகத் தோற்றுவதுபோலவும் சிலவிருத்திகளிலாநந்தந்தோற்றும் சிலவிருத்திகளிலாநந்தந்தோற்றாதென்றுத்தரம் (உ)

இனி அந்தக்கரணவிருத்தியெத்தனைவித மந்தவிருத்திகளிலிலட்சணமேதென்கின்ற சங்கைக்கு.

சாந்தங்கோரமூடமென்று மந்தக்கரணவிருத்தி திரிவிதமாகவிருக்கும் வைராக்கியம் க்ஷமையுதாரமுதலானவை சாந்தவிருத்தி காமக்குரோதமுதலானவை கோரவிருத்தி மயக்கங் கலக்கப் பயமுதலானவைமூட விருத்தியென்றுத்தரம். (ங)

பிரமமித்த விருத்திகளிலெப்படிப்பிரதிவிம்பிக்குமென்கின்ற சங்கைக்கு.

கோரமூட விருத்தியிரண்டு மலினவிருத்தியான படியினாற் சத்துமாத்திரம் பிரதிவிம்பிக்குஞ் சாந்தவிருத்தி நிருமலமான படியினாற் சித்து மாநந்தமும் பிரதிவிம்பிக்குமென்றுத்தரம்.

பிரமாணமேதென்கின்றசங்கைக்கு.

கோரமூடவிருத்திகளிலாநந்தானுபவங் காண்பிக்கவில்லை சாந்தவிருத்தியிலொரு சுகாதிசயங்காண்பிக்குமதுவே பிரமாணமென்றுத்தரம். (ச)

கோரமூட விருத்திகளில் சுகானுபவமில்லையென்பதெப்படியென்கின்றசங்கைக்கு.

இஷ்டவஸ்த்துக்க ளிச்சையாய் மூண்டகாலத்து இது நமக்குக்கிடைக்குமோ கிடையாதோவென்னுந் துக்கங்கூட வருகையினாலும் கிடையாமற்போனால் துக்கமதிகமாய் வருகையினாலும் தன்காரியத்தைக்கெடுத்தவன்மேரில் வைராக்கியத்தைவள

த்க்கைபிறந்தும் நிக்கிரகிக்கக்கூடாவிட்டா லழுக்கையாய் முடி கையாகும் கோரமூட விருத்தியிலே துக்கமேயல்லாமல் சுக மில்லைசுகமுமில்லையென்றுத்தரம். (௬)

சாந்தவிருத்தியிலே சுகாதிசயமெப்படியென்னுஞ் சங்கைக்கு காமியம் இலபித்தவுடனே சாந்தவிருத்தியிலே சுகம் பரிண மிக்கிறது போகத்திலும் விருத்திசாந்தமானபடியினுற் சுகாதி சயந்தோற்றுகிறது இப்படி விடயங்கிடைத்ததற்குத்தக்கதாக வாநந்தம் பிரதிபிம்பிக்கிறது கோரமூட விருத்தியற்றவனுக் குஞ் சாந்தமுற்றவனுக்கு மகத்தாகவிருக்கின்ற வாநந்தந் தோ ற்றுகிறது ஆகையாற் சாந்தவிருத்தியுள்ள விடமெல்லாம் ஆநந் தந் தோற்றுமென்கிறதிலே சந்தேகந் தேவையில்லையென்றுத் தரம். (௭)

இப்படிப் பிரதிபிம்பிக்கின்ற பிரமத்திற்குச் சுபாவமேதென் னிதமாகவிருக்கும் எந்தவுபாதியிலே யெந்தச்சுபாவங்காண்பிக் குமென்கின்ற சங்கைக்கு.

சச்சிதாநந்தமென்று பிரமத்திற்கு மூன்றுசுபாவமுண்டு மண் கல்லு முதலானசடங்களிலே சத்துமாத்திரந் தோற்றும் கோரமூட விருத்திகளிலே சத்துஞ் சித்துந்தோற்றும் சாந்தவி ருத்தியிலே சச்சிதாநந்தமூன்றுந்தோற்றுமென்றுத்தரம். (௮)

மாயைக்குத் தனிச்சுபாவமுண்டு எந்தச்சுபாவமெதிலே தோ ற்றுமென்கின்ற சங்கைக்கு.

அசத்துச்சடம் துக்கமென்று மாயாசுரூப மூன்றுவிதமாக விருக்கும் அசத்து முயற்கொம்பு மனிதக்கொம்பிலே காண்பிக் கும் மண்கல்முதலாயவைகளிலே சடங்காண்பிக்கும் கோரமூ டவிருத்திகளிலே துக்கங்காண்பிக்கும் சாந்தவிருத்தியிலே சட மும் போதமுமாகவிருக்கின்றபடியினுல் மாயை பிரமத்துட னேகலந்து காண்பிக்குமென்றுத்தரம்.

இப்படித்தோற்றுகின்ற மாயா சுரூபங்களைப் பிரமமாகக் காணவேண்டியதெப்படியென்கின்ற சங்கைக்கு.

அசத்தை முயற்கொம்பு மனிதக்கொம்புபோல உபேட்சித் துச்சடங்களில் நாமரூபத்தைவிட்டுச் சத்துமாத்திரமாகப்பா ர்க்க கோரமூட விருத்திகளில் துக்கத்தைத்தள்ளிச் சத்துஞ் சித் துமாகப் பார்க்கச் சாந்தவிருத்தியைச் சச்சிதாநந்தமாகப்பார் க்க இப்படி விடயாநந்தத்தின்படியே முத்தியும் பிரமாநந்தத் தை யடையலாமென்றுத்தரம். (௯)

மாயாரூபத்தைத் இப்படிப்பகுத்துத் தியானித்துக்கொண்டு பிரமாநந்தமெப்படிக் கிடைக்குமென்கின்ற சங்கைக்கு இந்தத் தியானத்திலும் சித்தமே சாக்ஷிமாவுடனே பிரமவித்தைத தி

டப்படும் பிர்ம்மவித்தையிலே பேதமாயிருக்கின்ற வுபாதிகளெ ல்லாந் தடைபட்டபடியினாலே சச்சிதாநந்த மகண்டாகாரமா கத் தோற்றமென்றுத்தரம். (௰௧)

பேதத்திற் றுபாதிகளேது அந்தவுபாதிகளெதினால் தடைபட்ட து பிர்ம்மநிருபாதியாய்த் தோற்றுவதெதினாலென்கின்ற சங்கை க்கு.

சாந்தகோரமூடவிருத்திமுதலான சடங்களெல்லாம் பேதத் திற்றுப்பாதி யோகத்தினாலும விவேகத்தினாலுமிந்தவுபாதியெல் லாந் தடைபடும் அதற்குமேல் ஜநிபுடியில்லாதபடியினால் நிரு பாதியாய் சுயம்பிரகாசமாகவிருக்கின்ற பிர்ம்மத்துவமகண்டாந ந்தவடிவாய்த் தானாகவேவிளங்குமென்றுத்தரம். (௰௨)

இப்படிப் பிர்ம்மாநந்தத்திற்கு வழிபாடாகத்தானே விடயா நந்தத்தை நிருபிததோமிதுவழியே சகலரும்மோட்சமடையக் கடவர்கள்.

விடயாநந்தம் முற்றிற்று. ஆநந்தபஞ்சகமுற்றும்.

சித்திரதீபிகை. தத்துவவிவேகதீபிகை. யோகாநந்ததீபிகை.
திருத்திதீபிகை. பஞ்சபூதவிவேகதீபிகை. ஆத்துமாநந்ததீபிகை.
கூடஸ்தர்தீபிகை. பஞ்சகோசவிவேகதீபிகை. அத்விதாநந்ததீபி-
தியானதீபிகை. துவைதவிவேகதீபிகை. விடயாநந்ததீபிகை. [கை.
நாடகதீபிகை. மகாவாக்கியவிவேகதீபிகை. வித்தியாநந்ததீபிகை

ஆக பஞ்சதசிக்கு ஆக பிரகரணதீபிகை ௰௫.